13

உ

பரமபதி துணை.

இராமதேவரென்ற

யாகோபு

# சுண்ணக்காண்டம் 60[illegible]



ஜி. இராமசாமிக் கோன்

இ. ராம. குருசாமிக்கோனார் சன்

[illegible]த்தகசாலை புதுமண்டபம் மதுரை.

பதிப்புரிமை. 1954 விலை ரூ 2-8-0

உ

பரமபதி துணை.

யாகோபு திருவாய் மலர்ந்தருளிய

# பெருநூல்

# சுண்ணக் காண்டம்

# 600.

மதுரை வித்துவான்,

த. குப்புசாமி நாயுடு அவர்களால்

பரிசோதித்த பிரதிக் கிணங்க

---

மதுரை, புதுமண்டபம் புத்த

இ. ராம.

குருசாமிக்கோனர்

அவர்களாற்றமது

மதுரை, வடக்குமாசிவீதி, குருசாமிக்கோனர்சா

ஸ்ரீராமச்சந்திர விலாசம் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

காபி ரைட்] 1954 [விலை ரூ. 2—8—0

மூன்றுவது பதிப்பு. காப்பி 750.

உ

பரமபதி துணை.

மகா மகத்துவம் பொருந்திய

இராம தேவரென்ற

யாகோர்பு திருவாய் மலர்ந்தருளிய

# சுண்ணக்காண்டம் 600.

காப்பு.

ஆனந்த மாய்நிறைந்த அல்லாபாதம்
அடுத்துநின்ற நபிமார்கள் பாதம்போற்றி
தானந்த மகமதுவைத் தொழுது போற்றித்
தாட்டிகமாய்ச் சுண்ணமென்ற காண்டந்தன்னை
வானந்த மாகவே அறுநூறாக
வகையாகப் பாடினேன் வண்மையாகக்
கோனந்த மெய்ப்பொருளா மின்னூல் தன்னைக்
குறிப்பாகப் பாடினேன் கூர்ந்துபாரே. (1)

நூல் தொகுப்பு

பாரேநீ வைத்தியமெழு நூறுபாடிப்
பதிவாகச் சுண்ணமுந் நூறு பாடிக்
காரேநீ அதைக்குறுக்கி நூற்றைம்பத் தைந்தும்
கனிவாகப் பாடியே யதைக்குறுக்கி
வாரேநீ ஐந்துபத்து யேழாய்ப் பாடி
வரிசையாய்ப் பதினாறு இடைபாகங்கள்
தாரென்று சொல்லியே அதின்மார்க்கத்தைத்
தாட்டிகமா யாகோபு தன்மைதானே. (2)

தன்மையா யறுநூறிற் சுண்ண மெல்லாம்
தாக்கிடவே கைபாக வரிசையோடு
உண்மையாய்ச் சொல்லிவிட்டே னுற்றுக்கேளு
உறுதிபெறக் கைபாகம் உண்மையாக
வண்மையா றுநூறு ப்பார்த்துத்தேறில்
வரிசையாய்த் தொட்டதெல்லாம் பழுக்கும்பாரு
புண்மையாய்த் திருசதுவின் நீறினாலே
போக்கோடே கோடிவரை ஓடுந்தானே. (3)

ஓடுமே வாதியென்ற பேர்களுக்கு
உறுதி[illegible]மெஞ்ஞானம் வரவேவேணும்
பாடுமே ஆகா[illegible]ர மறியவேணும்
பதிவான காயமதை நிறுத்தவேணும்
வாடுமே அல்லாவைத் துதிக்கவேணும்
வண்ணமாய் வாதமென்ற பருவத்தைத்தான்
காடுமே தூளிக்கா வருமம்வேணும்
கண்டுகொள்ளு கைமுறையின் காதலாமே. (4)

காதலா யிதுவெல்லா மறியாவிட்டால்
கனமான வாதமெல்லாம் பொய்யாப்போகும்
ஆதலால் வாதத்தை நிறுத்தவென்றால்
அணுப்போலே சவுக்காரஞ் செய்யுமார்க்கம்
ஊதலா யதையறிய வேணும்பாரு
உற்றுணர்ந்து உப்பைநன்றாய்க் கட்டிப்பாரு
நீதமாய்ப் பூரத்தை உப்புப் பண்ணு
நிலையாகத் தாளகத்தைச் சுண்ணம்பண்ணே. (5)

சுண்ணமாந் தாளகத்தை நீறுபண்ணு
சுருதிபெற வங்கத்தைச் சுண்ணம்பண்ணு
நன்மையாய் வேதைக்குச் துருசுதன்னை
நாடியே குருபண்ணு நாடித்தேர்ந்து
வண்ணமாம் வாதமெல்லாங் கைக்குள்ளாகும்
வகையாகுஞ் சுண்ணமென்ற போக்குத்தானும்
இன்னிலத்தில் ரசவாதமெல்லாமாகும்
இயல்பான யாகோபு யிதஞ்சொன்னாரே. (6)

இதமாகச் சவுக்காரக் குருவைச்சொல்வேன்
என்னாலே யறிந்தமட்டு மின்பமாக
அதமாக உலத்தோர் வாதிதானும்
அன்பாகச் சவுக்கார மில்லையென்று
பதமாகப் பேச்சுகள்தான் பேசித்தேர்ந்து
பாகாய் மூலிகையா லாகுதென்பார்
விதமாக யிப்படிக்குப் பேசிப்பேசி
விருதாவாய்ச் சுட்டுமே அலைவார்தானே. (7)

அலையாமற் சவுக்காரக் குருவைப்பண்ணி
அறைகிறேன் அல்லாவுக் கொப்பாய்த்தானும்
விலையாக யெண்ணெய்யதைக் கழற்றமாட்டார்
விருதாவாய்ச் சொல்லிவிட்டுப் புலம்புவார்கள்
கலையான மான்போலே துள்ளிவீழ்வார்
கருத்தறியா வாதியவர் காணமாட்டார்
உலையில்வைத்து ஊதிடவே சவுக்காரத்தை
உண்மையா யுறுகியே போகுந்தானே. (8)

போகுமே நீருமற் றிரண்டுபோகும்
போக்கோடே யெடுத்தெரிந்து யில்லையென்பார்
வாகுபெறச் சவுரியங்கள் சொல்வார்வாதி
வகையறிய மாட்டாமற் புலம்புவார்கள்
நாகுமே யிப்படிக்குப் புலம்பச்செய்து
நலமாகப் பேசியே யில்லையென்பார்
பாகுமே பூனீரி லெல்லாமாச்சு
பருவம்வந்த பழச்சாற்றை யறியார்தானே. (9)

தானென்ற சவுக்காரச் சுண்ணந்தன்னை
சாற்றரிது சாற்றுகிறேன் தன்மையாக
வானென்ற சித்திரை வைகாசிமாதம்
வகையாகப் பூத்துமே நிற்கும்பாரு
கோனென்ற சித்திரையா மாதந்தன்னில்
குறிப்பான பூநீரு யெடுக்கலாகா
கானென்ற பங்குனியிற் பூத்தபூவை
கருணைபெற யெடுத்திடவே கணக்குக்காணே. (10)

சவுக்காரஞ் செய்ய.

காணப்பா பூனீரு யெடுக்குமாதம்
கருணைபெறப் பங்குனியி லெடுத்துக்கேளு
வாணப்பா படிநாலு அழந்துவிட்டு
வடிவான கற்சுண்ணம் படிதான்போடு
தானப்பா கல்லுப்புப் படிதான்போடு
தகைமையா யின்னுமொரு தன்மைகேளு
பாணப்பா யேழுநூற்றி லமுரிதன்னைப்
பக்குவமாய் முறிக்கவே சொன்னேனப்பாரே. (11)

சொன்னதொரு அமுரிபடி யெட்டுத்தானும்
சுருதியாய்ப் போட்டுமே திரிநாள்வைத்து
நன்னயமாய் நாலாநாள் தெளிவைவாங்கி
நலமாக அடுப்பில்வைத்து யெரிநேர்பாகம்
கன்னல்போற் குளம்பாக வருதல்கண்டு
கணக்காகப் படியரை நல் லெண்ணெய்விட்டு
முன்னமே சொல்லிவிட்டாப் போலேவாரு
முக்கியமாய்த் திட்டமாய் வார்த்திடாயே. (12)

வார்த்திட்டுத் திரளவே காய்ச்சி நீயும்
வடிவாகப் பக்குவமா யானபின்பு
ஏத்திட்டுப் பருவமுடன் சாம்பல்தன்னை
இதமாக அடிதனிலே சாணுநீளம்
காத்திட்டுப் பரப்பியே அதின்மேற்கேளு
கனிவாக யிரண்டுமே சீலையிட்டு
பாத்தியிட்டு அகைப்பையினாற் குளம்புதன்னைப்
பதியவே யெடுத்தூத்திப் பின்புகேளே. (13)

பின்புதான் அகப்பையினால் மொண்டுஊத்தப்
பிசகாமல் பூனீரி லிருக்கும் நீரை
அன்பாக உண்டுவிடும் மேலேதானும்
அடைவாக முன்போலே துணிபரப்பி

தெண்பாகச் சாம்பலைத்தான் மேலேகட்டித்
திறமாகப் பார்க்கமேல் நீரைத்தானும்
வன்பாக உண்டுவிடு மெல்லத்தானும்
வழுவில்லா மேற்றுணியை நீக்கிப்பாரே. (14)

நீக்கியே பூனீரி விருந்த நீரை
நிலையாகச் சாம்பலது குடித்துப்போடும்
பாக்கியமா யெடுத்துமே உண்டைபண்ணிப்
பதிவாக விளாங்காய்போ லுண்டைசெய்து
நோக்கியே கதிரில்வைத்துத் திரிநாளாறு
நிலையாக வைத்துமே யெடுத்துக்கொளு
வாக்கிலே நிலைத்துமே சொல்லக்கேளு
வடிவாகப் பாகத்தை வழுத்தக்கேளே. (15)

சவுக்காரச் சுத்தி.

வழுத்தவே புதுப்பாண்டந் தனையெடுத்து
வகையாகச் சுத்திமுறை வழுத்தக்கேளு
நழுத்தவே சவுக்காரந் தனையெடுத்து
நலமான பாக்குப்போற் சீவிப்பின்பு
நழுத்தவே நாகமல்லி உரலிலிட்டு
நலமாக யிடித்துவிடச் சாறுவீழும்
பழுக்கவே முன்வைத்த சவுக்காரத்தைப்
பக்குவமாய் நாகமல்லிச் சாற்றில்தோயே (16)

தோய்த்துமே யேழுநாள் ரவியிற்போடு
சுகமாகக் காய்ந்தபின்பு யெடுத்து நீயும்
வாய்த்துமே வரிசையது வாகக்கேளு
வண்மையாய் நெற்பாண்டந் தன்னிலிட்டுக்
காய்த்துமே மல்லிகையி னிலைபரப்பிக்
கனிவாக அதன்பேரில் சவுக்காரம்வைத்துப்
பாய்த்துமே மேலுமந்த யிலைபரப்பிப்
பதிவாக மேலுமந்த யிலையைக்கொட்டே. (17)

கொட்டியே பாணிவிட்டுப் பானைதன்னைக்
குணமாக அடுப்பில்வைத்து யெரிநேர்பாகம்
துட்டியே அவித்தியெடு கடிகைரெண்டு
துணையாகச் சென்றெடுத்துக் காயப்போடு

நட்டியே யிப்படிக்குத் தரமுமைந்து
நலமான பாகமாய்ச் செய்து நீயும்
மூட்டியே பாவகமாய்ப் பண்ணிப்பின்பு
முடிவாக யெடுத்துமே சொல்லக்கேளே. (18)

கிளிஞ்சி நீறு.

சொல்லவே முன்வைத்த சவுக்காரத்தில்
சுகமாக மேலேதான் கவசங்கேளு.
நல்கவே [illegible]றலென்ற கிளிஞ்சிதன்னை
நலமா[illegible]வர்மண்ணு சுண்ணம்நேரே
பல்கவே பாணிவிட்டுக் கிளிஞ்சிதன்னைப்
பதிவாகப் போட்டுமே குழுறக்காய்ச்சிச்
சல்தியா யூதிடவே நீறிப்போகும்
சரியாக அறைத்துமே தாக்கிடாயே. (19)

சவுக்காரச் சுண்ணம்

தாக்கிடவே முன்வைத்த சவுக்காரத்தில்
தடையறவே மேற்கவசம் போடக்கேளு
வாக்கிடவே சவுக்கார வில்லைக்குத்தான்
வடிவாகக் கவசத்தைப் பலமாய்க்கட்டி
நோக்கிடவே பத்தெருவி லடுக்கிப்போடு
நொடிக்குள்ளே சவுக்காரஞ் சுண்ணமாச்சு
[illegible]ங்கிடவே சவுக்காரச் சுண்ணந்தன்னைப்
பதிவாகத் துரைக்கெல்லா மிதனை ஆட்டே. (20)

கடுங்காரச் செயநீர்.

ஆட்டான சவுக்காரங் காரமெத்த
அம்மம்மா சொல்லுகிறே னறிந்துகேளு
கூட்டான பூனீரு கல்லுச் சுண்ணம்
குருவாக அமுரிதனை மூறித்துவிட்டு
நீட்டான மூன்றுதினங் கடந்தபின்பு
நிலவரமாய்த் தெளிவிருத்துச் சேரைரெண்டு
காட்டான பீங்கானி லிட்டுக்கொண்டு
கனமான பாணிதனிற் போடக்கேளே. (21)

போடவே அஞ்சுண்ணங் காசிடையேபோடு
பொலிவான காசிடைதான் வங்கச்சுண்ணம்
ஆடவே வெடியுப்புச் சுண்ணம்போடு
அடைவான சீனமொரு காசுபோடு
காடவே சூடனுமோர் காசுபோடு
கனிவாகப் பூரமொரு காசுபோடு
தாடவே வீரமொரு காசுபோடு
தடையறவே நாபியொரு காசுபோடே. (22)

காசாகுஞ் சாரமொரு காசுபோடு
கனிவான குருவுண்டு ஊரமூஞ்சூதம்
வாசான புழுகோடு புருவினெச்சம்
வடிவான குக்குடவெண் மலமுங்கூட்டு
தாசான அமுரிவிட்டு அரைநால்சாமம்
தாட்டிகமாய் அந்நீரி லரைத்துக்கொண்டு
மாசாக அண்டமது முப்பத்தொன்று
பதிவாக வெண்கருவைக் கூடவிட்டே. (23)

விட்டுமே யெருக்கலம்பால் சேரைவிட்டு
விதமாகக் கையாலே மத்தித்துப்பார்
நட்டுமே தெளிவிருத்துப் பீங்கானுக்குள்
நலமாக முன்வைத்துத் தொழுதுபோற்றி
கட்டுமே கந்தரிகள் மிகவுமாக்கிக்
கனிவாகக் கொடுத்துமே கனிந்துபின்பு
பட்டுமே மணிதனையே ஓதிப்பின்பு
பதிவாகச் சொல்லுகிறேன் பாரிலோர்க்கே. (24)

பாரிலே முன்வைத்த சவுக்காரத்தைப்
பூதமாகத் தெளிவிலே தோய்த்துத்தோய்த்து
காரிலே கதிரதனிற் தினமும்வைத்துக்
காட்டியே போட்டுவா கருணைகூர்ந்து
நாரிலே யிப்படிக்குப் பத்துநாளும்
நலமாக யிட்டுமே நாட்டங்கேளு
தாரிலே அங்கிதனைச் சாற்றக்கேளு
தகுந்தபடி சொல்லுகிறேன் தாக்கிடாயே. (25)

தாக்கிடவே சுண்ணும்பும் உப்பும்நேரே
தடையறவே மேனியென்ற சாற்ருலாட்டி
மாக்கிடவே புடம்போட்டு யெடுத்து நீயும்
மறவாமற் சவுக்கார மேலேகட்டிப்
பாக்கிடவே பத்தெருவிற் புடத்தைப்போட்டுப்
பதிவாக யெடுத்திடவே பாகமாகும்
நோக்கிடவே யிப்படிக்கு ஐந்துபோடு
நொடிக்குமுன்னே கடுங்காரச் சுண்ணமாச்சே. (26)

சுண்ணமாந் துரைக்கெல்லாங் காரமேற்றத்
தெர்டுகுறிபோற் கடுங்கார மேறுமேறும்
கண்ணலென்ற துரைக்கெல்லாங் கடூரமாகும்
கனலான திறவுகோ லாகும்பாரு
வண்ணமாஞ் சரக்குகள்தான் கட்டிப்போகும்
வாட்டையிலே அறுபத்து ஞலுஞ்சாகும்
தன்னிகரில் கல்லுப்பு யிதிலேசாகும்
தனதான நவச்சாரங் கட்டிப்போமே. (27)

கட்டியே வீரமது மணிபோலாடும்
கடிதான பூரமது சுண்ணமாகும்
பட்டியே தாதுமுன் னறுபத்துநாலும்
பதிவாகச் சுண்ணமாம் வேதையாகும்
நட்டியே செந்தூர முதலுமாகும்
நலமாகத் தாதுவெல்லாஞ் சுண்ணமாகும்
குட்டியே போட்டுயெடு நீறிப்போகும்
குணமாகச் சகலமுந்தான் சித்தியாமே. (28)

சித்தியாய் மக்காவின் தேசந்தன்னில்
சீர்பெற்ற நபிமார்கள் தன்னைத்தானும்
புத்தியாய்த் தொழுதுமே வணங்கிக் கேட்டேன்
போக்கோடே சவுக்காரஞ் செய்துகாட்ட
நத்தியே நபிமாரைத் தொழுதுபோற்றி
நானிலத்தில் உலகத்தோர் பிழைக்கவென்று
சத்தியமாய்ச் சொல்லிவிட்டேன் சவுக்காரத்தைத்
தாட்டிகமாய் யாகோபு தான்கண்டேனே. (29)

கண்டுமே சுண்ணத்தை அறுநூறு தன்னில்
கனிவாக மறைப்பெல்லாம் வெளியாய்ச் சொன்னே
பண்டுமே புத்தியில்லாப் புல்லருக்குப் ன்
பதிவாகச் சுண்ணத்தைப் பார்த்துச்சொல்லு
வண்டுமே மொய்த்ததுபோல் வழலைமார்க்கம்
வடிவாகச் சொல்லிவைத்த மார்க்கங்கண்டு
மூண்டுமிண்டு செய்யாமற் சுண்ணஞ்செய்து
முடியமட்டுஞ் சுண்ணத்தைப் பார்த்திடாயே. (30)

பார்த்திடவே நபிமாரைத் துதித்துப் போற்றிப்
பலனாக ஆதார மேறிப்பாரு
ஏத்திடவே வாசியைத்தான் அங்கென்றாணு
எழும்பாமல் மாயைதனை அறுத்துத்தள்ளு
காத்திடவே சடமெல்லாங் கற்பமுண்ணு
கருதியே நிலையறிந்து மனத்தைப்பூணு
சேத்திடவே தேகத்தைச் சித்திபண்ணு
சித்திதருங் குருவினுட பதத்தையுன்னே. (31)

உப்புக்கட்டு சாரச்சுண்ணம்.

உன்னவே உப்பினுட கட்டுக்கேளு
ஓடுகிற தூரமது உயர்வுமெத்த
மன்னவே பலநூலி லில்லையில்லை
பாடினதாற் சித்தரெல்லாம் பகையுமானார்
கன்னவே சவுக்காரச் சுண்ணமொன்று
கலந்துசமன் சாரத்தைக் கல்வத்திட்டு
பன்னவே நால்சாமம் உமிழ்நீர்விட்டுப்
பக்குவமா யரைத்துருட்டிக் குகையில்வையே. (32)

வைய்ப்பா மேல்மூடிச் சீலைசெய்து
வடிவாகப் பத்தெருவிற் புடத்தைப்போடு
கையப்பா யெடுத்துமே சொல்லக்கேளு
கனிவாக முன்சொன்ன செயநீர்குத்தி
நையப்பா வெண்ணெய்போல் நேகரைத்து
நலமாக உண்டை பண்ணிக் கதிரில்வைத்து
வையப்பா காடையென்ற புடத்திலிட்டு
வடிவாக யெடுத்துமே சொல்லக்கேளே. (33)

சொல்லவே சாரமது சுண்ணமாச்சு
சுருதிபெறச் சரக்கெல்லா மேவல்கேட்கும்
நல்கவே சந்திரனிற் பீங்கானிட்டு
நலமாக வைத்திடவே செயநீராகும்
புல்லறிவா யெடுத்துமே யின்னீர் தன்னில்
புகழாக வீரமிடு பின்பு நீயும்
செல்லவே கல்வத்தி லிந்துப்பிட்டுச்
செயமாகச் சார நீர் தன்னாலாட்டே. (34)

இந்துப்புச் சுண்ணம்.

ஆட்டியே யிருசாம மரைத்தபின்பு
அன்பாக வில்லைதட்டிக் கதிரில்வைத்துக்
கூட்டியே குக்குடத்தின் புடமுமிட்டால்
குணமான யிந்துப்புச் சுண்ணமாச்சு
தேட்டிலே யிந்துப்புச் சுண்ணமானால்
செகத்குரு வென்றுமொரு பெயருமாகும்
ஊட்டியே பின்பெடுத்துச் சொல்லக்கேளு
உருதிபெற யாகோபு வோதினாரே. (35)

பூரச்சுண்ணம்.

ஓதினார் யிந்துப்புச் சுண்ணத்தோடே
உத்தமமாஞ் சாரமிட்டுப் பனியில்வைக்க
ஆதியாய் ஆறுபோற் செயநீராகும்
அடுத்துநின்ற வீரத்தைப் பொடித்துத்தூவு
காதியாம் ரத்தம்போற் சிவந்துபோகும்
கணக்காகச் செயநீரு பலமேதூக்கிச்
சாதியா மிதற்குள்ளே பூரந்தானும்
சரியாக ஒருபலந்தான் கூடச்சேரே. (36)

சேர்த்துஅரை யிருசாமஞ் சென்றபின்பு
செழுமைபெற வில்லைதட்டிக் கதிரில்வைத்து
நாற்றிசையு மெய்க்கவே புடமுமிட்டு
நலமாக யெடுத்துப்பார் பூரம் நீறும்

வாழ்த்தியே யெடுத்துமே சாரமிட்டு
வகையாகப் பனியில்வைக்கச் செயநீராகும்
சாத்தியே பூரமது பலமேயிட்டுச்
சரியாக அரைத்துமே பீங்கான்வையே. (37)

பூரஉப்பு.

வையப்பா பட்சந்தான் சென்றபின்பு
வகையாக யெடுத்துப்பார் உப்புமாகும்
செய்யப்பா சுண்ணும்புக் குகையிலிட்டுச்
சிறப்பாக மேல்மூடிச் சீலைசெய்து
நையப்பா பத்தெருவிற் புடத்தைப்போடு
நலமாகும் நலமாகும் பூரச்சுண்ணம்
கையப்பா பட்டுதென்றால் வெந்துநீறும்
கனிவாக யின்னமொரு கணக்குக்கேளே. (38)

கணக்காக முன்சொன்ன செயநீர்தன்னில்
காரியமாய் நனைத்துமே சொல்லக்கேளு
பிணக்காக அஞ்சுசுண்ணக் குகையில்வைத்துப்
பேசாதே புடம்போட்டு யெடுத்துப்பாரு
தணக்கமாய்க் கடுஞ்சுண்ணம் பூரச்சுண்ணம்
தாட்டிகமா யொருவருடன் சொல்லவேண்டாம்
வணக்கமாய்ச் செகசால வித்தையாடும்
வாதமடை திறப்பாகும் வண்மையாமே. (39)

வண்மையா யிச்சுண்ணந் தன்னிற்றானும்
வடிவாகச் செகசால மடங்கிப்போச்சு
தண்மையாய் சுண்ணமெல்லா மிதன்கீழாச்சு
தயவாகக் கரையில்லை கணக்குமில்லை
உண்மையாய் ஒப்பனைதான் சொல்லவென்றால்
உறுதியாய் முடியாது உண்மைசொன்னேன்
வெண்மையாய் விம்மிவிம்மி யலையவேண்டாம்
வெருளாதே பீங்கானில் பதனம்பண்ணே. (40)

வீரச்சுண்ணம்.

பண்ணப்பா வீரமது பலமூந்தூக்கிப்
பதிவாகச் சவுக்காரச் செயநீர்விட்டுத்
தண்ணப்பா கல்வத்தி லரை நால்சாமம்
தனிப்பெறவே வழித்தெடுத்து வில்லையாக்கிக்
கண்ணப்பா ரவிதனிலே உலர்ந்தபின்பு
காசிடைதான் சவுக்காரச் சுண்ணமிட்டு
விண்ணப்பா பூரமாஞ் சுண்ணமொன்று
வெங்காரஞ் சாரமொரு காசுதூக்கே.. (41)

தூக்கியே கல்வத்திற் சார நீரால்
துடியாக அரைத்துமே கவசங்கட்டி
பாக்கியே வெண்கருவும் சுக்கான்கல்லும்
பக்குவமா யரைத்துமேற் கவசங்கட்டி
தாக்கியே ரவிதனிலே காயவைத்துச்
சாதகமாய் சுண்ணும்புக் குகையிலிட்டு
நீக்கியபின் சீலைசெய்து புடத்தைப்போடு
நிர்மலமாம் வெண்ணீறாய் நிறைந்துபோமே. (42)

வேடியுப்புச் சேயநீர்.

போகாமல் வெடியுப்புச் செயநீர்கேளு
போக்கோடே வெடியுப்பு தூக்குநாலு
வாகாமல் சட்டியிட்டுப் பாணிதானும்
வடிவாக ஒன்றுக்கு நாலுவிட்டு
பாகமாய்ப் பொங்காமற் காய்ச்சுகாய்ச்சு
பதிவாக ஓலையா லெடுத்து நீயும்
தாகமாய் நிகந்தனிலே வைத்துப்பாரு
தடையறவே துவறைபோ லுரையும்பாரே. (43)

உறைவதுபோற் கண்டாக்காற் பதமாமென்று
உறுதிபெற மறுசட்டி தன்னிலிட்டு
வறைகிறது கவிழ்த்துமே வைத்துப்பாரு
வடிவாகக் கம்பிபோல் விழுகும்உப்பு
நிறையாக உப்பெல்லாஞ் சுரண்டி நீயும்
நிலவரமாய்க் கதிரில்வைத்துப் பின்புநீயும்
பறையாகத் தண்ணீரு மிருக்கும்பாரு
பற்றியதைக் காய்ச்சிமெள்ள வைத்திடாயே. (44)

வைத்திடவே சவுட்டுப்புப் பொடியாய்வீழும்
வடிவாக யெடுத்துமே அப்பால்வைத்து
கைத்திடவே முன்காய்ந்த உப்புநேரே
கனிவாகப் பாணிவிட்டு ரெட்டிப்பாக
நைத்திடவே முன்போலே காய்ச்சித்திரு
நலமாகப் பெருங்கம்பி யாகவீழும்
பைத்திடவே யெண்ணெய்கக்கும் பதிவாய்ப்பாரு
பகாரீது யிப்படிக்குக் காய்ச்சிடாயே. (45)

காச்சிடவே ஐந்துதரங் கம்பியாகும்
கனமான கம்பியெடு தட்டிப்பாரு
ஓச்சிடவே சத்தமது கேழ்க்குங் கண்டாய்
உறுதியுள்ள கம்பியது பாகமாகும்
வாச்சுதே யிப்படிக்குச் செய்தாலுப்பு
வளமாக முறிந்துமே வடிவம்நல்லாம்
தோச்சுதே யிந்தஉப்புக் கொப்பேதென்றால்
தொல்லுலகில் நபிமார்கள் தோய்ந்தஉப்பே. (46)

வேடியுப்புச் சுண்ணம்.

தோய்ந்துபார் வெடியுப்புச் சுண்ணங்கேளு
சொற்பெரிய வெடியுப்பு ஐந்தாங்காய்ச்சல்
வாய்ந்துபார் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
வடிவாக முன்சொன்ன சவுடுதன்னை
ஆய்ந்துபார் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
அடைவாக எலுமிச்சம் பழச்சார்விட்டு
தாய்ந்துமே யிருசாம மரைத்து நீயும்
தடையறவே சட்டியிட்டு உருக்கிடாயே. (47)

உருக்கிடவே தந்தம்போ லுருகிநிற்கும்
உருதிபெற யெடுத்துமே கல்வத்திட்டு
நருக்கிடவே பூனீறு பலமும்போடு
நாடியே சீனமது பலமும்போடு
கருக்கிடவே கல்லுப்புப் பலமும்போடு
கடிதான சூடனது பலமும்போடு
வருக்கிடவே சாரமது பலமும்போடு
வடிவாக யிதுவெல்லாம் நீத்திப்போடே. (48)

நீத்துவது சவுக்காரச் செய நீராலே
நிர்ணயமா யெல்லாமுங் கூட்டி நீயும்
வாத்தியே யெல்லாமுங் கல்வத்திட்டு
வளமாகப் பழச்சாறு விட்டுஆட்டி
காத்தியே மூன்றுநா ளரைத்து நீயும்
கனிவாக வில்லைதட்டிக் கதிரில்வைத்து
நாத்திசையு மெய்க்கவே சொல்லக்கேளு
நலமான அயச்சட்டி யிட்டுக்கேளே. (49)

இட்டுமே மூத்தீயு மெரித்துப்பாரு
யிதமாக யிருசாமஞ் சென்றபின்பு
கட்டுமே வழித்திட்டுப் பீங்கானிட்டால்
கனிவாகக் கடுங்காரச் செய நீராகும்
பட்டுமே சரக்கெல்லாம் ஆடுபோலாம்
பதிவாக வேங்கையா மிச்சுண்ணந்தான்
வட்டுமே யெல்லாமுஞ் சித்தியாகும்
வடிவாகச் செய்புகிற வரிசைகேளே. (50)

சீனச்சுண்ணம்.

வரிசையாம் வெடியுப்புச் செய நீராலே
மகத்தான சரக்கெல்லாஞ் சுண்ணமாகும்
உரிசையாம் வெடியுப்புச் செய நீர்தன்னை
ஒட்டிரெட்டி பீங்கானி லிட்டுநீயும்
பரிசையாம் வீரமிட்டு வைத்துக்கொண்டு
பக்குவமாஞ் சீனமது பலமும்பத்து
நரிசையாய்க் கல்வமிட்டு அரைத்து நீயும்
நலமாக வில்லைதட்டிக் கதிரில்வையே. (51)

வையப்பா வில்லைதட்டிக் காய்ந்தபின்பு
வடிவாகக் கரியில்வைத்து ஊதிப்பாரு
மெய்யப்பா கடுஞ்சுண்ணம் சீனச்சுண்ணம்
மேதினியுங் கொள்ளாது யிதனில்நாட்டு
பொய்யப்பா போகாது கல்லுப்புத்தான்
பொருமையாம் பலப்பத்து நிறுத்துக்கொண்டு
வெய்யப்பா வெடியுப்புச் செய நீராலே
விதமாக யிருசாம மரைத்திடாயே. (52)

கல்லுப்புச் சுண்ணம்.

அரைத்துமே வில்லைதட்டிச் சொல்லக்கேளு
அதைவைத்து அஞ்சுசுண்ணக் குகையிலூது
வரைத்துமே கல்லுப்புச் சுண்ணமாகும்
வாயினாற் சொல்லவே முடியாதப்பா
குரைத்துமே அப்பாலே யெடுத்துவைத்துக்
குணமாகச் சொல்லுகிறேன் கூர்ந்துகேளு
பரைத்துமே சாரமது பலமும்நாலு
பதிவாகக் கல்வத்தி லிட்டிடயே. (53)

சாரச் சுண்ணம்.

இட்டுமே வெடியுப்புச் செயநீராலே
யிதமாகப் பனிரெண்டு சாமமாட்டி
கட்டுமே வில்லைபண்ணிக் கதிரில்வைத்துக்
கணக்காக அஞ்சுசுண்ணம் நடுவில்வைத்து
பட்டுமே கரியில்வைத்து ஊதநீறும்
பதிவாக யெடுத்துப்பார் தந்தம்போலாம்
மூட்டுமே யிச்சாரச் சுண்ணந்தன்னை
மொழியவே கணக்கிட்டு முடியாதென்னே. (54)

இந்துப்புச் சுண்ணம்.

முடியாது நபிமார்கள் சாரந்தன்னை
மூவுலகு மெச்சுமே ஆடுமாட்டு
படியாது வெகுதூரம் யெட்டியோடும்
பாகமாய்ச் சாரத்தி னோட்டந்தானும்
வடிவாக யிந்துப்புப் பலமும்நாலு
வாகாகக் கல்வமிட்டுச் செயநீராலே
பிடியாக யிருசாம மரைத்துப்பின்பு
பேசாதே வில்லைதட்டிக் கதிரில்வையே. (55)

கதிரில்வைத்துக் காய்ந்தபின்பு சொல்லக்கேளு
கனதைபெற ஐந்துசுண்ணம் குகையில்வைத்து
பதிவாகக் கரியிலிட்டு ஊதிப்பாரு
பக்குவமாங் கடுஞ்சுண்ணம் மிந்துப்புத்தான்

விதியாக யிந்துப்புச் சுண்ணைப்பாகு
வித்தகரே சொல்லவே முடியாதப்பா
கெதிபெறவே வேங்கைக்கையி லாட்டைப்போலாம்
கெதம்பெறவே யாகோபு சொன்னவாறே. (56)

வெங்காரச் சுண்ணம்.

சொன்னதொரு வெங்காரம் பலமும்நாலு
சுகமான வெடியுப்புச் செயநீராட்டிக்
கன்னலாய் வில்லைதட்டி ரவியிலிட்டுக்
கணக்காகப் புடமிட்டு யெடுக்கச்சுண்ணம்
நன்னயமாய் வெங்காரச் சுண்ணம்போலாம்
நாட்டிலே சொல்லவே முடியாதப்பா
இன்னிலத்திற் சுண்ணங்கள் செய்யவென்றால்
இதமாகத் தொந்தமதைச் செய்திடாயே. (57)

துருசுகெந்திச் சுண்ணம்.

செய்திடவே யின்னுமொரு செயலைக்கேளு
சிறப்பான துருசினுடன் கெந்திநேரம்
பைதிடவே வெடியுப்புச் செயநீராட்டிப்
பதிவாக வில்லைதட்டிக் கதிரில்வைத்து
நைதிடவே காய்ந்தபின்பு சுண்ணந்தன்னை
நலமாக மேலங்கி கட்டி நீயும்
கைதிடவே பத்தெருவிற் புடத்தைப்போடு
கனிவாகக் கடுஞ்சுண்ண மாகும்பாரே. (58)

ஆடிமே யிப்படிக்குச் சுண்ணமெல்லாம்
அடைவாக யெல்லாமுங் கூடச்சேர்த்துப்
பாகுபெற வெடியுப்புச் செயநீராலே
பதிவாக அரைத்துமே வில்லைதட்டி
வாகுபெறக் கதிரில்வைத்துப் பின்பு நீயும்
வடிவாகப புடம்போட்டு யெடுத்துப்பார்த்துத்
தாகுபெறக் கல்வமிட்டு முன்னேசொன்ன
சவுக்கார நீராலே தாக்கியாட்டே. (59)

ஆட்டியே இருசாமஞ் சென்றபின்பு
அதைவழித்து வில்லைதட்டிக் காயப்போடு
நீட்டியே ஐந்துசுண்ணக் குகையிலிட்டு
நேராகப் பத்தெருவிற் புடத்தைப்போட்டுத்
தாட்டிகமா யெடுத்துப்பார் தந்தம்போலாம்
தாக்கரிது நபிமார்க ளாடும்நேர்மை
பூட்டியபூட் டெல்லாமு மிதனாலாச்சு
பொல்லாதார் தங்களுக்குப் புகலார்தாமே. (60)

புகலவே யிச்சுண்ணம் யேதுக்கொப்பும்
போக்கான அல்லாவாம் பொருந்தப்பாரு
தகலவே யெல்லாமு மிதனாலாச்சு
நாடரிய நால்வேத மொப்பாம்பாரு
வகலவே தொட்டதெல்லாஞ் சுண்ணமாகும்
வடிவான யிச்சுண்ணம் வலுவாமெத்த
அகலவே யிதைவிட்டு நின்றாயானால்
அடைவான சித்தியில்லை யறிந்துபாரே. (61)

தாம்பிரச் சுண்ணம்.

அறிந்துபார் தாம்பிரத் தகடுதட்டி
அதன்மேலே சுண்ணத்தைக் கொஞ்சம்பூசி
வரிந்துமே குக்குடத்திற் போட்டுப்பாரு
வகையாகத் தந்தம்போல் நீறிப்போகும்
தெரிந்துமே ரசங்கட்டும் கெவுனமோடும்
செயமாக யெல்லாமும் நீறிப்போகும்
வரிந்துமே யிதனாலே கவரோகோடி
வடிவான பொருளறிந்தால் மார்க்கமாமே. (62)

தங்கச் சுண்ணம்.

மார்க்கமாய்த் தங்கத்தைத் தகடுதட்டி
மயமாகச் சுண்ணத்தை மேலேபூசிக்
கார்க்கவே கதிரில்வைத்துச் சொல்லக்கேளு
கனமாகச் சீலைசெய்து அகலிலிட்டு
ஏர்க்கவே பெரியபுடம் போட்டுத்தீரு
எனையாண்ட நபிமார்க ளாடும்நேர்மை
பார்க்கவே யெல்லாமுங் கிட்டலாகும்
பதிவாகப் பலனறிய வாதமாமே. (63)

வாதமாஞ் சுண்ணமென்ற துறைகளெல்லாம்
வடிவாகயிப்படிக்குச் செய்துகொண்டு
சேதம் வராமலே தங்கம்நீத்திச்
செயமாக நவலோகம் பழுக்கச்செய்து
வேதமே நம்புதல்போல் உண்டுதேரு
விதமான காயசித்தி சணத்திலாகும்
காதந்தான் வழிநடக்கில் கண்ணிற்றோணும்
கனியான கனியைத்தான் பார்த்திடாயே. (64)

பார்த்திடவே லோகங்க்ளெல்லாம் நீற்றிப்
பதிவாக உண்டுடுத்தப் பலனுமாகும்
ஏத்திடவே மண்ணோடு லோகமெல்லாம்
எளிதாக நீறுமந்த நீறுதன்னைக்
காத்திடவே லோகத்திற் றடவிவாட்டக்
கனகமய மாகுமது கருணைகூர்ந்து
சாத்திடவே யிக்காண்டம் தன்னிற்சொன்னேன்
சரியான பாகமிது தன்மையாமே. (65)

தன்மையாய்ச் சிறிதுபோல் வாதிமார்கள்
தாட்டிகமாய்த் தழைபிடுங்கிச் சுட்டுக்கெட்டு
உண்மையா யில்லையென்று உலகத்தோடே
உறுதிபெறச் சொல்லியே புலம்பிப்பார்த்து
கண்மையாய் நான்கெட்டே னென்றுசொல்வார்
கருத்தில்லா வாதிகள்தான் கழுதைமேய்க்கி
பெண்ணவளைக் கண்டுமே யிச்சிப்பார்கள்
பிறட்டரவர் பொய்சொல்லும் வாதிதானே. (66)

பிறட்டாகச் சொல்லிடுவார் போக்கைத்தானும்
பிரியமாய் நிலையையறி யாமற்றானும்
திறட்டான நூல்தனையே பார்த்துத்தேறிச்
செப்பமா யுலகத்திற் சொல்லிச்சொல்லிக்
கறட்டான வழக்குத்தான் சொல்லுவார்கள்
காரியத்தை யரியாத வாதிமார்கள்
வறட்டாகப் பேசியே புலம்பியேங்கி
வடிவாக மூட்டாளாய் மாள்வார்தானே. (67)

மாளாம லிருக்கவல்லோ சவுக்காரத்தை
மறைப்பாகச் சொல்லவில்லை மகிமைபாரு
கோளாகச் சொல்லாமற் பூநீர் தன்னைக்
கொடியதொரு வேகமாய்ச் செய்துகொள்ளு
வாளாக அறுத்திடுங்காண் சவுக்காரந்தான்
வகையாகச் செவ்வையாய்ச் செய்துகொள்ளு
தாளாமற் ருய்பதத்தைக் கண்டுதேரு
தாக்கிடவே துருசதுவுஞ் சுண்ணமாமே. (68)

மறைப்பு நாமம்.

சுண்ணமாம் வழலையென்றும் பிண்டமென்றும்
சொற்பெரிய வெண்சாரை அண்டமென்றும்
கன்னமா யெல்லாமும் பூநீராச்சு
கருத்தறியார் பூநீரைத் தள்ளுவார்கள்
நன்னயமாய் சவுக்கார வர்மங்காணூர்
நாட்டிலே வாதந்தா னில்லையென்பார்
சொன்னபடி செய்யாமல் அன்மார்க்கங்கள்
சொற்பெரிய பாகமது தோய்ந்துபாரே. (69)

தோய்ந்துபார் சவுக்கார மில்லாக்கட்டு
சொற்பெரிய வாறுகோல் கட்டுமாகும்
பாய்ந்துமே வெடியுப்புச் செயநீரில்லாப்
பதிவாகச் சவுக்காரஞ் சுண்ணமாகா
வாய்ந்துமே உப்பில்லாக் கட்டுவெல்லாம்
வாறுகோல் கட்டாகும் வண்மைபாரு
சாய்ந்துமே வீரமில்லாச் சத்துவெல்லாம்
சரியான மயமில்லை வண்மையாமே. (70)

வண்மையாஞ் சவுக்கார மர்மந்தன்னை
வகையாக யிக்காண்டம் வழியைக்காட்டித்
தன்மையாய்த் தங்கமதை நீத்தச்சொல்லு
தடையறவே செம்பதனைப் பழுக்கவைத்து
உண்மையாய் நபிமார்கள் சொன்ன நீதி
உறுதிபெற யாகோபு யென்பேராச்சு
கண்மையா யிதைச்செய்து பாடினேன்யான்
கருத்துரைத்த நபிமாரைக் கண்டுதேரே. (71)

கண்டுமே பூநீற்றை முன்னெடுத்துக்
கருதியே சவுக்காரம் பண்ணித்தேர்ந்து
கொண்டுமே லோகமெல்லாந் தொந்தமேத்திக்
குணமாகச் செம்புதனிற் கொடுத்துப்பாரு
பண்டுபோற் றங்கமது பரிவுமெத்தப்
பத்திமான் யாகோபு சொன்ன நீதி
மூண்டியே பார்த்தாக்கால் யெல்லாமாகும்
முற்றுணர்ந்தாற் பலனுகு மூர்க்கமாமே. (72)

சவுக்கார முறை.

மூர்க்கமா மின்னுமொரு சவுக்காரந்தான்
முத்திபெறச் சொல்லுகிறேன் முறைமையாக
ஏர்க்கவே பூநீறு விளையும்பூமி
இதமாக அவ்விடத்திற் கெழுந்துசென்று
கார்க்கவே அவ்விடத்தின் அகலங்கேளு
கனிவாகப் பதினறு தூரம்வெட்டிப்
பார்க்கவே அடியில் நிற்குங் கல்லுதன்னைப்
பதிவாக யெடுத்துமே சொல்லக்கேளே. (73)

சொல்லவே பாணிதனிற் கழுவிப்பின்பு
சொற்பெரிய சுத்திமுறை செய்யக்கேளு
நல்லவே உவர்மண்ணுஞ் சுண்ணம்புந்தான்
நாடியே கரைத்தபின்பு நாட்டங்கேளு
கல்லவே கல்லிட்டுத் திரிநாள் வைத்துக்
கடுமைபெறக் குழுறவே காச்சிட்டாக்கால்
வெல்லவே வெள்ளைக்கல் கட்டிப்போகும்
வேதாந்தக் கல்லாகும் விளங்கிப்பாரே. (74)

விளங்கவே வெள்ளைக்கல் தன்னை நீற்ற
விருப்பமாய்ச் சொல்லுகிறே மேன்மையாக
தளம்பவே சுண்ணும்பு நீற்றினைப்போல்
தடையறவே காலவாய் தன்னிலிட்டு
உளம்பவே கரிகொட்டி விராட்டியிட்டு
உருதிபெற நீற்றியிடு உண்மையாகும்
களப்பவே சங்குபோல் நீறிப்போகும்
கனிவான நீறெடுத்துக் கணக்குக்கேளே. (75)

கணக்காக அண்டமென்றால் மேகமாச்சு
கருதரிய கோடைகாலந் தன்னிற்பேயும்
அணக்காக அத்திக்காய் போலேவீழும்
அடைவாக அதையெடுத்துப் பாண்டத்திட்டுப்
பிணக்காக வைத்திடவே சலமுமாகும்
பேசாதே சிவந்தன்னைப் பேணிநீயும்
உனக்காக வெள்ளையென்ற சுக்கானீற்றில்
உறுதியாய் விட்டுவைக்க உண்மைதானே. (76)

உண்மையாய் விட்டுவைத்துப் பின்புநீயும்
உருதிபெற மண்டலந்தான் கடந்தபின்பு
தண்மையாய் மேலேதா னுப்புத்தனும்
தாட்டிகமாய்ப் படர்ந்துமே தயவாய்நிற்கும்
அண்மையாய்ப் படர்ந்தஉப்பு அதைவழித்து
அடைவாகப் பீங்கானி லிட்டுநீயும்
கண்மையாய்க் கதிரில்வைத்துக் காயப்போடு
கணக்காக உப்பினுட பேரைக்கேளே. (77)

பேராக யிந்தஉப்பு வழலையென்றும்
பேசிடுவார் அண்டமென்றும் பிண்டமென்றும்
பாராகச் சொல்லிடுவார் கல்லுப்பென்றும்
பகாரிய வெண்சாரை யென்றும்பேராம்
கூராகச் சிவமென்றும் கல்லுப்பென்றும்
கூறினார் சித்தரவர் கொடுமையாகக்
காராக நஞ்சில்நின்ற கொடியோனென்று
காரணமாய்ச் சொல்லிடுவார் கருதிப்பாரே. (78)

கருதியே பரிபாஷை நாமமாகக்
காட்டுவர்கள் சித்தரவர் கருணையில்லார்
பருதியே யென்பேரு ராமதேவர்
பக்குவத்தில் மக்காவின் தேசமேகி
நருதியே மகமதுவின் வேதந்தன்னில்
நாடியே புகுந்துமே நபிமாரோடே
வருதியே யிருந்துமே வணங்கிக்கேட்ட
வடிவான பாகமிது வண்மைதானே. (79)

உலகவாதிச் செய்கை.

தானென்ற சவுக்கார யெண்ணெய்வாங்கத்
தத்தளிப்பார் புத்தியில்லார் தகைமையாக
ஊனென்ற கடைதனிலே பூநீர்வாங்கி
உகந்துமே மூத்திரத்தை விட்டுக்காய்ச்சி
தானென்று புழுத்துமே யெறிந்துபோட்டு
நான்கெட்டே னென்பார்கள் மூடர்தாமும்
வானென்ற வகையறியார் அலிமாரெல்லாம்
வாதாடிச் சண்டைசெய்வார் வழக்கந்தானே. (80)

வழக்காக யிப்படிக்கிச் சொல்லிச்சொல்லி
வாதாடி உலகத்திற் சண்டையிட்டு
இழக்கவே சொல்லியே பேசுவார்கள்
இதமில்லை படியாத மூடர்தாமும்
பழக்கமாய்ப் பேசியே பையப்பையப்
பதிவாகச் சவுக்காரங் கண்டோமென்பார்
தழக்கமாய் வெகுபாடு பட்டுப்பட்டுத்
தாட்டிகமா யுழன்றுமே தவிப்பாராமே. (81)

வழலைச் சுண்ணம்.

தவிப்பில்லா முன்வைத்த வெள்ளைக்கல்லு
தனைச்சுட்டு நீத்தும்உப்புக் கல்வத்திட்டுக்
கவிப்பியே வெடியுப்புச் சுண்ணங்கேளு
கடுமையாய் முன்காய்ச்சச் சொன்னஉப்புப்
பவிப்பியே பலம்பத்துக் கல்வத்திட்டுப்
பதிவாகச் சீனமது சேருநாலு
சவிப்பாகப் புதுச்சட்டி தன்னிலிட்டுச்
சாதகமாய்ப் பொரித்துமே தன்மைகேளே. (82)

சீனச் சுண்ணம்.

தன்மையாய்க் கல்வமிட்டுப் பின்புநீயும்
தாட்டிகமாய் எருக்கப்பால் சேருஒன்றில்
உண்மையாய் வெண்கருவைக் கூடவிட்டு
உறுதியாய்த் திரிநாள்வை முறிந்துநீராம்

வண்மையாய்ச் செலமாகும் சலத்தில் நன்ருய்
வடிவாக யிறுத்துமே வகையைக்கேளு
கண்மையாய் மூன்சீனம் பொரிந்ததோடே
காட்டியறை யிருசாமங் கடுமையாமே. (83)

கடுமையா யிருசாம மரைத்துவில்லை
கனிவாக அரைத்துகதிர் காயவைத்துத்
தடிமையாய்க் கரியில்வைத்து நாளத்தாலே
தாட்டிகமா யூதியெடு வலுவாய்த்தானும்
படிமையாய் மலர்ந்துமே தந்தம்போலாம்
பக்குவமா யூதியெடு பருவமாகும்
அடிமையா யெடுத்துமே அப்பாற்கேளு
ஆதியா யாகோபு அறைந்தார்தாமே. (84)

வேடியுப்புச் சுண்ணம்.

அறையுகிறேன் முன்காய்ச்சல் வெடியுப்புத்தான்
அடைவாகப் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
பறையுகிறேன் சீனமதின் சுண்ணமைந்து
பக்குவமாய் ரெண்டுமொன்ருய்க் கல்வமிட்டுக்
கறையுகிறேன் ஊற்றிவெண் கருத்தெளிந்த
கனிவான நீர்விட்டு அரைநால்சாமம்
உறையுகிறேன் வில்லைதட்டிக் கதிரில்வைத்து
ஒழுங்காகப் புடபோட்டு யெடுத்துக்கொள்ளே. (85)

எடுத்துமே மறுபடியுஞ் சீனச்சுண்ணம்
இதமாகப் பாதியிட்டுத் தெளிந்த நீரால்
கடுத்துமே அரைத்து நீ வில்லைதட்டிக்
கனிவாகப் புடம்போடச் சுண்ணமாகும்
தடுத்துமே சாரத்தை யிடையேசேர்த்துச்
த்கைமைபெறப் பனியில் வைக்கச் செய நீராகும்
உடுத்துமே செய நீரில் வீரமிட்டால்
உறுதியாய்ச் சிவப்பாகும் உண்மைகேளே. (86)

உண்மையாய்ச் செய நீரை யிருத்தி நீயும்
உணர்வாகச் சுக்கான்கல் லுப்பிலிட்டுத்
தண்மையா யரைத்துவில்லை கதிரிலிட்டுத்
தாட்டிகமா யைந்துசுண்ணக் குகையிலிட்டு

உண்மையாய்ப் புடம்போடச் சுண்ணமாகும்
உறுவான சுண்ணத்திற் காலாம்வீரம்
வண்மையாய்ச் சேர்த்துத்துரை செயநீராலே
வடிவாக வில்லைதட்டிக் கதிரில்வையே. (87)

கதிரிலிட்டுக் காய்ந்தபின்பு சொல்லக்கேளு
காரணமா யஞ்சுசுண்ணந் தன்னில்வைத்துப்
பதிவாகக் காயவைத்துப் புடமுமிட்டுப்
பக்குவமாய்ப் பிரித்துமே கல்வத்திட்டு
திதிபெறவே வீரங்கா லிட்டு நீயும்
நிலையான வெடியுப்பு நீரைவார்த்து
மூதிரவே அரைத்துவில்லை கதிரில்வைத்து
மூடிவாகப் புடம்போட்டு யெடுத்துவாங்கே. (88)

வாங்கியே யிப்படிக்குத் தரமுமஞ்சு
வடிவாகப் புடம்போடச் சவுக்காரந்தான்
தாங்கியே கடுஞ்சுண்ண மாகுங்கையில்
தானெடுத்தால் கையதுவும் விரிந்துபோகும்
ஏங்கியே திரியாதே சடத்திற் பட்டால்
இதமாக விரித்துவிடும் சவுக்காரந்தான்
பாங்கியேயிச் சுண்ணமது நமனேடொப்பாம்
பாதையிதில் வெகுபோக்கு பரிந்துபாரே. (89)

பரிந்துபார் சவுக்கார வழலையாச்சு
படுமுன்னே சரக்கெல்லாம் நீறிப்போகும்
அரிந்துபார் லோகமெல்லா முடனே நீறும்
அணுவளவு தொட்டவுடன் செம்பு நீறும்
பரிந்துமே லோகமெல்லாம் நீறிப்போகும்
பகலவன்போற் பதியாகும் பாரிலோர்க்குச்
செரிந்துமே இச்சுண்ணந் திரமதாகுஞ்
செப்பினேன் யாகோபு திறமைதானே. (90)

திறமாகச் சவுக்காரச் சுண்ணந்தன்னைத்
திரண்டகொட்டைப் பாக்களவு தானெடுத்து
வறமாகத் துருசுபண விடையிற்சேர்த்தே
வடிவாக அரைத்துமே துருசிற்பூசிக்

கறமாகக் காடையென்ற புடத்திலிட்டால்
கனிவாகக் கொக்கிறகு போலேதானும்
தறமாக நீறிவிடும் பணவிடையுந்தானும்
தாக்கினர் யாகோபு தாமதாமே. (91)

தாமேதான் பணவிடையில் துரிசினலே
தான்கோடி லட்சமது தாண்டிஓடும்
வாமேதான் சூதமது கட்டிப்போகும்
மாசற்ற கெவுனமது ஓடலாகும்
காமேதான் மண்ணோடு யிரும்புதானும்
கனமான யெஃகுவோ பழுக்குங்கண்டீர்
நாமேதான் பாகத்தைக் கண்டுதேர்ந்தோம்
நாட்டிலே சொல்லாதே நயமதாமே. (92)

ரசமணி.

நயமாக முன்வைத்த துருசுச்சுண்ணம்
நாடியே விருலியிலே பிடிநறுக்கிப்
பயமாக அதிலிட்டுப் பிசைந்துபாரு
பார்த்திடவே சலமாகும் பகரக்கேளு
கயமாக அயக்காண்டி தன்னிலிட்டுக்
காரணமாய்ச் சூதமென்ற ராசாதன்னைச்
செயமாகக் காய்ச்சிவிடு வெண்ணெய்யாகும்
செய்திட்டு உருட்டியே சொல்லக்கேளே. (93)

சொல்லவே மணிபோலே உருட்டி நீயும்
சுகமாயூமத்தங்காய்க் குள்ளேவைத்து
நல்லவே அவிபுடமாய் நாறும்போடு
நாடியே யெடுத்துப்பார் மணிபோலாகும்
கல்லவே மணிநிறந்தான் வெள்ளிபோலாங்
காரணமா யிருந்துவிடும் கருதிப்பாரு
செல்லவே மணியதனைத் தொழுதுபோற்று
செயமாக மணிப்பெருமை யின்னுங்கேளே. (94)

இன்னமாம் அல்லாவின் கயற்றுருகும்
இதமாக நபிமார்கள் மேனியாகும்
நன்னயமாய் மூகமதுவின் மேனியாகும்
நாடியே ஒளியாகும் ரசிதம்போலாம்
சொன்னபடி யாயிருக்கு மணியினோடே
துவாரமிட்டு யிடையிலே கட்டினுக்கால்
தன்னகரில் பெண்ணோடே பேசினுக்கால்
தப்பாமல் மணியிளகுந் தன்மைதானே. (95)

தன்மையாய்ச் சூதமென்ற மணியைத்தானும்
தாக்கியே கரியில்வைத்து உருக்கிப்பாரு
உண்மையாய் வெள்ளிபோற் கண்விட்டாடும்
உறுதிமெச்ச மணியாகும் உயரவோடும்
வண்மையாய்ச் சித்தாதி தனக்குள்தானும்
வடிவான மணியுண்டு கொடுக்கமாட்டார்
பெண்மையாம் பாகமாய்ச் செய்துகொண்டால்
பெரியநபி யாயிருப்பார் பேருமாமே. (96)

ரசக் களங்கு.

போரகச் சூதமணி பலமும்நாலு
பிசகாமல் கரியில்நின்று உருகும்போது
காராகத் தங்கமொன்று நாகமொன்று
கனிவாகக் கொடுத்துருக்கக் களங்கமாகும்
சீராகக் களங்கத்தை யெடுத்துவைத்துச்
செயமான அல்லாவைத் தொழுதுபோற்றி
வாராக நபிமாரை வணங்கியேற்றி
வடிவாகக் கைதொழுது வரிசைகேளே. (97)

வரிசையாய் நவலோகந் தன்னிற்றானும்
வாதையடா நூற்றுக்கு ஒன்றுதாக்கு
உரிசையாய் வாங்கியது தங்கமாகும்
உண்மையிது சத்தியமாம் உறுதிசொன்னேன்
பரிசையாய்ச் சூதமது பட்டதெல்லாம்
பதிவாகத் தங்கமாம் பாரிலோர்க்குச்
சரியான வேதையிது மார்க்கந்தன்னைத்
தாட்டிகமா யாகோபு சொன்னவாறே. (98)

சொன்னதொரு அல்லாவைத் தொழுதுபோற்றிச்
சொற்பெரிய நபிமாரை வணங்கியேற்றிக்
கன்னதொரு சவுக்காரம் பண்ணி நீயும்
கனிவாகத் துருசதனை நீத்திபபின்பு
இன்னிலத்தில் ரசங்கட்டிக் குளிக்கசெய்து
இதமான களங்குச்செந் தூரஞ்செய்து
தன்னிகரில் நவலோங் கொடுத்துப்பாரு
தன்மைபெற யாகோபு தாக்கினாரே. (99)

தாக்கியே மௌனமா யிருந்துகொண்டு
தாட்டிகமாய்ச் சவுக்காரச் சுண்ணம்பண்ணி
நோக்கியே பூரணத்தி லெட்டியோடி
நுணுக்கரிய நபிமாரை வணங்கியேற்றிப்
பாக்கியத்தைக் கண்டுமே செலவுசெய்து
பத்தியாய் துனியாவில் நின்றுதேறு
சாக்கியே ஒருவர்கண்ணிற் காட்டிடாமல்
சரிதையாய்க் கண்டறிந்தால் வாதியாமே (100)

ரசக்கட்டுச் சேந்தூரம்.

வாதியாம் சூதம்நின்ற களங்குதன்னை
வண்மையாய்ச் செந்தூரம் பண்ணக்கேளு
சோதிபெறக் களங்கதுவும் பலமும்பத்துச்
சுருதிபெறக் கல்வத்தி லிட்டுக்கொண்டு
நாதியாங் கெந்திரெண்டு கல்வத்திட்டு
நலமாகப் பொற்றலைன் சாற்றினாலே
மோதியே அரைத்திரண்டு சாமந்தானும்
முடிவாக வில்லைதட்டிக் கதிரில்வையே. (101)

வையப்பா வில்லைதனை யெடுத்து நீயும்
மார்க்கமாய் புது அகலில் வைத்துமூடி
செய்யப்பா புடம்போடக் கரியதாகும்
செப்பமாய்க் கரியெடுத்துக் கல்வத்திட்டு
நையப்பா நாலிலொன்று தாளகத்தை
நலமாகச் சேர்த்துமே கையானீரால்
பையப்பா யிருசாமமறைத்துவில்லை
பதிவாகத் தட்டியே பலனைக்கேளே. (102)

பலனுக் அகலிலிட்டுப் புடமுமிட்டால்
பகாரிது செந்தூர மூருக்கம்பூவாம்
கலனுக யிருக்காது சிவப்புமிக்கக்
கடுரமாய் நவலோகம் நூறுருக்கி
அலனுக ஒன்றிட்டால் பழுக்குந்தங்கம்
ஆதியாம் பொருளதுவுங் கைக்குள்ளாகும்
பெலனுக அல்லாவாம் பெரியோர்சொன்ன
பேசாத வாதத்தின் பெமைருதானே. (103)

பெருமையாம் பணவிடையாய் மண்டலந்தான்
பேசிரிய செந்தூரம் உண்டுதே
அருமையா யுண்டிடவே சட்டைகக்கும்
ஆனந்தம் வெகுகோடி யிருக்கல்ாகும்
கருமைமயிர் நரம்பிறுகும் கற்றூணுகும்
காதிலொலி கண்டிடுங்காண் கனிவுமெத்தப்
பொருமையாய்ச் செய்திடிலோ பலனுமாகும்
புகலரிய வேதையதன் பெருமையாமே. (104)

ஆமேதான் உலகத்தோர் செய்பாகங்கள்
அடைவாகத் தவறிமுல் யெல்லாம்பாழாம்
நாமேதான் வேதையெல்லாம் பொய்த்துப்போகும்
நாதாந்த யாகோபு சொன்ன நீதி
காமேதான் கண்டிட்டால் பலனுமாகும்
காணுட்டாற் சித்தியில்லை கண்டுகொள்ளு
வாமேதான் சொன்னதினுற் பலனுமில்லை
வடிவாகத் தொழுதிடவே பலனுமாமே. (105)

பலனுகச் சுண்ணத்தை முன்னேசெய்து
பத்திதாத் துருசுக்கு முடித்துத்தேரு
கலனுகச் சுண்ணமென்றுல் எளிதோ அல்ல
கனிந்துரைத்த நபிமார்களாடுங்கூத்து
பிலனுக வாசியோ கத்தைப்பாரு
பேர்பெரிய சித்தியாம் பிலக்கும்வேதை
தலனுக யிருந்துண்டால் நன்மையாகும்
தாட்டிகமா யாகோபு சாற்றினுரே. (106)

சாற்றிட்ட சவுக்காரச் சுண்ணத்தாலே
சகலசித்து மாடலாம் நபிமார்சொல்லார்
கோத்திட்ட அல்லாவைக் கேட்டுக்கொண்டேன்
குருவான வாதமெல்லாம் சொல்வார்யாரு
நாத்திட்ட மனதுதான் ஆங்காரத்தால்
நலமில்லை திட்டியே புலம்புவார்கள்
காத்திட்ட கனிபோலே ருசியைப்பாத்துக்
கருணைபெற அறுநூற்றைக் கருதிப்பாரே (107)

கருதியே மனந்தன்னை ஆங்காரத்தால்
கடுமையாய்ப் பேசிடுவார் உலகைவாதி
பருதியே பணியறியார் வாதியார்கள்
பக்குவத்தில் பூநீற்றை அறியாமூடர்
சுருதியைத்தான் பாராமற் சுட்டுச்சுட்டுச்
சூட்சமில்லை யென்பார்க ளுலுத்தவாதி
மூருதியே பெண்போலே திரிவார்மூடர்
முத்தியில்லை யென்பார்க ளுறுதிதானே (108)

உறுதிபார் பாகமதைச் செய்து நீயும்
உற்றுமே பரிகரித்தால் உண்மையாகும்
பருதியே பூநீரு விளையும்பூமி
பக்குவத்திற் கண்டுமே யெடுத்து நீயும்
வருதிபட அமுரிதனை இன்னதென்று
வடிவாக அறிந்திடவே வளமைகண்டு
சுருதிதன்னைத் தேய்ந்துணர்ந்த நபியார்பாகம்
சுருக்கத்திற் கண்டுமே பிடித்திடாயே (109)

தாளகச் சுண்ணம்

பிடித்திடவே முன்வைத்த சவுக்காரத்தைப்
பிசகாமல் தாளகத்தின் மேலேகட்டு
வடித்திட்டு மண்சீலை செய்து நீயும்
வடிவாகப் பத்தெருவிற் புடத்தைப்போடு
குடித்துமே யெடுத்துப்பார் தந்தப்போலே
கொடிதான சுண்ணமாம் குறிப்புடைத்த
தடித்துமே தாளகமும் நீற்றுனால்
தாட்டிகமாய்ச் செம்பதுவும் நீறுந்தானே. (110)

நீறுமே தாளகத்தின் சுண்ணம்நாலு
நிறுத்துமே வீரமது ஒன்றுகூட்டி
வாறுமே அரைத்து நீ சொல்லக்கேளு
வடிவாகத் துருசின்மே லப்பிப்போடு
காறுமே கதிரில்வைத்துக் காயப்போடு
கதிப்பெறக் காடையென்ற புடமுமிட்டால்
சாறுமே நீறியது துருசுச்சுண்ணம்
சகஸ்திரத்துக் கோடுமே தன்மைதானே, (111)

தாமிரச் சுண்ணம்.

தன்மையாய்த் துருசவின் நீறுதன்னைத்
தாட்டிகமாய்க் களஞ்சியது நிறுத்துக்கொண்டு
பெண்மையாய் வீரமிட்டு உமிழ்நீராலே
பேதிக்க அரைத்துமே நவலோகத்தில்
உண்மையாய்ப் பூசியே புடமுபபோட்டு
உறுதியா யெடுத்துப்பார் தாம்பிரந்தான்
வண்மையாய் நீறியது தந்தமாகும்
வடிவான கடுஞ்சுண்ண மாகுந்தானே. (112)

ஆகுமே தாம்பிரச் சுண்ணந்தன்னை
அடைவாக வாழையதின் கனியிலிட்டால்
பாகுபெறக் கனியதுவு மிறுகிப்போகும்
பக்குவமா யிப்படிக்குச் சோதித்தேரு
வாகுபெறத் தாமிரச் சுண்ணந்தன்னை
வடிவாக நவலோக மேலேபூசி
தாகுமே புடம்போடச் சுண்ணமாகும்
தாக்கிடவே நவலோகம் யேமமாமே. (113)

ஏமமாம் நவலோகம் நூற்றுக்கொன்று
இட்டிடவே நல்லதங்கம் பத்துமாத்து
நாமமாம் புடத்துக்கும் உப்புக்குந்தான்
நலமாக யிறங்குமது நாட்டுளோர்க்குத்
தாமமாந் தாமிரத்தின் பற்பமுண்டால்
தடையறவே மேனியது தங்கமாகும்
வாமமாம் பதம்கரங்கள் நரம்புதானும்
வடிவாக யிறுகிவிடும் வண்மைதானே. (114)

வண்மையாய் பாகமதைக் கருத்த லெண்ணி
 வகையாகக் கைபாக வரிசையோடே
தன்மைசாய்ச் செய்துமே புத்திதன்னில்
 தான்பதித்துச் செய்திடிலோ பலனுமாகும்
கண்மையாய் ஆதார மறிந்துசெய்தால்
 கருத்தறவே யோகசித்தி கெவுனமோடும்
துண்மையாய்க் கெவுனத்தி லோடும்போது
 துடியான தன்மையாந் தோய்ந்துபாரே. (115)

தோய்ந்துபார் சவுக்காரந் தன்னிற்றானும்
 துடியான மயக்கமெல்லாந் தீர்ந்துபோகும்
ஆய்ந்துபார் அறிவுகீகுட் புகுந்தாலல்லோ
 அடைவான சுண்ணமது வெளிதிலாகும்
வாய்ந்துபார் வெளியாகச் சொல்லவேண்டாம்
 வடிவாக வெளிவனாய்த் திரியவேண்டாம்
சாய்ந்துமே சுண்ணத்தைச் செய்து நீயும்
 தடையறவே செய்தாக்கால் தன்மையாமே. (116)

தன்மையாய் நபிமார்கள் சொல்லும் நேர்மை
 தடையறவே கைபாக வரிசைகண்டு
உண்மையாய்ச் வரிசையாய்ச் செய்துகொண்டு
 உறுதிபெற உற்றுமே உணர்ந்துபாரு
கண்மையாய் வயிறுதனை வளர்த்துக்கொண்டு
 கடிதான சுண்ணத்தை வைத்துகொண்டு
பெண்மையாய்க் காயசித்தி பண்ணித்தேறு
 பேதையா யுண்டாக்காற் பலனுமாமே. (117)

ஆமேதா னடுத்தவர்கள் தன்னைத்தானும்
 அடைவாக ரட்சிக்க வேணுமென்று
தாமேதான் நபிமார்க ளாடுமொட்டுத்
 தடையறவே நானுந்தா னுடித்தேர்ந்து
காமேதான் காயசித்தி பண்ணித்தானும்
 கதிர்பெருகுங் காயத்தைக் கல்லாணுக்கிப்
பாமேதான் யாகோபு சொன்ன நீதி
 பக்குவத்தில் சொல்லிடவே பாகமாமே. (118)

பாகமாய்ச் சுண்ணத்தின் பயனறிந்து
பக்குவமாய்ப் பொருளறிந்து பழக்கங்கண்டு
யோகமாம் வெள்ளைக்கல் பூநீர்கண்டு
யோக்கியமாய் அமுரியுட பலனறிந்து
சாகமாம் குணந்தணத்தில் குணமறிந்து
சத்தியமாய்க் கண்டறிந்து சரிநேர்பார்த்து
வாகமாய் பனமதுவை யொக்கப்பண்ணி
வரிசையாய்ச் செய்திடவே வழக்கமாமே. (119)

☞ 120 வது பாட்டு எமது ஏட்டில் கிழிந்து போயிருந்ததால் அச்சிடவில்லை

உப்புக்கட்டு.

சித்தியா யின்னமொரு கட்டுமார்க்கம்
செயப்பெறவே சொல்லுகிறேன் திட்டமாகப்
பத்தியா யுப்போது வென்றாயானால்
பதிவாக வாரிதிக்குள் சத்திநாதம்
உத்தியாய் மலைபோலே வளர்ந்துநிற்கும்
உப்பெடுத்துப் பாக்குப்போ லுடைத்துநீயும்
சுத்தியாய பழச்சாற்றில் மூன்றுநாளும்
சுகமாக ஊறவைத்துத் துவைத்துப்போடே. (121)

போட்டுமே கதிரில்வைத்து யெடுக்கநீயும்
போக்கோடே உப்புதுவுஞ் சுத்தியாச்சு
காட்டுமே முன்வைத்த சவுக்காரத்தைக்
கனிவாக வீரமொன்று பூரமொன்று
நாட்டுமே அரைத்துவெடி யுப்புநீரால்
நலமாகக் குளம்புபண்ணிக் கொண்டுநீயும்
தாட்டுமே கல்லுப்பைத் தோய்த்துவாட்டு
தனியாகத் தணலுக்குள் ளடரவாட்டே. (122)

வாட்டிடவே குளம்புக்கு ளடரவாட்டு
வடிவாக வாட்டியெல்லா மானபின்பு
நீட்டியே அடுக்கடுக்காய் முதிரவாட்டி
நிலையாகக் கல்லுப்புத் தெறிப்படங்கும்
மூட்டியே சுண்ணப்பு உப்புநேரே
முனிவார் அரைத்துமே கவசங்கட்டி
நாட்டியே கிளிஞ்சிநீர் சரியாய்க்கூட்டி
நலமாகச் சட்டியிட்டு நன்றாய்க்கேளே. (123)

நல்லாக வாட்டியதோர் கல்லுப்பைத்தான்
நடுவில்வைத்து மேலுமந்தச் சுண்ணமிட்டு
அல்லாவை நினைத்துமே யெரிநால்சாமம்
அடைவாக யெரித்துமே மெல்லத்தானும்
பொல்லாமை யில்லாம லெடுத்துநீயும்
போக்கான சவுக்காரச் சுண்ணங்கட்டிக்
சொல்லாமை யெரியபுடம் போட்டுத்திரு
கொடிதான தட்டாகும் குணமுமாமே. (124)

குணமாக வயிரம்போ லிருகிநிற்கும்
கொள்ளையிதில் வாதமது கோடிக்கொக்கும்
தனமான வயிரம்போல் முத்துப்போலாம்
தாட்டிகமாய் வயிரமணி போலாம்பாரு
கனமாகக் கரிதனிலே உருக்கிப்பாரு
கண்விட்டுப் பொன்போலே ஆடும்பாரு
வணமாகக் கரியதுதான் குடியாதப்பா
வடிவாகக் கரிக்குடித்தால் வண்மைகேளே. (125)

வண்மையாய் முன்போலே துவைத்துவாட்டு
வடிவாகப் புடம்போட்டு உருக்கிப்பாரு
தண்மையாய் முத்துப்போ லுருகும்பாரு
தனையுடைத்தால் தங்கம்போல் நிறமுமாகும்
கண்மையா யிந்தஉப்புக் கொப்பேதென்றால்
கருத்துறவே நபிமாரைப் போலேயாகும்
பண்மையா யுப்பைமுந்திக் கட்டிப்பாரு
பதிவான சித்தியெல்லாம் பலனுமாமே. (126)

பலனுக்கு உப்புத்தான் கரியில்வைத்துப்
பாங்காக உருக்கியே மணியதாகத்
தலனாகத் தாவடமாய்ப் பூண்டுகொண்டு
தருகாவின் நபிபோல செபத்தைப்பண்ணு
அலனாகத் திரியாதே கந்திரியாக்கி
அடைவாக உண்டுமே உடுத்திநீயும்
பெலனாக யிருந்துமே செபத்தைப்பண்ணு
பேர்பெரிய முன்னோர்க ளுரைத்தவாறே. (127)



11064

உரைதப்பில் பேச்சுத்தான் தப்பிப்போனல்
உலுத்தரவர் வாதிமா ரறியமாட்டார்
கரைதப்பில் வெள்ளமது பெருக்கெடுக்கும்
கைதப்பில் வாதமது தலைகீழாகும்
முறைதப்பில் சாயந்தான் பிடித்திடாது
முத்தியில்லை வாதிமார் சொல்வார் நீதி
துறைதப்பித் திரிந்தவர்கள் அனேககாலம்
தொல்லுலகில் யாகோபு தோய்ந்திட்டாரே. (128)

தோய்ந்திட்ட நபிமார்க்ள் வாதந்தன்னைத்
துணையாகச் சொல்லுவா ரநேகநீதி
பாய்ந்துமே யெட்டெட்டுக் கர்மந்தன்னைப்
பதிவாகச் சொல்லிடுவார் பலனைக்கொண்டு
தாய்ந்துமே பரிகரிப்பார் தடையோயில்லை
தாட்டிகமா யாகோபு சொன்ன நீதி
மாய்ந்துமே நல்மார்க்கஞ் செய்துகொள்ளு
மயமாக வடிவமெல்லா மெய்யதாமே. (129)

உப்புக்குரு.

மெய்யாக உப்பினுட குருவைச்சொல்ல
விதமான சவுக்காரச் சுண்ணமொன்று
பையாகக் கற்பூரச் சுண்ணமொன்று
பதிவாக வீரத்தின் சுண்ணமொன்று
நையாகப் புழுகொன்று சீனமொன்று
நலமான சவுக்காரச் செயநீராலே
மையாக உப்பினுட மணிக்குப்பூசி
மாசற்ற ரவிதனிலே உலரப்போடே. (130)

உலர்ந்தபின்பு சுண்ணம்புக் குகையில்வைத்து
உத்தமனே மேல்மூடிச் சீலைசெய்து
அலர்ந்துமே பத்தெருவிற் புடத்தைப்போடு
ஆதியென்ற கல்லுப்புச் சுண்ணமாகும்
நலந்துமே குலந்தனக்குக் கோடாலிதான்
நல்லதோர் சரக்குக்குக் காலன்காலன்
வலந்தனக்குக் கடுங்காரச் செயநீராகும்
வடிவாக நாளேழு உலரப்போடே. (131)

உலரவே போட்டெடுத்தா லேழுநாளும்
உண்ணுமய்யா பூப்போலே பொருமி நீறும்
அலரவே பொருமினதோர் சுண்ணந்தன்னில்
அடைவாகச் சாரமது யிடையேகூட்டிக்
கலரவே தினமொன்று அரைத்தாயானால்
கருணைசலம் போலவே நிற்கும்பாரு
தலரவே ரவிதனிலே உலர்ந்தபின்பு
தளராமற் சுண்ணும்புக் குகையில்வைத்தே. (132)

குகையில்வைத்து மேல்மூடிப் புடமுமிட்டால்
குணமாகச் சங்குபோல் நீறுமாகும்
தகையாகப் பனியில்வைக்கச் செயநீராகும்
தாட்டிகமா யிந்நீரில் வீரம்பூரம்
வகையாகச் சவுக்காரச் சுண்ணமோடு
வடிவாகப் பூரத்தின் சுண்ணமோடு
பகையாக வெளியாக்கும் நீரிற்போடு
பதிவாகக் கலக்கியொன்றாய் மத்திச்சேரே. (133)

மத்திச்சுப் பீங்கானில் பனியில்வைத்து
மதிமயங்கிப் போகாமல் சொல்லக்கேளு
நித்தியமாய்ப் பாசாண மறுபத்திநாலும்
நிலையான உப்புவகை யிருபத்தஞ்சும்
சித்திபெற உபரசங்க ளெல்லாந்தானும்
சிறிதான கட்டாகு மெழுகுமாகும்
பத்தியே வெகுபோக்கு ஆகும்நல்லாய்ப்
பாலித்தார் யாகோபு பாக்கியவானே. (134)

பாக்கியவான் செயநீரில் உப்பைக்கட்டிப்
பதிவாகக் குகையில்நின்று உருகும்போது
நோக்கியே தங்கந்தா னிலொன்று
நுட்பமாய் நாகமொன்று கூடவிட்டு
வாக்கியே உருக்கியெடு களங்கமாகும்
வடிவாக நவலோகம் நூற்றுக்கொன்று
தாக்கியே கொடுத்துருக்கு யெட்டேகாலம்
சரியான மாத்தாகுந் தன்மைபாரே. (135)

தன்மைபார் தங்கத்தைக் கண்டபோதே
தாட்டிகமாய்க் கொர்ச்சிக்கா தப்பாகேளு
நன்மையாய் நபிமாரைத் தினைவணங்கி
ரகுமானின் பாதமதைப் போற்றிசெய்து
உண்மைபார் அன்னத்தைக் கொஞ்சமுண்ணு
உலுத்தருடன் பேசாதே ஒழுங்குமாகும்
பெண்மைபார் புளியகற்றி உண்டுதேரு
பேதமையாய்த் திரியாதே யின்னங்கேளே (136)

இன்னமென்ன சொல்லுகிறேன் செந்தூரத்தை
இதமான வாதிகள்தாம் தெரிந்துகொள்ள
நன்னயமாய்ச் சூதமொன்று நாகமொன்று
நலமாக உருக்கியெல்லாம் பொடியதாக்கிக்
கன்னல்போல் வீரமொன்று சுண்ணமொன்று
கருத்தாக மத்தித்துப் பனியில்வைக்கத்
தன்னிலே நீராகுஞ் செய நீர்தன்னைத்
தாட்டிகமாய்ச் சொல்லுகிறேன் தன்மைகேளே ()

தன்மையா யுப்புமணி தன்னைத்தானும்
தாட்டிகமாய் வைத்துமே பின்புநீயும்
உண்மையாய்ப் பரித்தகட்டை மேலேசுத்தி
உறவாக யிலுப்பைநெய்யில் விளக்குவைத்துப்
பண்மையாய் நூலிழையிற் றிரியைபபோடு
பக்குவமாய் வாங்குமட்டும் வாட்டித்திரு
பண்மையா யுட்புகுந்து பரிதானப்பா
பதிவான அருணனைப்போ லாகும்பாரே. (138)

ஆகுமே நவலோகம் நூற்றுக்கொன்று
அடைவாகக் கொடுத்திடவே மாற்றுப்பத்து
வாகுபெற உப்புக்குங் காவிக்குந்தான்
வளமாக அருகுகட்டி யிறங்கும்நேரே
ஏகுபெறச் செந்தூரங் குன்றியுண்ணு
இனிவாகக் கோடிவரை வளருநதேகம்
போகுமே விநதிறுகிக் கட்டிப்போகும்
போக்கோடே உண்டிடவே சித்திபாமே (139)

சித்திதா னாகவென்றால் செந்தூரத்தைத்
தினமுமே மண்டலந்தா னுண் ணும்போது
பத்தியாய்த் தேகமது மின்னிநிற்கும்
பதிவான கண்களுஞ்செவ் வலரிபோலாம்
சத்தியாய்ச் சட்டைகக்கும் சதிராமேனி
சரியான வேர்வையில்லை சொல்லக்கேளு
முத்திபெறச் சேர்த்துச்செந் தூரந்தன்னை
முக்கியமாய்ச் செய்துநீ யுண்டிடாயே. (140)

உண்டிடவே கோடான கோடிதானும்
உறுதிமெத்தக் கற்றாலுந் தேகசித்தி
பண்டிடவே கொடிதான நோய்கள்போகும்
பாதையிது பெரும்பாதை பாருலோர்க்கு
வண்டிடவே பூமாலை போலேயாகும்
வடிவான யாகோபு வழக்கஞ்சொன்னார்
மூண்டனாய் திரியாதே சுண்ணந்தன்னை
முடியுமட்டுஞ் சோதித்தாற் சோதிதானே. (141)

தானென்ற நரைதிரைக ளற்றுப்போகும்
தாட்டிகமாய்ப் பச்சையுப்பைத் தின்றாலாகில்
வானென்ற வேர்வையிலே வடிந்துபோகும்
வகையான மூத்திரத்தி லிறங்கிப்போகும்
கானென்ற சடலமெல்லா மூலைந்துபோகும்
கருவான சடலமது நரைமேலாகி
ஊனென்ற தந்தமெல்லாங் கழன்றுபோகும்
உறுதிபெற்று யாகோபு இருந்திட்டேனே. (142)

இருந்திட்டேன் சமாதியிலே அநேககாலம்
இதமான நபிமார்க ளென்னைக்கண்டு
வருந்திட்டே யென்னையழைத்துச் சொன்னாரப்பா
மகிழ்வான செந்தூர வகைபாகங்கள்
பொருந்தவே கைபாகம் பார்க்கும்போது
புகலரிய சுண்ணங்கள் மிகவுஞ்சொன்னார்
திருந்தவே உப்புமணி ஒன்றுசொன்னார்
செய்பாக கைபாக வரிசைதானே. (143)

வரிசையாய்ப் பாகத்தைக கற்றுக்கொண்டேன்
வடிவாகத் தொழுதிறைஞ்சி வண்மையாக
உரிசையாய்ச் சுண்ணத்தின் மார்க்கங்கண்டு
ஓதரிய கோராணை ஓதித்தேர்ந்தேன்
யரிசமது யெழுநூற்றுக் காததூரம்
பதிவர்ன குளிகையிட்டுப் பறந்தேன்யானும்
குரிசைதர நபிமார்க ளுபதேசித்த
குறியான சவுக்கார மாடுமட்டே. (144)

ஆட்டான கேள்வியினல் வாதம்பார்த்து
அறியாமற் சுண்ணமெல்லாம் பொய்யென்பார்கள்
நீட்டான குருவேணும் நூல்கள்வேணும்
நேரான கைமுறைகள் நிலைக்கவேணும்
பாட்டான பாடலைத்தா னறியவேணும்
பதிவான கணக்கினுட பாகம்வேணும்
ஊட்டான யோகசித்தி காயசித்தி
ஒழுங்காகப் பண்ணிடவே உறுதியாமே. (145)

கல்லுப்புச் சுண்ணம்.

உறுதியா யின்னமொரு சுண்ணங்கேளு
ஒருவருடன் பேசாதே உற்றுப்பாரு
நறியதாய்க் கல்லுப்புப் பலமும்பத்து
நாடியதோர் கடல்நுறையு மிடையேசேரு
அறுதியாய் வெடியுப்பு நீராலாட்டி
அடைவாகக் கரியில்வைத்து ஊதிப்பாரு
பெறுகியே கடுஞ்சுண்ண மாகும்பாரு
பெலமாகக் கல்வமிட்டுச் சொல்லக்கேளே. (146)

சொல்லவே வெடியுப்பு நீராலாட்டிச்
சுருதிபெற வில்லைதட்டிக் கதிரில்வைத்து
நல்லவே காயவைத்துக் கரியில்வைத்து
நாடியே ஊதிடவே நல்லசுண்ணம்
வல்லவே சாரத்தை யிடையேசேர்த்து
வசமாக அரைத்துமே சொல்லக்கேளு
கல்லவே வில்லைதட்டிச் செயநீராலே
கனிவாக அரைத்துமே கணக்காய்த்தானே. (147)

நாகக்கட்டு.

கணக்காகச் சேவலென்ற புடமிட்டுக்
கனிவாக யெடுத்துமே பனியில்வைத்துத்
தணக்காக நீராகும் நீருதன்னைத்
தாட்டிகமாய்ப் பீங்கானி லிட்டிறுத்து
வணக்காக நாகத்தை யிருபத்தொன்று
வண்மையாய்ச் சாய்த்துயெடு கட்டுங்கட்டும்
பிணக்காகக் கட்டி நின்ற நாகத்தோடே
பிசகாமல் சூதமிடை சேர்த்திடாயே. (148)

நாகச் செயநீர்-

சேர்த்துமே உருக்கியெடு புட்டுப்போலே
செப்பமாய் வீரமது பாதிசேர்த்துக்
கார்த்துமே கல்வத்தி லரைத்துப்பாரு
கருத்தரிய செயநீராங் கண்டுகொள்ளு
பார்த்துமே பீங்கானி லிட்டு நீயும்
பனியிலே நாளேழு வைத்துப்பாரு
கார்த்தியேழ் கல்லுப்புக் கட்டியாகக்
கனிவாகக் கடல்நுரையை ஊதிக்கட்டே. (149)

உப்புச் செந்தூரம்.

ஊதியே வலுவாகக் கட்டிமேலே
உற்றுமே பெரியபுடம் போட்டெடுக்க
வாதியே தெறிப்படங்கிக் கட்டிப்போகும்
மகத்தான கல்வமிட்டு மார்க்கங்கேளு
சாதியே நாகத்தின் செயநீராலே
சரியாக அரைத்துவில்லை காயப்போடு
நீதியாய்க் காய்ந்தபின்பு சொல்லக்கேளு
நலமாக அகலிலிட்டுப் புடத்தைப்போடே. (150)

புடம்போட்டு நீயெடுத்து நாகச்செயநீர்
புகலாக அரைத்துமே வில்லைதட்டி
அடைவாக கதிரில்வைத்துக் காயப்போட்டு
ஆதியாய் முன்போலே புடமுமிட்டுத்

திடமாக யெடுத்துமே கல்வத்திட்டுத்
திட்டமாய் நாகத்தின் செயநீராலே
படமாக அரைத்துமே வில்லைதட்டிப்
பதியவே இப்படிக்குப் போட்டிடாயே. (151)

போட்டிடவே உப்புதான் சிவக்குமட்டும்
பொலிவாகப் புடம்போட்டு யெடுத்துக்கொள்ளு
நாட்டிலே சொல்லாதே சிவந்துபோகும்
நாதாந்த நபிமார்க ளாடும்உப்பு
கூட்டிலே கிளியடைத்த வாறுபோல
குணமாக நாகமது உப்பில்சேர்த்து
தாட்டிகமாய்ச் செந்தூர மாகும்பாரு
தக்கநபி மார்சொன்ன தன்மைதானே. (152)

தன்மையாய்ச் செம்புநூ றொன்றுருக்கித்
தடையறவே செந்தூரம் ஒன்றுதாக்கு
உண்மையாய் மாத்ததுவும் பத்துமாத்து
உலகத்தோர்க் காகுமிது உற்றுப்பாரு
வண்மையாய்ப் பணவிடைதான் தேனிலுண்ண
வடிவான காயமது யிரும்புபோலாம்
புண்மையாய் நோயெல்லாம் ஓடிப்போகும்
புகழான நரம்புகளு மிறுகும்பாரே. (153)

இறுகுமே செவ்வலரி போலாந்தேகம்
இருக்கவல்லோ புத்தியியல் பாகச்சொன்னேன்
பெருகவே செந்தூரந் தன்னையுண்டால்
பிலக்குமே தேகந்தா னிறுகியேறும்
கருகவே விந்திறுகும் நரையுமில்லை
காரணமாய் மலைபோலே தேகமாகும்
பருதிபோல் மேனியெல்லாஞ் சிவந்துமின்னும்
பாகமா யாகோபு பயின்றவாறே. (154)

வாறேது யென்றுக்கால் சொல்லக்கேளு
வடிவான கல்லுப்பைச் சுண்ணம்பண்ணக்
காறேது சாக்கெல்லாம் நொடியிற்கட்டும்
கைமுறையாய் நாகத்தைக் கவ்விக்கொள்ளும்

தாறேது சகலமெல்லாஞ் சித்தியாகும்
தடையில்லை யென்றுகொன்னர் நபிமாரெல்லாம்
கூறேது வாதமெல்லாங் கொள்ளைகொள்ளை
குடிபோகும் நசலெல்லாங் கூறெருணுதே. (155)

புத்தி கூறுதல்.

கூறுவே னுலகத்தில் வாதிமார்க்குக்
கொள்ளைசெய்ய வாதமது சுண்ணஞ்சொன்னேன்
நூறுக்கு ஒன்றுகொடு பழுக்கச்சொன்னேன்
நொடிக்குள்ளே தங்கம்வரும் பாகஞ்சொன்னேன்
தாரேது சவுக்காரச் சுண்ணஞ்சொன்னேன்
சஞ்சலங்க ளில்லாமல் தகமைகண்டு
ஊரேது பேரேது உற்றுரேது
உற்றுப்பா ரெல்லாமுஞ் சித்தியாமே. (156)

சித்தியா யிருப்பதற்கு வாதம்வேணும்
செய்முறையாய்ச் செய்கிறதுந் தீர்க்கம்வேணும்
பத்தியாய் நூலெல்லாம் படிக்கவேணும்
பலனுகச் சவுக்காரச் சுண்ணம்வேணும்
நத்தியே திரிவதற்குத் தங்கம்வேணும்
நானறிந்த நூல்களெல்லாம் நாட்டம்வேணும்
புத்தியே யரிவதுவும் நிலைத்துதானுல்
புகலரிய நபிமார்கள் தோன்றுவாரே. (157)

நபிமார்கள் சொல்லும்நேர்மை.

தோன்றுவார் நபிமார்கள் சொல்லும்நேர்மை
துணையான நூலதனைப் படிக்கச்சொல்வார்
கான்றுபார் கைபாக வரிசைசொல்வார்
காசினியி லிருந்துமே கருணைகூர்ந்து
வான்றுவா யுளராம லிருக்கச்சொல்வார்
வடிவான பொருளறிந்து வணங்கச்சொல்வார்
தான்றுமே சுண்ணங்கள் மிகவுஞ்சொல்லித்
தடையறவே யோகமதைச் சொல்லுவாரே. (158)

சொல்லுவார் உப்புக்குக் காரமெத்தச்
சுருதிதனை ஆராய்ந்து சுருக்கச்சொல்வார்
நல்லுவார் சவுக்கார வர்மஞ்சொல்வார்
நாடியே யெண்ணெய்தனை வாங்கச்சொல்வார்
கல்லுவார் பொருளைத்தான் காட்டுவார்கள்
கருத்திலுறை உபதேசம் கருதிச்சொல்வார்
வெல்லுவார் கோடிலெட்சந் தங்கஞ்செய்ய
விரும்பியே சொல்வார்கள் நபிமார்தானே. (159)

நபிமார்கள் மக்காவின் தேசந்தன்னில்
நாடியே சவுக்காரக் குருவைச்செய்து
துபியாகத் துருசதுவை நீற்றிக்கொண்டு
துப்புரவா யிரதமணி கட்டித்தேறி
வபியாக நவலோகந் தன்னிலீய்ந்து
வடிவாகப் பொருள்தேடி உண்பாரப்பா
கபியான விண்ணுமண்ணும் பொன்னேசெய்து
கருத்தாகச் செலவுசெய்வார் கண்டுபாரே. (160)

கண்டுபா ரண்டபகி ரண்டமெல்லாம்
கடந்துமே குளிகையிட்டு ஓடிச்சென்றேன்
பண்டுபார் மலைதோறும் நபிமார்கோடி
பதிவான மலையருகே தைக்கால்ரொம்ப
மூண்டுமே சித்துரெம்பக் கோடாகோடி
முனிவான அந்தந்த மலைகள்தோறும்
வண்டுமே நாதாக்கள் கோடாகோடி
வடிவான யாகோபு வகைசொன்னாரே. (161)

வகையாகச் சாஸ்திரங்கள் மெத்தவுண்டு
வடிவான சூத்திரமு மதனில்ரெட்டி
தொகையாக யெல்லாமுஞ் சுருக்கிப்பாத்துத்
துடிவாகச் சுண்ணமென்ற காண்டமாகப்
பகையாகக் கைபாக வரிசையோடே
படிப்படியாய்ச் சொல்லிவிட்டேன் பார்த்துத்தேறி
நகையாக உபபதுவை மறைத்துச்சொன்னார்
நாடியே வெளியாகச் சொன்னேன்பாரே. (162)

பாரென்ற நூல்களெல்லாஞ் சித்தர்தானும்
பதிவாக மறைத்ததென்ன வென்றாற்கேளு
காரென்ற மலைதோறுஞ் சித்தராவார்
கனிவாக யென்றுமே மறைத்துப்போட்டார்
தாரென்ற யென்னூலில் சுண்ணப்போக்குத்
தாட்டிகமாய்ச் சொல்லிவிட்டேன் தன்மையாக
வாரென்ற வழலையைத்தான் மூடிப்போட்டார்
மகிழ்வாக நான்சொன்ன வகையிதாமே. (163)

வகையாக சவுக்கார உண்டைசெய்து
வருதியாய்ச் சுத்திபண்ணிச் சுண்ணம்பண்ணி
நகையான கடுங்காரச் செயநீர்பண்ணு
நன்மைபெறக் கற்பூர உப்புப்பண்ணு
சிகையான வீரத்தைச் சுண்ணம்பண்ணு
சிறப்பாக வெடியுப்புச் செயநீர்பண்ணு
பகையான கல்லுப்புக் கட்டியாகும்
பதிவான வாதமிதி லடங்கிப்போமே. (164)

உப்பு மெழுகு.

அடங்கவே உப்பினுட மெழுகைக்கேளு
அடைவான உப்பதுவும் பலமுமொன்று
துடங்கவே குகையில்நின்று உறுகும்போது
துப்புரவாய்ச் சாரமது பலமுங்கால்தான்
மடங்கவே நீர்சென்ற வெங்காரந்தான்
வடிவான பலங்கால்தா னிறுத்துக்கொண்டு
தடங்கவே கெந்திபல மரைதான்போடு
தடையறவே சவுக்கார நீர்தான்வாரே. (165)

நீர்வார்த்துக் கலந்தரைத்து நெறியதாக
நிலவரமா யுண்டையது செய்துநீயும்
காரவே உப்புநின்று உருகும்போது
கனிவாக ஒவ்வொன்றாய்க் கொடுத்துவா நீ
பாரவே உண்டைதனைக் கொடுத்துமேதான்
பதிவாக மயினம்போல் பதமாய்நிற்கும்
தாரவே நவலோகம் நூற்றுக்கொன்று
தடையறவே கொடுத்திடவே தன்மையாமே. (166)

தண்மையாய்த் தசமாத்து ஆகும்பாரு
தாக்கான உப்புக்குங் காவிக்குந்தான்
உண்மையாய் ஓடாது புட்மிறங்கும்
உறுதிபெற வெகுதூரம் எட்டியோடும்
வண்மைய் மெழுகதனைக் குன்றியுண்ணு
வகைய்ாகப் பத்தியமா யுண்டுதேறு
கண்மையாய் நாற்பதுநா ளுண்டுதேறு
காரியமா யுள்ளரையில் வாழுங்காணே. (167)

காணவே யோகத்தைப் பார்த்துத்தேறு
கனிவான சட்டையொன்று தள்ளிப்போடும்
வாணவே சூரியசந் திரனேயென்பார்
வடிவான சூரியன்போல் திரேகமாகும்
தோணவே உலகத்தில் வாதமெய்தில்
துடியான எண்ணெய்யொடு பெண்ணைச்சேர்த்துப்
பாணவே அதரமுண்டு வருவானாகிற்
பலநினைவாய்க் கவலையுற்ற பாசமாமே. (168)

பாசமா மெய்தியே காயசித்தி
படிவாக வாதமதில் பலனுமேது
நேசமா யேறியே குளிகையோடு
நிலவரமாய்ச் சுண்ணங்கள் நிலைக்கப்பண்ணி
வாசமா யின்னூலில் உலகத்தோர்க்கு
வடிவாகச் சுண்ணமது பாடினேன்யான்
காசமா யெல்லோர்க்கும் வாதஞ்சொன்னேன்
கனிவான காயசித்தி கண்டுபாரே. (169)

கண்டுபார் உப்பென்ற சுண்ணமொன்று
கதிபெறவே அரைத்திடவே இடைசேர்சாரம்
பண்டுமே கல்வத்தி லரைநால்சாமம்
பதிவான சுண்ணமென்ற குகையில்வைத்து
வண்டுபெற ஊதிநல மாகத்தானும்
வகையாகக் கடுங்காரச் செயநீர்குத்தித்
துண்டுமே நாள்மூன்று மத்தித்தேதான்
துடியாகப் பனியில்வைக்கச் செயநீராமே. (170)

செய நீரா மின்னீரில் பெருமைதானும்
செப்பமாய்ச் சொல்லுகிறே னுற்றுக்கேளு
பய நீரா மின்னீரில் வீரச்சுண்ணம்
பதிவாக மத்தித்துப் பலந்தான்பூரம்
நய நீராம் ஒருநாள்பீங் கானிற்பூரம்
நலமாகச் செயநீரை அதிலேவாரு
கய நீரை மூன்றுநாள் நிழலில்வைத்துக்
கனிவாக அஞ்சுநாள் ரவியில்போடே. (171)

போட்டுமே அரைத்துநன்றாய் வில்லைதட்டிப்
போக்கோடே சவுக்காரச் சுண்ணம்பூசி
நாட்டுமே அஞ்சுசுண்ணக் குகையில்வைத்து
நலமாக ஊதிடவே கடுமையாகும்
காட்டுமே நபிமாரைத் தொழுதுபோற்றிக்
கணக்காகச் சுண்ணத்தைக் கனிந்து நீயும்
பூட்டுமே பனியில்வைக்கச் செய நீராகும்
பதிவான பூரமது பலந்தானென்றே. (172)

பலமாகத் தெளிவான சாரமொன்று
பத்தியொடு ரெண்டுமே கல்வத்திட்டு
அலமாக நெட்டடங்க மட்டுமாட்டு
அடைவாகச் சுண்ணாம்புக் குகையில்வைத்துக்
கலமாக மேல்மூடிச் சீலைசெய்து
கனிவாகப் புடம்போட வைத்து நீரும்
சலமாக ஆச்சரியம் பனியில்வைக்கச்
சரியான செய நீராம் தாக்கக்கேளே. (173)

தாக்கவே இன்னீரில் வீரச்சுண்ணம்
தனியாகக் கலக்கிமெள்ள வைத்துக்கொண்டு
ஏர்க்கவே சரக்கான அறுபத்துநாலும்
இதமாக நினைத்துமெள்ள வாட்டித்திரு
பார்க்கவே கட்டாகு மணியுமாகும்
பதிவான உபரசங்கள் லவணமெல்லாம்
ஆக்கினதோர் சோறதுபோ லாகும்பாரு
அடைவாகச் சணத்திலே சுண்ணமாமே. (174)

சுண்ணமாம் சுண்ணாம்பாய் வெந்துநீறும்
துடியான தாம்பூரஞ் சுண்ணமாகும்
எண்ணவே தங்கமது சுண்ணமாகும்
ஏழைபோ லிரும்புமுதல் லோகமெல்லாம்
திண்ணமாய் நீற்றிவிடும் மெழுகுமாகும்
தேசமெல்லாங் கண்டிட்டால் நீறிப்போகும்
பண்ணவே கதிரதுதான் கோடியாகும்
படிப்படியாய் யேறுமது பரிந்துதானே. (175)

பரிந்துமே வெள்ளையது நீறிப்போகும்
பதிவான தாளகந்தான் மஞ்சள்போகும்
விரிந்துமே கெந்தகந்தா னீறிப்போகும்
வேதாந்த வீரமது குருவுமாகும்
கரிந்துமே லிங்கமது கட்டும்நீறும்
கனிவான மெழுகாகும் வேதையாகும்
தரிந்துமே கல்லுப்பு மணியுமாகும்
தாக்கிடவே உபரசங்க ளீயமாமே. (176)

ஈயமாந் தொடுமுன்னே சூதமாகும்
இதமாக விரைச்சுமே போகுங்கண்டீர்
நாயமார் சொன்னபடி நிமிளைவெள்ளை
நலமாக நூற்றுக்கோ ஒன்றுகாட்ட
மாயமாய் வாங்கியது தங்கமாகும்
மாசற்ற லோகமெல்லா மேமமாகும்
காயமது நிலைத்துமே கற்றூணாகும்
கண்டுரைத்தார் யாகோப்பு கருணைதானே. (177)

கருணையாய்த் தங்கமது ஆச்சுதென்றால்
கனிவாகப் புளகிக்க வேண்டாம்பாரு
வருணையாய் நபிமாரை வணங்கியேறு
வடிவான பொருளாகும் வலுமைமெத்த
தருணையாய் மகமதுவைப் போற்றிசெய்து
தாட்டிகமாய் வழியாறு தலத்திலேறி
அருணையாய்த் தமர்வாச னுள்ளேபுக்கி
அடைவாகச் செய்திடவே ஆகியாமே. (178)

ஆதியாம் பூரமென்ற நீரிலேதான்
அடைவாகத் தாளகத்தைச் சுருக்குத்தாக்கு
சோதிபெறச் சவுக்காரச் சுண்ணம்வீரம்
துடியாகப் பூரமென்ற சுண்ணமூன்றும்
ஆதியே வெடியுப்பு நீராலாட்டி
அப்பியே தாளகத்தில் ரவியிற்போட்டுச்
சாதியாய்ச் சுண்ணாம்பாம் குகையில்வைத்துச்
சரியான மண்செய்து ஊதிடாயே. (179)

ஊதிடவே சுண்ணாம்பாந் தாளகந்தான்
உற்றதோர் வீரமது கூட்டியூது
நாதிடவே மத்திச்சு வங்கத்தப்பி
நலமாகச் சுண்ணமென்ற அண்டச்சுண்ணம்
கோதிடவே வங்கத்திற் கவசஞ்செய்து
குகையிலிட்டுக் காயவைத்தே யெடுத்துக்கொண்டு
காதிடவே குகையில்வைத்து ஊதிநன்றாய்
கனமாக மேற்கட்டி ஊதிடாயே. (180)

ஊதிடவே வங்கமது நீறிப்போகும்
உற்றுமே கடுஞ்சுண்ண மாகும்பாரு
நாதிடவே வாதமென்ற கடைதிறக்கும்
நலமான திறவுகோ லாகும்பாரு
காதிடவே சின்னமென்ற வேங்கைபோலாம்
கனிவான ஆடுபோற் கலங்கிநிற்கும்
பாதிடவே சூதமது உண்டையாகும்
பதிவான துரையாகும் பலனுமாமே. (181)

பலனாகத் துருசியது பலந்தான் தூக்கிப்
பக்குவமாய்ப் பூரநீர் தன்னில்தோய்த்து
செலமாக ரவிதனிலே காயப்போடு
சிறப்பாக ஏழுநா ளானபின்பு
நலனாகச் சவுக்காரச் சுண்ணமொன்று
கனிவாக வீரமென்ற சுண்ணமொன்று
வலனாக வங்கமென்ற சுண்ணமொன்று
வகையான சீனமொரு காசுதானே. (182)

தானென்ற புழுகோடு உரமுங்கூட்டித்
தடையறவே கடுங்காரச் செயநீரிட்டு
வானென்ற துருசின்மேல் கவசங்கட்டி
வகையான சுண்ணம்புக் குகையில்வைத்துக்
கானென்ற மேல்மூடிச் சீலைசெய்து
கனிவான கெசபுடத்திற் போட்டெடுத்துப்
பானென்ற கவசத்தை உடைத்தெடுக்கப்
பக்குவமாய்க் கடுஞ்சுண்ண மாகுந்தானே. (183)

ஆகுமே துருசுமது குருவுமானால்
அண்டாண்ட கடாகமெல்லாங் கிழித்து ஆடும்
தாகுமே மூச்சிடுமுன் சூதங்கட்டும்
தடையறவே சவ்வீர மெழுகுமாகும்
ஏகுமே அண்டமெல்லா மெழுகுமாகும்
இதமான பாசாணக் குலங்களெல்லாம்
ஆகமாய் யெண்ணெய்போ லாகுப்பாரு
அன்பாகப் பரிநீறும் வெள்ளிநீறே (184)

வெள்ளியே நீறிடவே கவரோகோடி
வேதையிதில் அளவாகச் சொல்லப்போகா
தள்ளியே குறுக்குந்தான் அநேகங்கோடி
தயாநிதியாம் நபிமோர்கள் சொன்னபுத்தி
வள்ளியது கொடிபோலே படருப்பாரு
வகையான சுண்ணமென்ற குகைகளெல்லாம்
அள்ளியே உண்டதுபோல் கோடிதொந்தம்
அடைவாக யாகோபு அரைந்தார்தாமே. (185)

சாரக் கட்டு.

தாமேதான் சாரமொரு கட்டுச்சொல்வேன்
தாட்டிகமாய்ச் சாரமது பலமும்பத்து
வாமேதான் சாரத்தை யண்டம்போல
வகையாகச் சீவியே சொல்லக்கேளு
தாமேதான் அபினியொடு மிளகுபூரம்
நலமாக மேனிச்சார் விட்டு ஆட்டிக்
காமேதான் சாரத்தின் மேலேகட்டி
கனிவாக அரக்குப்போல் இளக்கிடாயே. (186)

இளக்கியே வங்கத்தைக் கணக்கவிட்டு
இதமாகக் குறட்டாலே பிடித்து நீயும்
தளக்கமா யுருகையிலே தோய்த்துவா நீ
தாட்டிகமா யேழுதரந் தோய்த்து நீயும்
வளக்கவே சாரமது சுத்தியாகும்
வகையான சவுக்காரம் வீரத்தோடு
களக்கவே பூரமொடு மூன்றுந்தானும்
கனிவாக வெடியுப்பு நீரைவாரே. (187)

வார்த்துமே நாலுநா ளாட்டு நீயும்
வடிவாகச் சாரத்தின் மேலேபூசிக்
காத்துமே அஞ்சுசுண்ணக் குகையில்வைத்துக்
கனிவாகப் புடம்போட்டு யெடுத்துப்பாரு
நாத்துமே தவளம்போல் நீறுமாகும்
நாடியே கல்வமிட்டு வெடி நீராலே
பார்த்துஒரு சாமம்அரை பனியில்வைக்கப்
பத்தியாய்க் கடுங்காரச் செய நீராமே. (188)

நீராகுஞ் சரக்குகளில் சுருக்குப்போட்டால்
நிமைக்குமுன்னே கட்டிவிடும் நிலைமையாகும்
ஆராகு மெழுகாகும் வேதையாகும்
ஆசையா யெண்ணுதே கற்பமுண்ணு
வாராகும் அருணனைப்போல் சிவப்பேயாகும்
வடிவான காயமது கற்றூணாகும்
காராக யின்னீரி லனந்தங்கோடி
காட்டுமுன்னே வேதையாங் கண்டுபாரே. (189)

கண்டுபார் செய நீரில் வீரச்சுண்ணம்
கசகாமற் பூரமென்ற சுண்ணமொன்று
கண்டுபார் சவுக்காரச் சுண்ணமொன்று
கலந்தந்தச் செய நீரில் படிகமேலே
வண்டுமே தினந்தோறும் தோய்த்துத்தோய்த்து
மகத்தான ரவிதனிலே யேழுநாளும்
தொண்டுபடப் போட்டுமே யெடுத்து நீயும்
துணையாக வெடியுப்புச் சுண்ணம்பூசே. (190)

பூசியே அஞ்சுண்ணக் குகையில்வைத்துப்
போக்கோடே புடம்போடப் பொருமி நீறும்
ஆசியதைக் கடுங்காரச் செயநீர்குத்தி
அப்பனே பனியில்வைக்கச் செயநீராகும்
தேசியதைச் சரக்குகளிற் சுருக்குப்போடச்
செயமான மெழுகாகும் வேதையாகும்
ஆசியதை யெண்ணாதே கற்பமுண்ணு
அருணனைப்போல் சிவப்பாகும் காயந்தானே. (191)

காயந்தா னாகுமது செயநீர்தன்னில்
கடிதான வீரமது சுண்ணம்போட்டு
தாய்மார் சொன்னபடி பூரமொன்று
நாடியே சவுக்காரச் சுண்ணமொன்று
தாயகமாய்க் கலந்தந்தச் செயநீரில்தான்
தடையறவே படிகையைத் தோய்த்துப்போட
வாயகமாய்த் தினந்தோறும் தோய்த்துத்தோய்த்து
வடிவான ரவிதனிலே யேழுநாளே. (192)

ஏழுநாள் போட்டபின்பு யெடுத்து நீயும்
இதமாக வெடியுப்புச் சுண்ணம்பூசித்
தாழுமே அஞ்சுசுண்ணக் குகையில்வைத்துத்
தாட்டிகமாய்ச் சீலைசெய்து புடத்தைப்போடு
காழுமே யெடுத்துப்பார் சுண்ணமாகும்
கைத்துமே கடுங்காரச் செயநீர்குத்தித்
தாழுமே சமனாகச் சாரஞ்சேர்த்துத்
தப்பாமற் பனியில்வைக்கத் தன்மைதானே. (193)

தானென்ற பனியில்வைக்கச் செயநீராகும்
தனியான நீராலே பாஷாணங்கள்
வானென்ற கட்டாகு மெழுகுமாகும்
வடிவான கரையில்லை துறையுமில்லை
பானென்ற நீரிலே வீரச்சுண்ணம்
பதிவான பூரமென்ற சுண்ணமிட்டுக்
கானென்ற நீரிலே கலக்கிவைத்துக்
கடுஞ்சூடன் பலமொன்றில் நீரைவாரே. (194)

வார்த்துமே மூன்றுநா ளிருத்துவைத்து
வடிவான யேழுநாள் ரவியிற்போடு
கார்த்துமே கல்வத்தி லிட்டுநீயும்
கனிவாக அரைத்துமே வில்லைதட்டிப்
பார்த்துமே உலரவைத்துப் பின்புநீயும்
பதிவாகக் கல்லுப்புச் சுண்ணம்பூசிச்
சாத்துமே அஞ்சுசுண்ணக் குகையிலிட்டுச்
சாதகமாய் மூடியே புடத்தைப்போடே. (195)

புடம்போடப் பூப்போலே சூடன்சுண்ணம்
போக்கோடே பீங்கானி லெடுத்துவைத்து
அடமாகக் கடுங்காரச் செயநீர்குத்தி
ஆதியாம் அண்டத்தை மேலேபூசிக்
கடம்போடு செந்துருக்க மதுக்குள்ளிட்டுக்
கனிவாக ரவியில்வைத்துப் பின்பு நீயும்
நடம்போடு சேவலென்ற புடமுமிட்டால்
நாடியே கடுமையாய் நீறிப்போமே. (196)

நீறியே போனவுடன் வீரச்சுண்ணம்
நேர்பாகச் சாரநீர் விட்டுஆட்டி
மாறியே நிமிளையின்மேற் கவசங்கட்டி
மகத்தான சுண்ணாம்புக் குகையிலிட்டுக்
காரியே புடம்போடப் பூப்போலாகும்
கனிவான கடுங்காரச் செயநீர்குத்திப்
பாரியாம் அண்டத்தின் மேலேபூசிப்
பதிவாகப் புடம்போட நீறுந்தானே. (197)

நீறுமே சுண்ணமதைக் கல்வமிட்டு
நிலையான வீரமொன்று சுண்ணமிட்டுக்
காறுமே சாரமென்ற நீர்விட்டாட்டிக்
கனிவான நிமிளையின்மேல் கவசங்கட்டி
வாருமே அஞ்சுசுண்ணக் குகையிலிட்டு
வளமாகப் புடம்போடக் கடுமையாகச்
சாருமே பூப்போலே நிமிளைதானும்
தடையறவே நீறிடுமே தன்மைதானே. (198)

தண்மையாய் நிமிளையது நீறினக்கால்
சதகோடி வேதையுமாம் தாக்கிப்பாரு
வண்மையாய் நிமிளையது சுண்ணந்தன்னில்
வடிவாகப் பூரமென்ற சுண்ணமிட்டுக்
கண்மையாய் இரண்டரைநாள் சாரநீரால்
கனிவாக அரைத்துமே தங்கத்தப்பி
வண்மையாய் அண்டமென்ற சுண்ணங்கட்டி
வடிவாகக் கெசபுடத்திற் போட்டிடாயே. (199)

போட்டுயெடு பரிதானுஞ் சுண்ணமாகும்
போக்கதிலே வாதமடை திறந்துபோகும்
நாட்டுமே கைக்குள்ள குருவிபோலே
நாடியே சுத்திவிடும் வாதம்பாரு
கூட்டுமே நவலோக மெல்லாந்தானும்
கொள்ளையாய்ப் பழுத்துவிடும் குறிதானப்பா
பாட்டுள்ளே தங்கந்தான் சுண்ணமாகும்
பாதையிதில் ரெம்பவுண்டு பரிசுதானே. (200)

பரிசுதான் தங்கமென்ற நீறினாலே
பாதையிது வெகுபாதை பகரப்போகா
நரிசுதான் சூதமது கட்டிப்போகும்
நலமான அருசதுவும் நீறுமாகும்
புரிசுதான் நவலோக மெல்லாம் நீறும்
போக்கோடே செய்தாக்கால் புதுமைமெத்த
வரிசையாய்த் தேகமது கற்றூணாகும்
வடிவான சித்தியெல்லாந் தங்கமாமே. (201)

தங்கமாந் தாயைவைத்து வாதம்பாரு
தனியாகப் பழுத்துவிடும் தன்மையுண்டாம்
பொங்கமாம் விந்துவினற் சடமுமாச்சு
போக்கோடே பாராட்டா லிருளுமாச்சு
சிங்கமது புதைதனிலே யிருந்தாற்கேளு
சிறக்கவே மனிதற்குப் பயமுந்தோணும்
பங்கமது வாராமற் தங்கத்தாயைப்
பாரித்துச் செய்தாக்காற் பலனுமாமே. (202)

வெங்காரக் கட்டு.

பலனாக வெங்காரக் கட்டுக்கேளு
பதிவாக யிதன்பெருமை நபிமார்சொன்னார்
அலனாகச் சரக்கெல்லா மிதனாலல்லோ
ஆடவே சித்திக்கு மிதுதானாதி
பிலனாக லோகங்கள் கம்மித்தென்றால்
பிலக்கவே இதை நீட்டக் கசடுமற்றுத்
தலமாகக் கண்விட்டு ஆடுமாடும்
தடையறவே யெல்லாமுங் காரத்தாட்டே. (203)

ஆட்டான காரத்தின் பெரியபோக்கை
அல்லாவு மகமதுவு மறிவாரப்பா
நீட்டான காரத்தைக் கைவிட்டாக்கால்
நிலைதப்புங் கசடறு நிலைக்காச்சத்து
பூட்டான பூட்டதுபோல் காரமாகும்
புகழ்பெரிய நபிமார்க ளாடுமாட்டு
தாட்டாண்மை தள்ளியே காரந்தன்னைத்
தாக்கியெடு பலம்பத்து தண்மையாமே. (204)

தண்மையாய்ப் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
தாட்டிகமாய்ப் பலகைபோ லெடுத்துக்கொள்ளு
உண்மையாய் ஆவெருதின் சாணிதன்னில்
உருகியாய்க் கழுவியே காயப்போடு
கண்மையாய்ச் சவுக்காரச் சுண்ணம்வீரம்
கனிவான பூரமொடு மூன்றுங்கேழு
வண்மையாய்க் களஞ்சரைதான் தூக்கிக்கொண்டு
வடிவாக மத்திக்கச் சாரநீரே. (205)

சாரமென்ற நீரிலே மத்திச்சப்பா
சரியாக யேழுநாள் ரவியிற்போடு
பாரமாங் காரமாய் வெளுத்து நிற்கும்
பதிவான பூனைக்கண் ணொளிவுதோணும்
காரமாம் நாகமொன்று சூதமொன்று
கடிதாக உருக்கிடவே புட்டுப்போலாம்
தேரமாய் வீரத்தைப் பாதியிட்டு
நிலையாகக் கல்வத்தி லரைத்திடாயே. (206)

அரைத்திடவே செயநீரா மிந்தநீரை
அடைவாக வெங்காரந் தனிலேயிட்டுப்
பரைத்திடவே அரைத்துவில்லை திரிஞற்காயப்
பகரவே ஓட்டில்ரவி புடமுமிட்டு
வரைத்திடவே யெடுத்துமே கல்வத்திட்டு
வகையாக நாகத்தின் செயநீராலே
தரைத்துமே அரைத்தவில்லை காயவைத்துத்
தாட்டிகமாய் முன்போலே புடமும்போடே. (207)

போட்டுமே செந்தூர மாகுமட்டும்
போக்கோடே அருணனைப்போற் சிவந்துதானுல்
நாட்டிலே சொல்லாதே செம்புநூறு
நலமாக உருக்கியே ஒன்றுயிய
வாட்டமுடன் தங்கமது வாகும்பாரு
வழியோடே தங்கமது பச்சையாகும்
தேட்டமுடன் யெடுத்துமே வித்துநீயும்
திடமாகப் பள்ளியைத்தான் கட்டிடாயே. (208)

கட்டியே அல்லாவுந் துணையேசெய்வார்
கசடாக யிருந்தாலோ பலித்திடாது
பட்டிவைத்த செயநீரா லனேகவித்தை
பாலித்தேன் யாகோபு பரிவுமெத்தத்
திட்டிவைத்த வாசல்போல் காணும்நேர்மை
செகசால மாடலாம் சுண்ணப்போக்கு
வட்டிக்கி வாங்கினது போலவாகும்
வண்மையா யாகோபு வழி சொன்னுரே. (209)

சொன்னதொரு வெங்கார செந்தூரத்தைச்
சுயமாகப் பணவிடைதான் தேனிலுண்ணக்
கன்னல்போல் மேனியாம் கண்டுதானும்
கரும்பொன்போ லிருக்குமது கள்ளமில்லை
நன்னயமா யொருவருக்குஞ் சொல்லவேண்டாம்
நானிலத்தில் பகரரிது நாட்டமுள்ளோர்
இன்னதென்று அறியாத மூடருக்கு
இதமாக உரைக்காதே இயல்புள்ளோரே. (210)

இயல்பாகச் சார நீர்க் குள்ளேவாவா
இன்பமாய்ச் சவுக்காரச் சுண்ணமிட்டுக்
கயல்பாக வீரமிட்டுப் பூரமிட்டுக்
கனிவாகப் பீங்கானில் வாங்கிக்கொண்டு
நயமாக அண்டமது அன்பத்தொன்று
நாடியே மஞ்சளாங் கருவைவாங்கித்
தயவாக யித்துளைச் சட்டியிட்டுத்
தன்மையா யடுப்பேற்றி யெரித்திடாயே. (211)

எரித்துமே வருத்துயெடு கருகத்தானே
இயல்பாகக் கருகவே தயிலமாகும்
தரித்துமே தயிலமது படிதானென்று
சட்டியிலே யிலுப்பெண்ணெய் படியும்விட்டுக்
கரித்துமே பக்குவமா யெரித்தபின்பு
கனிவாக யிருந்துமே காரம்போட்டுப்
பிரித்துமே அப்பிரகம் பலந்தான்ரெண்டு
பிரிவான காந்தமது பலமும்ரெண்டே. (212)

ரெண்டாகக் கருவளையல் பலமும்ரெண்டு
நேராக யிதுவெல்லாங் கூடப்போட்டு
வண்டாக அண்டத்தின் தயிலங்குத்தி
வடிவாக மண்ணாலே குகைதான்பண்ணி
துண்டாகச் சுட்டெடுத்து வைத்துக்கொண்டு
துடியான தைலத்தை உட்குகையில்பூசி
பண்டாக நாகமொரு பலந்தானிட்டுப்
பரிவாகப் பெருங்குகைக்குள் உருக்கிடாயே (213)

உருக்கிடவே சாரத்தின் பொடிமேற்றூவி
உருகையிலே நாகமது கண்விட்டாடும்
பருக்கிடவே மருந்திட்ட குகையிலூத்து
பதிவாக வார்க்கையிலே தயிலங்குத்திச்
சுருக்கிடவே சாரத்தில் குத்திவாரு
சுளிவான வில்லையா யிருக்கும்பாரு
முருக்கிடவே யிப்படிக்கு ஐம்பத்தொன்று
முடிவாக உருக்கியே சாய்த்திடாயே (214)

சாய்த்திட்டுக் கரியில்வைத்து உருக்கிப்பாரு
சமாசமாய்ப் புகையெல்லாங் கட்டிப்போகும்
வாய்த்திட்டுக் கரியில்நின்று பொன்போலாடும்
வடிவான வாதமடை திறக்குங்கண்டீர்
ஏய்த்திட்டுத் திரியாதே வாதமெல்லாம்
இறைக்கிறைக்கக் கேணிபோ லிருக்கும்பாரு
ஆய்த்திட்டுத் தங்கமது எளிதிலாகும்
ஆதிநபி தனைவணங்கி யாடிப்பாரே (215)

ஆடியே நாகமது கட்டிற்றுனல்
அண்டபா தாளமெல்லாந் தாண்டியோடும்
ஓடியே பணபேதி சணபேதிதானும்
ஓகோகோ வெகுஆட்டம் அனேகவித்தை
பாடியே திரியாதே சொல்லக்கேளு
பதிவான நபிமார்கள் கண்டுகொள்வார்
சூடியே திரிந்தாக்கா லெல்லாமாகும்
சுடிகையாய்க் கைமுறையைக் கண்டுபாரே. (216)

நாகச் செந்தூரம்.

கண்டுபார் கட்டினதோர் நாகந்தன்னைக்
கனிவாகப் பலமுருக்கு முகத்தில்தானும்
தொண்டுமே யிடைக்கிடைதான் தங்கமீயத்
துடியாகப் புட்டுப்போல் நொருங்கி நிற்கும்
வ்ண்டுமே ரெண்டுமொன்று யுருக்கிக்கொண்டு
வடிவான சூதமொரு டலத்தையீயப்
பண்டுமே தூளாக உடைந்துபோகும்
பாதையிதில் வெகுபோக்குப் பரிசுதானே. (217)

பரிசாகச் செவ்வல்லிப் பூச்சார்விட்டுப்
பாகமா யரைத்துநா ளேழதாக
விரிவாகக் கெந்தகந்தான் பலமுமிட்டு
விடுதிபெற அரைத்துமே சொல்லக்கேளு
சரியாகக் காசியென்ற குப்பிதன்னில்
தனையெடுத்துப் பனிரெண்டு சாமந்தானும்
கரியாக யெரித்துயெடு செந்தூரமாகும்
கனிந்துமே நபிமாரைத் தொழுதுபோற்றே. (218)

தொழுதுமே நபிமாரைப் பணிந்துபோற்றித்
தோய்வுதர நவலோகம் நூற்றுக்கொன்று
பழுதுவரா திதைக் கொடுக்க மாற்றுக்கேளு
பசுமையா யிருபத்து ஐந்துமாற்று
உழுதுமே நடவுதட்டால் பலனுண்டாகும்
உற்றுமே வெள்ளியது யிடையேசேர
அழுதுவிட்ட பிள்ளைக்கா தரவுபண்ணும்
அழுகாத பிள்ளைகதை ஆகுந்தானே. (219)

ஆகுமே செந்தூரங் குன்றியுண்ண
அன்பாக மண்டலத்திற் காயசித்தி
ஏகுமே பழவினைக ளெல்லாமேகும்
எனையாண்ட நபிமார்கள் சொன்னநேர்மை
பாகுபெற இக்காண்டந் தனிலேசொன்னேன்
பாதைக்கு வெகுபெலனும் பாரிலோர்க்குத்
தாகுமே யெல்லாமும் நாகத்தாலே
தனியான நாகமென்ன சொர்ணந்தானே. (220)

சொர்ணமாம் நாகத்தின் பெருமைதன்னைச்
சொல்லுதற்கு நாவினுல் முடியாதப்பா
வர்ணமாம் நாகமது பொன்னுக்காதி
வடிவான செயநீருக் காதியாகும்
பறணமா யாதியல்லோ செய்யவேணும்
பாதையிதில் வெகுபோக்குப் பதிவுமாகும்
திறணமாம் வாதமது யேவல்கேட்கும்
திடமாக முப்பூவின் பொருளைக்காணே. (221)

பொருளாவ தேதென்றூற் சொல்லக்கேளு
போக்கோடே அல்லாவைத் தொழுதுநீற்போர்
அருளான நபிமார்கள் பொருளுமாகும்
அடைவான முகமதுவின் பொருளுமாகும்
வருமளவும் பேர்ருளெல்லாம் வாதமாகும்
வடிவுபெறச் சுண்ணமது பொருளுமாகும்
உருவாகச் செய்ததுவும் பொருளுமாகும்
உற்றுணர்ந்த பொருளதுவும பூநீர்தானே. (222)

தானென்று முன்சொன்ன செந்தூரத்தைத்
தடையறவே பணவிடைதான் மண்டலத்தில்
கானென்று உண்டுமே பாரு நீயும்
கனிவான சட்டைதள்ளும் நோயும்போகும்
வானென்ற சட்டைகக்கும் பிணியெல்லாம்போம்
வடிவான காயமது யிருகியேறும்
கானென்ற சிலைபோலே தேகமாகும்
கருத்துற்று யாகோபு கருச்சொன்னேனே. (223)

சொன்னதொரு நாகத்தின் சுண்ணப்போக்குச்
சொற்பெரிய சவுக்காரச் சுண்ணப்போக்கு
நன்னயமாய்ச் சொல்லிவிட்டே னுடித்தேர்ந்து
நலமாக நாகத்தின் ஆட்டங்கண்டு
இன்னிலத்தி லிருக்குமட்டும் வாதப்போக்கை
இருந்தயிடந் தன்னிலே யிருந்துசெய்து
முன்பின்னாய்ச் செய்திட்டால் முறிந்துபோகும்
முடியமட்டும் யோசனைகள் பண்ணித்தேரே. (224)

பண்ணியே செந்தூரம் உண்ணும்போது
பதிவாக ஒருவரிடம் பேசிடாதே
கண்ணியே கள்ளுடனே அபினிகஞ்சா
கனிவான சாருயம் போதையெல்லாம்
தண்ணியே நிறுத்திவிட்டு உண்டுதேறு
தடையறவே சொல்லாதே தாக்கியாடு
புண்ணிலே கோல்விட்டாப் போற்சொல்லாதே
போக்கோடே தருமத்தைச் செய்வாய்நீயே. (225)

சூதக்கட்டு

செய்திடவே நாகமொரு பலத்தில் நீயும்
செயமாகத் தகடாக்கிப் பூசக்கேளு
கைதிடவே வீரமென்ற சுண்ணந்தன்னைக்
கடிதாக அரைத்துமே பூசி நீயும்
வைதிடவே அரைத்துமே பூசிப்பூசி
வளமாக ஓட்டிலிட்டுப் புடமுமிட்டால்
கைதிடவே சுண்ணும்பாம் நாகந்தானும்
தடையில்லை பாசாணஞ் சாகுந்தானே. (226)

சாகுமே சூதமது கட்டிப்போகும்
சமுசயங்க ளொண்ணுதே சொல்லக்கேளு
வாகுபெற வீரமது மணியுமாகும்
வடிவான லிங்கமது கட்டிப்போகும்
தாகுபெறச் சரக்குகளிற் பூசிவாட்டத்
தடையற்றுச் சரக்கெல்லா மணிபோலாகும்
பாகுமே நாகத்தின் ஆட்டந்தன்னைப்
பதிவாக நபிமார்க்குப் பழக்கினாரே. (227)

பழக்கமாய் யிருக்கவல்லோ சுண்ணஞ்செய்து
பாதைரெம்பப் பார்த்திடவே வேதையாகும்
இழுக்கென்று சொல்லாதே சித்திமுத்தி
இதமாக ஒருவருடன் பேசவேண்டாம்
சழுக்கென்று நாய்போலே திரியவேண்டாம்
சாடியே வாதமது தங்குங்கேளு
முழுக்கமாய்த் திரியாதே கலங்கம்பாரு
முடிவாக வதின்பின்னே சுண்ணமாமே. (228)

சுண்ணமா மிப்படிக்குப் பார்த்துத்தேற
தொடுகுறிபோ லெல்லாமுந் தோணுந்தோணும்
தன்னயமாய்த் தொட்டதெல்லாம் சித்தியாகும்
நபிமார்க ளறிந்திடுவார் வாதப்போக்குக்
கன்னல்ருசி யறியாத காமவாதி
கனிவாகப் பொய்யென்று சொல்வாரப்பா
இன்னிலத்தி லிருக்குமட்டும் வாதம்பார்த்து
இதமாக உண்டிடவே உறுதியாமே. (229)

உறுதியாம் நாகம்போற் காரியத்தை
உற்றுமே செய்தெடுத்துக் களங்கம்வந்த
அறுதியா யிடந்தனிலே சேர்த்திருக்க
அடைவான செம்பைத்தான் பிடித்துக்கொள்ளும்
வருதிபட யில்லாதே போனாற்கேளு
வகையாக வருகாது செம்புமார்க்கம்
பருதிகண்ட பனிபோலாம் இந்தவித்தை
பாதைக்கும் நில்லாது பரிந்துபாரே. (230)

நூற்கோர்வை

பரிந்துபார் வயித்தியந்தான் யெழுநூறுதன்னில்
பதிவாகச் செம்பெடுக்கப் புதிவாய்ச்சொன்னேன்
விரிந்துமே பஞ்சமித்திர முந்நூறுதன்னில்
விதமான காரியஞ் சொன்னேன்பாரு
மூரிந்துமே போகாமல் பதினாறுதன்னில்
மூடியவே யிடைபாகம் சொன்னேன்பாரு
அறிந்துமே ஐம்பத்து ஐந்துதன்னை
அடைவாகச் சோதித்துக் களங்குசெய்யே. (231)

செய்யவே களங்குமுந் நூறும்பாரு
செயமான ரெண்டான வேலைதானும்
பையவே சத்தாகும் சத்தைத்தானும்
பதிவாகச் செம்பெடுக்கும் பாகம்பார்த்து
நைதுமே வெள்ளியது பழுக்கச்செய்து
நாடியே விற்றுமே செலவுசெய்து
எய்யவந்த கணைபோலே பின்பு நீயும்
இதமான சுண்ணத்தைப் பார்த்திடாயே (232)

வங்கச் சுண்ணம்

பார்த்திடவே பலனாகும் பொருளுமாகும்
பதிவான காரீயச் சுண்ணங்கேளு
நாத்திடவே காரீயம் பலமும்பத்து
நலமான அயங்கரண்டி தன்னிலிட்டு
ஏத்திடவே அருத்தினி லுருக்கிப்பாரு
இதமாக உருகியது ஆடும்போது
வாத்திடவே வெடியுப்பு அஞ்சாங்காய்ச்சல்
வகையாகப் பலம்பத்து யெடுத்துக்கொள்ளே. (233)

எடுத்துமே உருகையிலே போட்டுப்போட்டு
இதமாகக் கிண்டிவா சலாகையாலே
அடுத்துமே சாமந்தானபின்பு
அடைவாகச் சிவந்துவரு மஞ்சளாகும்
தொடுத்துமே பாகமது வழித்தெடுத்துத்
தோய்வுகாரக் கல்வமிட்டு மஞ்சள் தன்னைப்
படுத்துமே இளைத்துவிடு வங்கச்சுண்ணம்
புதிவாக மஞ்சள்தனில் போட்டுப்பாரே. (234)

போட்டிடவே யுண்ணிரெத்தம் போற்சிவந்தால்
பொருளான சுண்ணமாம் புவியுள்ளோர்க்கும்
காட்டிடவே வங்கத்தின் சுண்ணம்நேரே
கனிவான சாரத்தை யிடையேகூட்டி
மாட்டியே அரைத்திடவே சலமதாகும்
மதியான பனியில்வைக்கச் செயநீராகும்
நாட்டிடவே வீரமிட்டுப் பூரமிட்டு
நலமாகச் செயநீரை அரைத்துக்கொள்ளே. (235)

கொள்ளவே பாசாண மறுபத்திலும்
கொள்கையால் சுருக்கிடவே கட்டிப்போகும்
நள்ளவே வாட்டிட நீ சரக்செல்லாந்தான்
நாடியே கட்டி நின்று உருகியாடும்
வள்ளவே ஆடினதோர் பாசாணத்தில்
வகைவகையாய்த் தனித்தனியே வேதையாகும்
உள்ளவே வங்கத்தின் பெருமைதன்னை
ஒருவரால் அளவிடவும் போகாதென்னே. (236)

போகாது கைபாக வரிசையாகப்
போக்கோடே செய்துவரப் புகழுண்டாகும்
வாகாகச் சூதத்தைக் கட்டிப்பாரு
மணியான பிற்பாடு தங்கஞ்சேரு
ஏகாமற் சுண்ணத்தை யேத்திப்பாரு
இதமாக நவலோகந் தன்னிலீய்ந்து
பாகாமல் வாதியென்ற பேரெடுக்கப்
பலனாகும் இம்முறையைச் செய்துபாரே. (237)

செய்துபார் புத்தியுள்ள வாதிதானும்
செகந்தனிலே அலையாமல் ஒருவேலைகண்டு
பைதுமே படித்திடுவார் பலனைக்காண்பார்
படபடப்பாய்த் திரியாமல் பதத்தில் நிற்பார்
நைதுமே பதமறியார் நூல்கள்காணார்
நலமாகக் கேட்டுமே செய்துபார்த்து
கைதவறுய்த் தொட்டதெல்லாங் கரியாய்ப்போகக்
கணக்கன்றிச் சொல்லியே புலம்புவாரே. (238)

11064

புலம்பாமல் அல்லாவை மூன்றுநேரம்
பிரியமாய்க் கால்மடித்துத் தொழுது நீயும்
அலம்பாமல் நினைவுதனை மேலேயேத்தி
அடைவாகக் கையைத்தான் மடித்துயேத்திக்
குலம்பாகத் தொழுதுமே யிருந்து நீயும்
குணமாகப் பின்புதான் களங்கைப்போற்றிப்
பலமாகப் பாகமாய்ச் செய்துகொள்ளு
பதிவாகச் சித்தியாம் பயின்றிட்டேனே. (239)

பயின்றிட்டேன் பாகம்வந்தால் தங்கமாகும்
பதிவான தங்கத்தை அல்லாவைப்போல்
நயின்றிட்டுத் தொழுதுமே போற்றி நீயும்
நலமாக ரெம்பத்தான் செலவுசெய்யா
அயின்றிட்டுக் கணக்காகச் செய்துகொண்டு
ஆகிநீ யாகவே யிருந்துவாழு
குயின்றிட்டுத் திரியாதே செல்லாதென்று
கூறினார் யாகோபு குணமதாமே. (240)

உப்புக் கட்டு.

குணமாக யின்னமொரு உப்புக்கட்டு
கூறுகிறேன் நபிமார்கள் கூறக்கேட்டு
மணமாக வெகுதூரம் யெட்டி ஓடும்
வடிவான யிந்தஉப்பு உயர்த்திமெத்த
பணமாகப் பலனாலி யில்லையில்லை
பாடினதால் சித்தரென்மேல் பகையுமானார்
மணமாகச் சவுக்காரச் சுண்ணமொன்று
கலருசமன் சாரத்தைக் கல்வத்திட்டே (241)

இட்டுமே நால்சாமம் உமிழ்நீர்விட்டு
இடைவிடா தரைத்துமே சொல்லக்கேளு
பட்டுமே அரைத்துருட்டிக் குகையில்வைத்துப்
பதிவாக மேற்சில்லு பதியமூடி
தட்டுமே சீலைசெய்து வளமாகத்தான்
தாடியே பத்தெருவில் புடத்தைப்போடு
கட்டுமே ஆறவிட்டு யெடுத்துப்பாரு
கனமான சுண்ணமதாம் கருதிடாயே. (242)

கருதியே சாரமதில் சேர்க்துமேதான்
கருணைபெற பனியில் வைக்கச் செயநீராகும்
பருதியே தான்போன்ற செயநீர் தன்னில்
பாய்ச்சிடுவாய் வீரத்தைக் கொஞ்சமிட்டு
வருதியிடு யிந்துப்புக் கல்வத்திட்டு
வடிவாகச் செயநீரை விட்டு ஆட்டிக்
குருதியா மிந்துப்புச் சுண்ணமாகும்
கொடியதொரு காரமாம் ரவியிற்போடே. (243)

போடவே தினமூன்று காயக்காயப்
பொடியாகும் பின்பெடுத்துப் பனியில்வைக்க
நீடவே செயநீரா மிதனைவாங்கி
நிலைத்துநிற்கும் வீரத்தைப் பொடித்துத்தூவு
ஆடவே செயநீரு ஒருபலந்தான்
அதற்குள்ளே பூரமொரு பலத்தைப்போடு
நாடவே மூன்றுநாள் மூடிவைத்து
நலமாக ரவியில் அஞ்சு நாள்தான்போடே. (244)

போடவே பூரமது கரைந்துப்பாகும்
போக்கான சுண்ணாம்புக் குகையிலிட்டு
ஆடவே மேல்மூடிச் சீலைசெய்து
அடைவாகப் பத்தெருவிற புடமுமிட்டுக்
காடவே யெடுத்துப்பார் சுண்ணமாகும்
கைபட்டா லுடனேதான வெந்துநீரும்
பாடவே முன்வைத்த செயநீர்தன்னைப்
பருவமா யூதியே வைத்திடாயே. (245)

வைத்திட்ட பீங்கானை ரவியிற்போடு
வடிவான அஞ்சுநா ளானபின்பு
உய்த்திட்டு மருகவே செயநீர்சுத்தி
உருதிபெற ஒருவருடன் சொல்லாமற்றுன்
பைதிட்டுச் செகசால மதிலடங்கும்
பண்பான சுண்ணமெல்லா மிதிலேயாச்சு
நைதிட்டுக் கரையில்லை துரையுமில்லை
நபிமார்க ளாட்டெல்லா மிதனலாட்டே. (246)

ஆட்டான வீரமோ பலந்தானதுக்கு
அறிவான சவுக்காரச் செயநீர்குத்திக்
கூட்டான கல்வத்தி லரைநாழிசாமம்
குணமாக வழித்தெடுத்து வில்லையாக்கிக்
கட்டான் கதிரில்வைத்து உலர்ந்தபின்பு
காசிடைதான் சவுக்காரச் சுண்ணமிட்டுத்
திட்டான பூரமாஞ் சுண்ணமொன்று
திடமான வெங்காரச் சுண்ணமொன்றே (247)

சுண்ணமொரு காசிடைதான் சாரந்தூக்கு
சுருதிபெறக் கல்வத்திற சாரநீரால்
நன்னயமா யரைத்துமே கவசங்கட்டி
நலமாக வெண்கருவுஞ் சுக்கான்கல்லும்
பன்னகமா யரைத்துமேற் கவசங்கட்டிப்
பதிவாக ரவிதனிலே உலரவைத்துக்
கன்னல்போற் சுண்ணமடுக் குகையிலிட்டுக்
கருதியே சீலைசெய்து புடத்தைப்போடே. (248)

வெடியுப்புச் செயநீர்.

புடம்போட்டு எடுத்துப்பார் வெண்ணீராகும்
புகலரிய வெடியுப்புச் செயநீர்கேளு
அடம்போடு வெடியுப்பு ஐந்து நாக்காரச்சல்
ஆகவே பலம்பத்து நிறுத்துக்கொண்டு
கடம்போடு பூநீறு பலமும்போடு
கசகாமல் சீனமொரு பலமும்போடு
நடம்போடு கல்லுப்புப் பலமும்போடு
நாடியே சூடனொரு காசுபோடே. (249)

போடவே சாரமது காசுபோடு
போட்டெல்லாங் கல்வத்திற் பழச்சார்விட்டு
ஆடவே மூன்றுநாள் நேகஆட்டி
அடைவாக வழித்து அயச் சட்டியிட்டு
நாடவே தீயெரிப்பாய் நாலுசாமம்
நலமாக வழித்தொரு பீங்கானுக்குள்
சாடவே யிட்டுமே அதன்பின்கேளு
சரியான கடுங்காரச் செயநீர்குத்தே. (250)

குத்தியே ஐந்துநாள் ரவியிற்போடு
குணமாகச் சுண்ணும்புக் குகையிலிட்டுப்
புத்தியாய் ஊதையிலே சுண்ணமாகிப்
பூப்போலே வெந்துவிடும் புகலக்கேளு
நத்தியே யெடுத்துமே பீங்கானிட்டு
நலமாகக் கடுங்காரச் செய நீர்குத்திப்
பத்தியே முன்போலே குழுறவூது
பாதையிது வெகுபோக்குக் காகுந்தானே. (251)

ஆகுமே சுண்ணத்தைப் பனியில்வைக்க
அடைவாகச் செய நீரா மறிந்துகொள்ளு
வேகுமே செலமாகும் மிந்த நீரில்
விதமான வழலையென்ற சுண்ணங்காசு
போகுமே பூரமென்ற சுண்ணங்காசு
போக்கோடே வீரமென்ற சுண்ணங்காசு
யாகுமே செய நீரிற் காசுடை தான்போட்டுப்
பக்குவமாய்ச் சரக்குகளிற் சுருக்குப்போடே. (252)

போடவே இறுபத்து நாலுங்கட்டும்
போக்கோடே சரக்கெல்லாம் வாடைதன்னில்
வாடவே உபசரங்கள் சத்தேயாகும்
வடிவான சரக்கெல்லா மீயமாகும்
தாடவே கெவுரிவெள்ளை லிங்கம்வீரம்
தயங்காத தாளகமுஞ் சிலையுங்கெந்தி
பாடவே நாகத்தைப் பதையாமற்கொல்லும்
பணபேதி சணபேதி யாகுந்தானே. (253)

ஆகுமே கருவங்க மதனைக்கொல்லும்
அடைவாகச் சணத்திலே சித்தியாகும்
ஏகுமே உப்பதுக்கு உறுதிகேளு
ஏத்தமாம் வெடியுப்புச் சீனக்காரம்
தாகுமே கடல்நுரையுஞ் சூடனீய்ந்து
தடையறவே வெங்காரம் திருசுதாரம்
பாகுமே வெடியுப்பு நீரைவார்த்துப்
பதிவாக அரைத்திடவே சொல்லக்கேளே. (254)

சொல்லவே ஏழுநாள் அரைத்து நீயும்
சொற்பெரிய ரவியிலேழு நாளும்போடு
மெல்லவே சரக்கெல்லாம் வெந்துநீறும்
வேதையினின் முடிவுசொல்ல விண்கொள்ளாது
கல்லவே பீங்கானி லெடுத்துவைத்துக்
கருத்தாகச் சொல்லுகிறேன் கண்டுகொள்ளு
நல்லவே சகலமுந்தான் சித்தியாகும்
நாமறிந்த போக்குத்தான் நல்கினோமே. (255)

நல்கியே உப்பேது வென்றாற்கேளு
நலமான வாருதியிற் சத்திநாதம்
வல்கியே மலைபோலே நிற்கும்பாரு
வடிவாக அதையெடுத்துப் பாக்குப்போலே
கல்கியே பழச்சாறு தின்மூன்று
கனிவாகத் தோய்த்துகதிர் காயவைத்துத்
தல்கியே உப்பங்கே சுத்தியாச்சு
தாட்டிகமாய்ப் பின்புதான் தகமைகேளே. (256)

கேளப்பா சவுக்காரச் சுண்ணமொன்று
கெடியான வீரமொன்று பூரமொன்று
வாளப்பா சவுக்காரச் செயநீர்விட்டு
மைந்தனே குழம்புபோல் கல்வத்தாட்டி
கோளப்பா கல்லுப்பைத் தோய்த்துவாட்டு
கொள்கியந்தத் தணலுக்கு ளடர்ந்துவாட்டு
தாளப்பா குழம்பையெல்லாம் பூசிவாட்டி
நலந்தபின்பு முன்னெட்டு மருந்தைப்பூசே .(257)

பூசியதை வாட்டுதற்கு விபரங்கேளு
பொலிவான் வெடியுப்பு நீரைவார்த்துத்
தாசியதை கல்வத்திற் குழப்பிக்கொண்டு
சரக்கெல்லாம் பிரட்டிநன்றாய் வாட்டிப்போடு
மாசியதைக் கல்லுப்பு நிறையக்கேளு
மயமாகப் பலமுன்றில் பூசிப்போடு
தேசியதை அடுக்கடுக்காய் முதிரவாட்டு
சிறப்பாகத் தணலுக்கு ளடர்ந்துவாட்டே. (258)

வாட்டிடவே கல்லுப்பு வெடிக்காதப்பா
மருவியதோர் ஊசாமும் உப்பும்நேரே
தாட்டிடவே நாயுருவி பிரண்டைச்சாம்பல்
நலமான கிளிஞ்சிநீர் சரியாய்க்கூட்டி
ஆட்டிடவே அமுரிவிட்டு மெழுகாய்ப்பண்ணி
அடைபோலே ரெண்டாக்கிச் சட்டியிட்டு
நீட்டிடவே அடைமேலே உப்பையிட்டு
நேராக அதுமேலே அடையாய்மூடே. (259)

மூடியே மேற்சட்டி சீலைசெய்து
மூசியாதே அடுப்பேற்றி யெரிநால்சாமம்
ஆடியே தீபம்போ லெரித்துவாங்கி
ஆறவிட்டு யெடுத்தந்தப் படியேவைத்து
நாடுயே கெசபுடத்திற் போட்டாயானால்
நலமான வைரம்போ லுருகிக்கட்டும்
தேடியே ஆறவிட் டெடுத்துப்பாரு
சிறியபிள்ளை தானறியும் உப்பினுட்டே. (260)

ஆட்டிடவே மூத்துப்போ லுருகியாடும்
அறிவாகப் பொன்போலே கரியிலாடும்
நீட்டியே வயிரம்போ லிறுகிக்கட்டும்
நிலையாக உப்புத்தான் வலுத்தக்கட்டும்
கூட்டியே வயிரமணி தன்னைத்தானும்
குறிப்பாகக் கோர்த்துமே கழுத்திலிட்டால்
வாட்டியே நபிமார்கள் வணங்குவார்கள்
வழியான மார்க்கமிது வண்மையாமே. (261)

வண்மையாய்க் கிச்சடிச் சோறுமாக்கி
வழியோடே பாத்தியா ஓதிநன்றாய்த்
தண்மையாய் நபிமாரை மிகவுமோதி
தடையறவே அல்லாவைத் தொழுதுபோற்றிக்
கண்மையாய் மூக்காலும் வணங்கியேற்றிக்
காரணமா மகமதுவைக் கருத்திற்போற்றி
உண்மையாய்ச் செய்துமே மணியைத்தானும்
உறுதிபெற ஓதிடவே சித்தியாமே. (262)

சித்தியா யாகவென்றால் சொல்லக்கேளு
　　சிறப்பாகச் சவுக்காரச் சுண்ணமொன்று
பத்தியாய்க் கற்பூரச் சுண்ணமொன்று
　　பகாரிய வீரத்தின் சுண்ணமொன்று
கத்தியாய்ப் புழுகொன்று சீனமொன்று
　　கனிவான சவுக்காரச் செயநீராலே
முத்திபெற அரைசாமம் நாலதாக
　　முடிவான உப்பினுட மணிக்குப்பூசே. (263)

பூசியே கதிரில்வைத்துக் காயப்போட்டுப்
　　புகழாகச் சுண்ணாம்புக் குகையிற்றானும்
ஆசியே வைத்திட்டுக் குகையைமூடி
　　அடைவாகச் சீலைசெய்து புடத்தைப்போடு
தாசியே யெடுத்துப்பார் கவசந்தன்னைத்
　　தகைபெறப் பிரித்திடவே சுண்ணமாகும்
பாசியே குலந்தனக்குக் கோடாலிக்காம்பு
　　பகைமையாம் போலவே பார்த்திடாயே. (264)

பார்த்திடவே சாக்குக்குக் காலனாகும்
　　பதிவான கடுங்காரச் செயநீர்குத்தி
ஏத்திடவே நாளேழு கடந்தபின்பு
　　ஏழைமதி போகாதே உலாப்போடு
பார்த்திடவே தினமேழில் பூப்போலாகும்
　　பதிவான சுண்ணத்தி னிடையேசாரம்
நாத்திடவே தினமொன்று அரைத்தாயானால்
　　நலமான வருணசலம் போலேயாமே. (265)

ஆகுமே ரவிதனிலே உலர்ந்தபின்பு
　　அடைவான சுண்ணாம்புக் குகையில்வைத்துப்
பாகுபெற மேல்மூடிச் சீலைசெய்து
　　பக்குவமாய்ப் புடம்போடச் சுண்ணமாகும்
ஏகுமே யிச்சுண்ணம் பனியில்வைக்க
　　இதமான செயநீராம் வீரச்சுண்ணம்
தாகுமே போட்டுவிடு சவுக்காரச்சுண்ணம்
　　சரியான ஒளியாகும் பூரம்போடே. (266)

பூரமாஞ் சுண்ணத்தைப் போட்டுவைத்துப்
பொலிவாகக் கலக்கியே பின்புதானும்
பாரமொடு கலக்கியொன்றாய் மத்திக்கத்தான்
பதிவாகத் தொட்டரைக்க வெல்லாஞ்சுண்ணம்
வாரமென்று பேசுமுன்னே சரக்கெல்லாந்தான்
வடிவாகக் கட்டி நின்று கரியிலாடும்
காரமொடு உபசரங்கள் சத்தேயாகும்
கனிவாக லவணமெல்லாம் சுண்ணமாமே. (267)

சுண்ணமா மிந்தநூற் படியேதானும்
துடியாக ஒருசுண்ணஞ் செய்துபாரு
நன்னவே நான்சொன்ன தெல்லாஞ்செய்யில்
நலமாக ஒன்றுதப்பில் சொல்லக்கேளு
கன்னலாய்க் கடைகெட்ட யாக்கோப்பென்று
கருணைபெறச் சொல்லிவிடு கணக்குமாகும்
பண்ணவே பாகமது தப்பிற்றானல்
பகாரிய சுண்ணமது தயடும்பாரே. (268)

தப்பிதமாய்ச் செய்யாமல் நூலைப்பார்த்துத்
தருகாவி லேசெய்தாப் போலேசெய்து
முப்பினுட குருமுடித்துச் சாக்குக்கட்டி
மூவுலக மெய்க்கவே சுண்ணம்பண்ணி
எப்படியும் நபிமாரைப் போலேசெய்து
இருந்திடத்தில் ரசவாதம் செய்துவித்து
உப்பினுட பொருளறிந்து பார்த்துத்தேறு
உறுதிபெற யாகோபு ஓதினாரே. (269)

வழலை விபரம்.

ஓதினார் வழலையது யென்றபேரு
உறுதியாய்ப் பூநீரில் சுண்ணங்கூட்டிப்
பாதியே பாணிவிட்டுத் தொட்டிப்பாரு
பதிவாக வழவழப்புக் கையில்தோணும்
சோதிபெற யிதுக்குப்பேர் வழலையாகும்
தொல்லுலகி லறியாத மூடர்தானும்
போதித்தார் பிண்டமென்றும் தீட்டாமென்றும்
போக்கோடே யெடுத்துமே சுடுவார்தானே. (270)

சுடுவாய் நீ அமுரியென்ற மூத்திரத்தைச்
சொற்பெரிய மூத்திரந்தான் புகைந்த நீராகும்
அடுவார்கள் சுத்தசெல மாச்சுதப்போ
அன்பாக வயித்யமெழு நூறிற்சொன்னேன்
படுபாவி சாத்திரத்தைப் பொய்யென்பார்கள்
படிப்புத்தான் தெரியாமற் போனதாலே
கடுமையாய்ச் சொல்லிடுவார் உலகவாதி
கனிவாகத் தெரியாதார் மட்டிதானே. (271)

மட்டியென்றால் சுண்ணம்புக் குதவும்பாரு
மட்டியல்ல குட்டியென்ற சுவருக்கொப்பாம்
குட்டியாய்ச் சுவரென்றால் ஒருவருக்குத்
துணையாக மறைக்குமது சுவருமல்ல
முட்டியாய்க் கழுதையென்று சொல்லவேணும்
மூணையான கழுதையது பொதிதான் தூக்கும்
பட்டியாய்ப் பலர்க்குமுப காரமாகும்
படிப்பில்லா னொன்றுக்கு முதவான்தானே. (272)

ஒன்றுக்கு முதவாதார் சுடுவான்சுட்டு
உறுதியில்லா தொருவருட பேச்சைக்கேட்டுக்
கண்டுமே சுடுவார்கள் கணக்குக்காணார்
காதலாய் மூலிகையைத் தேடுவார்கள்
நன்றாக யிருக்குதென்று முழுத்தேங்காயை
நாயுருட்டி உடைக்கரியா விதமாகற்றான்
உண்டுடுத்த அலைந்துமே திரிவாரப்பா
உண்மையில்லா மடவாதி உற்றுப்பாரே. (273)

உற்றுப்பார் உப்பினுட மணியைக்கேளு
உறுதிபெறக் கரியில்வைத்து உருக்கிப்பாரு
சுத்துப்போ லுருகும்போ தங்கமொன்று
சரியாகக் கொடுத்துருக்கி நாகந்தாக்கு
பத்துமே தங்கமிடை சேர்த்துருக்கிப்
பதிவாகச் சூதமொரு பலமும்போட்டுச்
இத்துமே வீரமோ ரிடையைப்போட்டு
இரண்டுருகி வாங்கையிலே கெந்திபோடே. (274)

போட்டுடனே களங்காகும் உப்புக்கட்டு
பொலிவான நவலோகம் நூற்றுக்கொன்று
ஆட்டுமே பத்தரைதான் வயதுகாணும்
அடைவாகக் கண்டுடனே கொர்ச்சிக்காதே
பாட்டுமே அன்னபேரை தண்ணீர்கொள்ளு
பக்குவமாய்ப் புளியுப்பை இகழ்ந்துதள்ளு
நாட்டுமே நபிசொத்தை வருமைபோலே
நலமாக உண்டுடுத்த நல்லதாமே. (275)

நல்லதாம் சமாதியிலே நின்றுதேறு
நாளிலத்தி லொருவருக்குஞ் சொல்லவேண்டாம்
வெல்லவே எழைபோ லிருந்துதேறு
வேதாந்த நுட்பத்தின் விரிவுகேளு
கொல்லவே ஆதியுப்பைக் குறியாய்ப்பாரு
குணமாக உன்மனேயி லிருந்துவாழு
வல்லமைகள் சொல்லாதே மாண்டுபோவாய்
வடிவான சித்தியாய் வண்மையாமே. (276)

உப்புச் செந்தூரம்.

வண்மையாய் உப்பினுட செந்தூரத்தை
வகையாகச் சொல்லுகிறே னுலகோர்க்காகத்
தண்மையாய்ச் சூதமொன்று நாகமொன்று
தடையறவே உருக்கியல்லோ பொடியாய்ப்பண்ணி
திண்மையாய் வீரமொன்று சுண்ணமொன்று
சிறப்பாக மத்தித்துப் பனியில்வைக்கக்
கண்மையாய்ச் செயநீரா மிதனைவாங்கிக்
கலனுக உப்புமணி தன்னைத்தோயே. (277)

தன்னையே தோய்த்துமே பரித்தகட்டைத்
தடையறவே உப்புமணி தன்னிற்சுத்தி
வன்னையா யிலுப்பைநெய்யில் விளக்கைவைத்து
வடிவாக நூலதனல் திரியைப்போட்டுக்
கன்னையா யெரியவிட்டு வாட்டித்திரு
கனிவாக உள்புருதுந் தங்கந்தானும்
சன்னையாம் அருணன்போற் செந்தூரமாகும்
சரியான செந்தூரந் தாக்கிட்டாயே. (278)

தாக்கிடவே நவலோகம் நூறுக்கொன்று
தடையறவே கொடுத்திடவே பத்துமாத்து
நோக்கிடவே செந்தூரங் குன்றியுண்ணு
நொடிக்குள்ளே கோடிவரை யிருக்குந்தேகம்
பாக்கிடவே சுக்கிலத்தை யிருக்கிப்போடும்
பதிவான நரைதிரையு மில்லைகண்டீர்
வாக்கிட்டுச் சொல்லார்கள் சித்தரப்பா
வடிவான பொருளிந்த மார்க்கமாமே (279)

மார்க்கமாம் சுண்ணமென்ற காண்டந்தன்னை
மயமாக உழைத்துமே குருமுடித்துத்
தீர்க்கமாய்ச் சுண்ணமது செய்துநீயும்
செயலான சரக்கெல்லா மிருக்கிக்கட்டி
வார்க்கவே செந்தூரம் உப்புப்பண்ணு
வடிவாகச் செயமாகும் வழக்கமெத்தத்
தூர்க்கவே சொன்னுக்கா லென்னசெய்வான்
தொல்லுலகில் யாகோபு சொன்னவாறே (280)

சொன்னதொரு மலைகளிலே சித்தர்கோடி
சுருதிபெற நபிமாருங் கோடாகோடி
நன்னயமா யண்டபகிரண்டமெல்லாம்
தலமான மலைதோறும் நாதாக்கள்கோடி
சின்னதொரு மலையெல்லாந் தைக்காவுண்டு
சிறப்பான மலையருகே வாசமாகும்
மூன்னமே மலையிலுள்ள மூலிகோடி
மூனையான சாத்திரங்கள் கோடிதானே. (281)

தானென்ற மலைதோரும் பாஷாணங்கள்
தாட்டிகமா யுற்பத்தி நிலத்திலுண்டு
வானென்ற அவிடத்தில் மூளைக்கப்பட்ட
வடிவான மூலிகைதான் கொடியவேகம்
கானென்ற அதைப்பிடுங்கிச் சாறுவாங்கிக்
கடிதாகச் சரக்குக்குச் சுருக்குப்போட்டு
வானென்ற நவலோகத் தன்னிலீய
வடிவான தங்கமாம் வழக்கமாமே. (282)

வழக்கமாங் கிழக்கிலுள்ள கடலிற்றனும்
வடிவான கல்லுப்பு வெடியுப்புத்தான்
தழக்கமாய் விளைகின்ற பூமியிற்றன்
தடையில்லா உமுரியிலே பிடுங்கிவந்து
துழக்கமாய்ச் சாரதுவும் பிழிந்துபின்பு
துணையாகச் சரக்குக்குச் சுருக்குப்போட்டுப்
பழக்கமாய்க் கொடுத்தாலும் பலிக்கும்பாரு
பதிவாக இதற்காக உப்பைப்பாரே. (283)

உப்பையே சுண்ணந்தான் பண்ணிப்பின்பு
உறவாகச் செயநீரைப் பண்ணிக்கொண்டு
அப்பவே துருசதுவை நீற்றிநீயும்
ஆனபின்பு மூலிகையி லிட்டுக்கட்டிக்
கொப்பவே நவலோகந் தன்னிலீயக்
கொள்கியே மாற்றதுவுங் காணும்பாரு
செப்பமாய்ச் சொல்லிவிட்டேன் இன்னூல்தன்னிற்
செயமாக யாகோபு சொன்னேன்யானே. (284)

சொன்னதொரு மலையடுத்து மூலிதேடிச்
சொற்பமாய்ப் பிடுங்கியே பாசாணங்கள்
நன்னயமாய்ச் சுருக்கிட்டு லோகத்துள்ளே
நாடியே கொடுத்துவிடத் தங்கமாகும்
இன்னிலத்தில் வெகுசுருக்கு மலையின்மூலி
இதமாகப் பத்துத்தான் மாற்றுமாகும்
சின்னமாய் நிமிடத்தில் மூடியுங்கண்டீர்
சித்திபெற யாகோபு மொழிந்தவாறே. (285)

மொழிந்திடவே உப்பைத்தான் நீற்றிமுன்னே
உறுதிபெறக் களங்குபண்ணு சத்துப்பண்ணி
வழிந்துமே செம்புபண்ணி மதியிற்தாக்கு
வடிவான பொன்னாகும் பொன்னைவிற்று
தழிந்திடாச் சொன்னபடி உண்டுபின்பு
தாட்டிகமாய்ச் சுண்ணமென்ற துறையைநாடு
கழிந்திடா நவலோகம் கண்முன்தாண்டும்
கருத்தரிய யாகோபு சொன்னார்தாமே. (286)

தாமேதான் வடகடல்தென் கடலுமோடித்
தடையறவே மேற்கிலுள்ள சமுத்திரத்தில்
வாமேதான் குளிகையிட்டு ஓடிநானும்
வகையான வாதங்கள் மிகவும்பார்த்தேன்
காமே தான் கிழக்கிலுள்ள கடலிஞேம்
கருத்திலே நினைத்துமே வந்துதானும்
பாமேதான் சுண்ணமென்ற காண்டம்பாடிப்
பதிவாக அறுநூருய்ப் பாடினேனே. (287)

பாடினேன் புத்தியுள்ள வாதிமார்கள்
பலகாலும் பார்த்துமே கருணைகூர்ந்து
தேடியே உப்புயிரு பத்தியைந்துந்
திடமான உபரசம் நூற்றிருபதுந்தான்
கூடியே பார்த்தாலோ குறியுந்தோணும்
குறியான வாதமிதி லடங்கிப்போகும்
வாடியே திரியாதே நூலைப்பாரு
வடிவான பொருளறிந்தா லெல்லாமாகும். (288)

எல்லாமு மாகுமே சவுக்காரத்தை
இதமாக வைத்துமே சொல்லக்கேட்டுப
புல்லறிவாய்ப் பேசாமற் பாகந்தன்னைப்
பிரித்துமே கைபாக வரிசையாக
நல்லாகப் பார்த்துமே வழலையோடே
நலமாகச் சேருகிற மருந்துசேர்த்துக்
கல்லாகச் சவுக்காரம் பூக்கவைத்தால்
கனிவாகச் செயமாகுங் கண்டுகொள்ளே. (289)

உப்புமெழுகு.

கண்டுமே உப்பினுட மெழுகைக்கேளு
கனிவான கல்லுப்புப் பலமுமொன்று
பண்டுமே குகையில் நின்று உருகும்போது
பதிவாகச் சாரமது பலமுங்கால்தான
தண்டுமே நீச்சென்ற வெங்காரந்தான்
தலமாகப் பலங்காலாம் நாடிப்போடு
கொண்டுமே கெந்திபல மரைதான்போடு
குணமான சவுக்கார நீரைவாறே. (290)

வார்த்துமே கலந்தரைத்துக் குன்றிபோலே
வளமாக உண்டைசெய்து மருவக்கேளு
காத்துமே கதிரில்வைத்துக் காயப்போடு
கரியான உப்புநின்று உருகும்போது
சேர்த்துமே ஒவ்வொன்றாய்க் கொடுத்துவாங்கு
சிறப்பான உண்டைபுகை யாமலுள்ளே
சாத்துமே மயனம்போல் கண்டுகொள்ளு
தனிவாக யிப்பாலே வாங்கிக்கொள்ளே. (291)

கொள்ளவே நவலோகம் நாற்றுக்கொன்று
கொட்டிடவே தசமாத்துக் கூர்ந்துபாரு
துள்ளவே உப்புக்குங் காவிக்குந்தான்
துடியாக ஓடாது தொடுசிராது
உள்ளபடி யிருந்திடுங்காண் உப்புவேதை
ஒருவருக்குஞ் சொல்லாதே உற்றுப்பாரு
கள்ளமாய்ச் சொல்லவில்லை கருவின்வேதை
கைகண்ட படிசொன்னேன் கண்டுபாரே. (292)

கண்டுபா ருப்பினுட மெழுகுதன்னைக்
கருணைபெறக் குன்றியுண் ணு கனிவாய்க்கேளு
கொண்டுபார் புளியுப்புப் பெண்ணுந்தள்ளு
கூறறிய நாற்பதுநா ளந்திசந்தி
பண்டுமே உள்ளரையிற் படுத்துக்கொள்ளு
பதிவாக உள்நின்று தொழுது நீயும்
தின்றுவிடச் சட்டைகக்கும் பாலனுவாய்
திறமான நபிமார்போ லிருக்கலாமே. (293)

இருக்குமே உப்பினுட மெழுகைச்சொன்னேன்
இதமாக உண்டுவிடச் சந்திரன்போலாம்
நெருக்குமே சூரியன்போல் தேகமாகும்
நேரான நரைதிரைக ளற்றுப்போகும்
கருக்குமே நரம்பிருகும் பசுமையாகும்
காரணமாய் நோயெல்லாஞ் சொல்லாதோடும்
பெருக்கவே யோசித்துச செய்துபாரு
பேரான நூலறிந்தாற் பெரியோராமே. (294)

பெரியோரா யிருந்ததுவு மெதுவென்றுக்கால்
பிறக்குகின்ற நூலெல்லாம் படித்துத்தேறி
வரியாகப் பொய்சொல்லா வசனத்தாலே
வடிவான வாதம்வந்த வடிவத்தாலே
இறியவரும் பெரியவராய்ப் போவார்கண்டீர்
சிறப்பான பொருளறிந்தோன் சித்தன்சித்தன்
அறிவாலே சொன்னாலே பலனுமாகும்
ஆதியாம் உப்பைத்தான் அறிந்துபாரே. (295)

அறிந்துபார் உப்பைமுந்திக் கட்டியாடு
அடைவாகப் பின்னொன்றைப் பார்க்கவேண்டாம்
திரிந்துபார் பிரண்டுருண்டு உப்புதன்னைத்
திடமாகச் செய்தாக்கால் சித்தன்சித்தன்
வரிந்துபார் யெல்லாமும் உப்பினாலே
வகைகெட்டுத் திரியாதே நூலையுற்றுக்
குரிந்துபார் யெல்லாமுஞ் செய்துதேறு
கூறரிய உப்பினுட கொள்கைதானே. (296)

தானென்ற உலகத்தில் வாதமெய்தில்
தருதுரும்பனாய்த்திரிந்து பெண்ணைச்சேர்ந்து
பானென்ற அதரமுண்ட மைந்தனாகி
பலநினைவாய்க் கவலையுற்றுப் பாசமெய்தி
கோனென்ற குருவேது காயசித்தியேது
குறிப்பான ஆதார வழிதானேது
வானென்று ஆடுகிற குளிகையேது
வாய்பேசா திருந்தலைந்து மருளுவானே. (297)

மருளாமற் போகவல்லோ வாதஞ்சொன்னேன்
மாண்டிறந்து போகாமற் காயசித்தி
இருளான வெளிகாண யோகஞ்சொன்னேன்
எப்போதுங் குருபதத்தைத் தொண்டுபண்ணு
பொருளான ஆனந்த மாவதற்குப்
பொருந்தவே நபிமாரைப் புகழச்சொன்னேன்
கருவான நூலறிந்தான் வாதியாகும்
கருத்தாக உப்பைமுந்திக் கட்டியாடே. (298)

ஆடவே உப்பென்ற சுண்ணமொன்று
அணைத்திடு நீ சாரத்தை ஒன்றுசோத்து
நீடவே கல்வத்தி லரை நால்சாமம்
நேர்ந்தபின்பு சுண்ணமென்ற குகையில்வைத்து
நாடவே கடுங்காரச் செய நீர்குத்தி
நாள்மூன்று மத்தித்து ரவியில்வைப்பாய்
ஊடவே பனியில்வைக்கச் செய நீராகும்
உத்தமனே யிந்நீரி லோட்டங்கேளே. (299)

கேளப்பா யிந்நீரில் வீரச்சுண்ணம்
கெடியாக மத்தித்துப் பலந்தான்பூரம்
நாளப்பா பீங்கானில் பூரம்போடு
நலமாகச் செய நீரை அதிலேவாரு
நீளப்பா மூன்றுநாள் நிழலில்வைத்து
நேர்மையா ரவியிலேந்து நாள்தான்போடு
வாளப்பா அரைத்துநன்றாய் வில்லைதட்டி
வளமான சவுக்காரச் சுண்ணம்பூசே. (300)

பூசியல்லோ சுண்ணமென்ற குகையில்வைத்து
பொருந்தவே மேல்மூடிச்சீலைசெய்து
ஆசியல்லோ யீசானம் பூசைபண்ணு
அஞ்செருவிற் புடம்போடப் பூரம் நீறும்
வாசியல்லோ கடுங்காரச் செய நீர்குத்தி
மகத்தான ரவிதனிலே உலரப்போடு
தேசியல்லோ நபிமார்கள் சொன்னமார்க்கம்
திறமான ததின்வேகஞ் செப்பினேனே. (301)

செப்பியதோர் பூரமது பலந்தானொன்று
தெளிவான சாரமது பலந்தானொன்று
ஒப்பியதோ ரிதுரெண்டுங் கல்வத்திட்டு
ஓங்கியதோர் நெட்டடங்க மாட்டுமாட்டு
தப்பியதோர் சுண்ணம்புக் குகையிலிட்டுச்
சார்வாக மேல்மூடிச் சீலைசெய்து
அப்பியதோர் புடபோட வெந்து நீறும்
ஆச்சரியம் பனியில்வைக்கச் செய நீராமே. (302)

ஆமப்பா யிந்நீரில் வீரச்சுண்ணம்
அட்டியில்லா ததைக்கலக்கி வைத்துக்கொண்டு
ஓமப்பா சரக்கான அறுபத்துநாலு
உற்றுமெள்ள வாட்டிடவே மணியுமாகும்
சாமப்பா சாரமுதல் லவணமெல்லாம்
சணத்திலே சுண்ணம்பாய் விரிந்துபோகும்
வேமப்பா கண்டருமே வெள்ளையாகும்
வேதையாம் தாளகத்தின் மஞ்சள்போமே. (303)

மஞ்சளென்ற கெந்தகமோ வெள்ளையாகும்
மாசற்ற வீரமது குருவுமாகும்
துஞ்சலென்ற லிங்கமது மெழுகுமாகும்
சோதியாங் கல்லுப்பு மணியுமாகும்
பஞ்சலென்ற உபரசங்க ளீயமாகும்
படுமுன்னே சூதமது விறைத்துப்போகும்
கஞ்சமென்ற லோகங்கள் சுண்ணமாகும்
காட்டிடவே நூற்றுக்கு ஒன்றுயீயே. (304)

ஈயவே ஏமமாம் பொய்போகாது
இருந்தயிடந் தன்னிலே இருப்பாய்நில்லு
மாயமாய் நிலையில்லா தலையவேண்டாம்
வடிவான கல்லுப்பை யுருக்கிக்கட்டுத்
தாயமா யுப்பில்லாக் கட்டுயெல்லாம்
தலைசுற்றித் தூரயெறி தரணியோர்க்கு
நாயமார் தான்சொன்னு ரிந்தநேர்மை
நாடறியச் சொல்லுகிறேன் நம்பிப்பாரே. (305)

தம்பியே யிருக்கவென்றுற் சொல்லக்கேளு
நாதாந்த நபிமார்கள் சொன்னநேர்மை
வம்புசெய் யாமலே தொந்தமேற்ற
வடிவாகச் சுண்ணமது வலுக்கும்பாரு
கொம்பிலே யிருந்தகனி கைக்குக்கிட்டும்
கொள்கைபோல் மனதுதனை ஒன்றுபண்ணித்
தம்பிரான் செயலாலே வாழ்ந்துதேறு
தடையறவே யாகோபு சொன்னவாறே. (306)

வாரேது யென்றுக்காற் சொல்லக்கேளு
வடிவான சவுக்கார மூடியாப்போனுல்
தூரேது சொல்லாதே வெகுவாய்க்கேளு
துடியான களங்கொன்று சொல்வோமய்யா
பாரே நீ யிதைநம்பிச் செய்துகொண்டு
பக்குவமாய்ப் பெரியதொரு வேலைபார்த்துத்
தேரே நீ பிழைக்கவே சொன்னேன்வாவா
தெளிவாகு மிதன்கூறு கூறுண்ணுதே. (307)

களங்கு வேலை.

கூறுணுக் கல்லுப்புப் பலமும்பத்துக்
கொடியதொரு சீனமது பலமும்அஞ்சு
ஆறுணுப் பழச்சாறு விட்டுநீயும்
அன்பாக முச்சாமம் ஆட்டிநன்றுய்க்
காறுணு யெடுத்துமே கரண்டியிட்டுக்
கனிவாக உருக்கிடவே சொல்லக்கேளு
பாறுணுச் சிவந்துமே உருகிநிற்கும்
பண்பாக வழித்துமே பகரக்கேளே. (308)

பகரவே துருசதுவும் பலமும்அஞ்சு
பதிவான கெந்தகமும் பலமுமுக்கால்
நகரவே சேர்த்துஅரை பழச்சாற்றுலே
நாடியே உண்டைபண்ணி மணிபோல்தானும்
வகரவே காயவைத்துச் சொல்லக்சேளு
வடிவான முன்னுப்பு உருகும்போது
தகரவே யிடைக்கிடைதான் தாக்குஉண்டை
தகமையா யுருக்கியெடு தன்மைதானே. (309)

தண்மையாய்க் கரிபோலே தூளாய்நிற்கும்
தடையறவே வெங்காரம் பாதிசேர்த்து
உண்மையா யரைத்துமே உருக்கிப்பாரு
உறைகின்ற சத்தாகும் ஒழுங்குமாகும்
வண்மையாய்ச் சத்துதனைச் செம்பெடுக்க
வகையாகச் சொல்லுகிறேம் வண்மைகேளு
கண்மையாய் வெங்காரம் பாதிசேர்த்துக்
கடிதாகச் சத்ததுவும் பாதிசேசே. (310)

பாதிதான் சேர்த்துமே பழச்சார்விட்டுப்
பதியவே மூன்றுநா ளரைத்துநீயும்
வாதியாய் வில்லைதட்டிக் கிறிலிட்டு
வளமாகக் காயவைத்து வண்மைகேளு
தாதியா யகலிலிட்டுப் புடத்தைப்போடு
தாக்கிடவே கரிபோலச் சிவந்துபோகும்
மோதியே கொஞ்சமா யுருக்கிப்பாரு
மோசமில்லை செம்பானல் முறையுயாமே. (311)

முறைமையாய்ச் செம்பானல் கொஞ்சஞ்சத்து
மோசமா யிருந்துதென்றால் பின்னுஞ்சேரு
வறமையா யரைத்துமே வில்லைதட்டி
வளமாகக் கிறில்வைத்துப் புடமும்போடு
பறமையாய்ப் புடம்போட்டு யெடுத்துப்பாரு
புதையாமல் குகையிலிட்டு உருக்கக்கேளு
நறமையா யுருக்கிடவே செம்புமாகும்
நலமாக மதியெட்டில் மூன்றுதாக்கே. (312)

தாக்கிடவே பொன்னாகும் பொன்னிேனாடே
தடையறவே சேர்த்தூது தங்கமாகும்
வாக்கிடவே வித்துமே செலவுசெய்து
வழியாகப் பார்த்துமே முன்னேசெய்து
காக்கவே பிழைத்துமே பின்னே நன்றாய்க்
கனிவாகப் பார்த்திட்டுச் சொல்லக்கேளு
நோக்கிடவே பின்னேபார் சுண்ணப்போக்கை
நொடியிலே பார்த்திடவே செயமுமாமே. (313)

செயமாகச் சோற்றுக்கு வைத்துக்கொண்டு
செழிப்பாக யெல்லாமும் விரயம்பண்ணு
பயமாகச் செய்துமே பிழைத்துக்கொள்ளு
பதிவாக யெல்லாமுஞ் சித்தியாகும்
உயமாக நூல்தன்னில் உழைத்துப்பார்த்து
உத்துமே சொன்னுக்கா லுறுதியாகும்
வயமாக யிப்படிக்குப் பார்த்துத்தேற
வடிவான பொருளாகும் வண்மையாமே. (314)

போய் வாதி.

வண்மையா யுலகத்தில் வேதந்தானும்
வடிவாகக் குருமார்கள் வகுத்துவைத்தார்
தண்மையா யதைத்தானுந் தெரியாமற்றான்
தாணியிலே பொய்க்குருவின் சொல்லைக்கேட்டுப்
பண்மையா யுலகத்தோர் கெட்டாரப்பா
பாதையிது வென்றுநீ தெரிந்துசெய்வாய்
உண்மையா யுலகத்துக் குருமார்தானும்
உறுதியாய்ப் பொய்சொல்வார் உலுத்தர்தானே. ()

உலுத்தரய்யா குருமார்கள் வேலைசெய்வார்
உறுதியாய்க் குருமார்க்குப் புத்திரெம்ப
அலுத்துமே உலகத்தில் வேலைசெய்து
அடைவாகப் பிழைப்போர்க்கு வேதமென்று
வலுத்துமே சொல்லியே பணம்பிடுங்கி
வடிவாக வாழ்வோர்க்கு நரகமாகும்
கலுத்துமே உழைப்போர்க்கு யிடஞ்சல்சொல்லிக்
கனிவாகப் பிழைப்பவற்கு நரகந்தானே. (316)

நரகமிலா நால்வேத மாகத்தானும்
நாட்டிலே ஆதியிலே ரெண்டுபேரு
கரகமா யுற்பத்தி நபிமார்செய்த
கணக்கிருக்கக் குருமார்கள் பணத்தைநம்பி
வரகமா யவரவற்குப் பொய்கள்சொல்லி
வடிவான பணத்தையே பிடுக்கவென்று
சரகமாய்ச் சொல்லியே பணம்பிடுங்கும்
சண்டாளக் குருமாரை நம்பிடாதே. (317)

நம்பினவர் மூட்டாளாம் உலகத்தோர்கள்
நலமான நால்வேதம் பார்த்துத்தேரு
தெம்பிட்ட குருமார்சொல் நம்பிநம்பி
திட்டாகக் கலியாணம் பண்ணும்போது
வம்பிட்டுப் பணம்பிடுங்கு வார்களப்பா
வடிவான குருமாருங் கெட்டாரப்பா
தம்பமா யுந்தனுக்குச் சொல்லிவிட்டேன்.
சரியான படியாகம் பார்த்துச்செய்யே. (318)

பாகமாய்ப் பணங்கொடுக்க வேண்டாந்தானே
பதிவாகப் பொருள்கொடுத்தால் நரகமெய்தும்
வாகமாய்ச் சமுசாரந் தன்னிேனாடே
வடிவாக யிருந்தல்லோ வாழவேணும்
சீகமா யிப்படிக்குப் பொய்கள்சொல்லும்
செகசாலக் குருமாரை நம்பிடாதே
தேகமது நிலைப்பதற்கு வழியைப்பாரு
செகக்குருவை நம்பாதே நபியைப்போற்றே. (319)

நம்பாமல் நபிமாரை வணங்கிப்போற்று
நலமாக லெப்பைதனை வணங்கவேண்டாம்
வம்பாக உலகத்திற் பொய்கள்சொல்லி
வந்துநின்ற பொய்க்குருவை நம்பவேண்டாம்
தம்பமாம் நால்வேதக் குருக்கள்தன்னைத்
தடையறவே நம்பினல் கெட்டுப்போவார்
உம்பமாம் அல்லாவை நம்பவேணும்
உறுதியாய் வாதங்கள் மிகவுமாமே. (320)

அல்லாவாம் ஒருவனன்றி வேறேயேது
அவனியிலே பொய்குருக்கள் வருவாரப்பா
கல்லாமை ஒருவரையும் நம்பவேண்டாம்
கருத்துறவே பணங்கையி லிருந்துதானல்
தெல்லாகக் குருமார்கள் வந்துகூடித்
திடமாகப் பொருள்பரிப்பார் உலகத்தோர்கள்
வல்லபமா யல்லாவும் பார்த்துக்கொண்டு
வகையாகச் சிரிப்பாரம் அல்லாதானே. (321)

தானென்ற நூல்தனிலே வாதந்தன்னைத்
தடையற்றுச் சொல்லியே தானிருக்க
வானென்ற வகையறியா வாதிமார்கள்
வையகத்திற் கேட்டுமே சுடுவார்கோடி
கானென்று கேட்டுசாத் திரத்தைவாங்கிக்
கண்டறியா மற்சுடுவார் கோடிபேர்கள்
ஊனென்ற சோத்துக்கு யில்லாமற்றான்
ஒருகோடி போலேத்தா ருண்மைதானே. (322)

தானென்ற கோடியிலே யொருவருண்டு
தாட்டிகவா னுயிருப்பான் தன்மை சொல்லி
வானென்ற வாதங்கள் மிகவுஞ்செய்வான்
வடிவான பொருளறிவான் மார்க்கமாக
ஊனென்ற களங்குமுதல் சத்துமார்க்கம்
உறுதியாய்ச் செந்தூரஞ் சுண்ணமோடு
கானென்றே செய்தாக்கால் வாதமாகும்
கைகண்டால் உலகதனில் நம்புவாரே. (323)

நம்பவே பொருளறியார் வாதப்போக்கை
நலமில்லை யென்பார்கள் புத்தியில்லார்
தம்பமாய் வாதங்கள் மிகவுஞ்சுட்டுத்
தாட்டிகமாய்ப் பொருளறியார் உலுத்தவாதி
நம்பியே ஒருவருடன் சொல்லிச்சொல்லி
நாதாந்த வாதங்கள் தன்னைத்தானும்
வெம்பியே விந்தில்லார் பெண்களைத்தான்
விரும்பினது போலாகும் விளக்கமாமே. (324)

விளக்கமாய்க் கல்லுப்பு யென்றுசொன்ன
விதமான பரிபாசை விளம்பக்கேளு
தளக்கமாய்ச் சித்திரைவை காசிமாதம்
தனியான பனிபெய்யுந் தன்மைபார்த்துக்
களக்கமாய் வெடியுப்பு விளையும்பூமி
கனமாகக் கல்லுப்பு விளைவுசொல்வேன்
இளக்கமாய்ச் செங்கலது வீடுகட்டி
யிதமான செங்கலிலே விளையுந்தானே. (325)

விளையுமே பனியதுவும் பெய்யும்போது
விருப்பமாய்ச் செங்கலிலே பூத்துதிர்ந்து
களையுமே யிருக்கின்ற மண்ணைவாரி
கனிவாகப் பாண்டத்தி லிட்டுநீயும்
பழையபடி ஒன்றுக்கு யெட்டுத்தண்ணீர்
பதிவாக வூத்தியே கொதிக்கவைத்து
தளையவே தெளிவிருத்து உப்பாய்க்காய்ச்சித்
தாட்டிகமா யெடுத்துமே பின்புகேளே. (326)

கேளுமே காய்ச்சியதோ ருப்புத்தானும்
 கெடியாகப் படி நாலு அளந்துவிட்டு
வாளுமே வெள்ளைக்கல் சுண்ணமொன்று
 வடிவான கல்லுப்புப் படியுமொன்று
தாளுமே பாணியது யெட்டுவார்த்துத்
 தடையறவே பாண்டத்தி லடுப்பிலேற்றிப்
பாளுமே போகாம லெரிநேர்பாகம்
 பதிவாகப் பொங்காமற் காய்ச்சிக்கொள்ளே. (327)

காய்ச்சியே குளம்பான பதத்தில்வாங்கி
 கனிவாகச் சாம்பலைத்தான் கீழேயிட்டு
தாய்ச்சியே குளம்பதனை மேலேஊற்றித்
 தப்பாமற் சீலையைத்தான் மூடிப்போடு
வாய்ச்சபடி அதன்மேலே சாம்பலிட்டு
 வகையாக மூடிவைக்க நீர்களற்றப்
பாய்ச்சிடவே யிருக்குமது உப்புத்தானும்
 பதிவாக உருண்டைசெய்து கதிரில்வையே, (328)

வைத்துமே உண்டைக்குக் கவசங்கேளு
 வகையான கடல்நுரையுஞ் சீனமோடு
நைத்துமே மேனிச்சார் விட்டரைத்து
 நலமாக மூன்னுண்டை மேலேகட்டு
கைத்துமே வதுவாகக் கட்டித்திரு
 கனமாகப் புடம்போட்டுப் பிரித்துப்பாரு
மைத்துமே உருகியது மணியாய்நிற்கும்
 வகையாக உண்டைமேல் கவசங்கட்டே. (329)

கவசமாம் மூன்போலே கட்டி நீயும்
 கணக்காகப் புடம்போட்டு யெடுத்துக்கொண்டு
தவசமா யிப்படிக்குத் தாமூமஞ்சு
 தடையறவே கட்டியே புடமுமிட்டால்
பவசமா யுருகியது மணியுமாகும்
 பாவகமாய்க் குகைதனிலே வைத்துருக்கத்
துவசமாய் வெள்ளிபொன்போல் கண்விட்டாடும்
 துடியான வாதமிது தொண்மைதானே, (330)

கல்லுப்பு மேரு.

தானென்ற உப்பைத்தான் குகையில்வைத்துத்
தாட்டிகமா யுருக்கியே தன்மைகேளு
வானென்ற மெழுகாலே குகைதான்பண்ணி
வகையான குகையினுட மார்க்கங்கேளு
ஊனென்ற உப்புருக்கிக் குகையில்சாய்த்து
உறுதியாய் வார்த்தபின்பு யெடுத்து நீயும்
கானென்ற குகையோட்டை யில்லாமற்றான்
கனிவாகப் பார்த்து நீ வைத்துக்கொள்ளே. (331)

இரசச் செந்தூரம்.

கொள்ளவே சூதமென்ற ராசாதன்னைக்
குணமாகச் செந்தூரங் கூறக்கேளு
வள்ளலார் சொன்னபடி சூதந்தன்னை
வகையாயூ மத்தஞ்சார் விட்டரைத்து
உள்ளபடி யிருசாம மரைத்து நீயும்
உறுதியாய் உப்பான குகையிலிட்டுத்
துள்ளவே அடுப்புதனில் சட்டியிட்டு
துடியான மண்விபரஞ் சொல்லக்கேளே. (332)

சொல்லவே சட்டிதனில் மணலைத்தானும்
துடியாக நாலுவிரற் கடைதானிட்டுக்
கல்லமருங் குகையையதன் மேலேவைத்துக்
கணக்காக மணலைத்தா னிரம்பயிட்டு
வல்லவே குகைபின்வாய் தெரியவிட்டு
வடிவாகத் தீயெரிப்பாய் கமலம்போலே
சொல்லவே முத்தீயு மூட்டிப்பின்பு
சுகமாகப் பனிரெண்டு சாமந்தீயே. (333)

தீயிட்டு ஆத்தியபின் சொல்லக்கேளு
திடமான உப்பான குப்பிதன்னைக்
காயிட்டு ஆத்தியே யெடுத்துக்கொட்டு
கனிவான சூதஞ்செந் தூரமாகும்
வாயிட்டு முருக்கம்பூப் போலாம்நன்றாய்ப்
பதியவே யெடுத்து நீ பாகங்கேளு
வாயிட்டு மகமதுவை வணங்கியேற்றி
வடிவான நபிமாரைத் தொழுதுபோற்றே. (334)

போற்றியே ஈசானந் தன்னில்நின்று
பொருந்தவே நூறுசேர் செம்புருக்கிக்
கோற்றியே சூதச்செந் தூரமொன்று
குறித்துவிடு உருக்கியெடு யேமந்தானும்
மாற்றியே பத்தரையாம் ஆணிக்கொக்கும்
மணியென்ற உப்புக்குங் காவிக்குந்தான்
நாற்றிசையு மெய்க்கவே யிறங்கிப்போகும்
நாதாந்த யாகோபு சொன்னவாறே. (335)

சொன்னதொரு செந்தூரந் தன்னைவைத்துச்
சொற்பெரிய நபிமாரைத் துதித்துப்போற்றி
தன்னாமா யிப்பாகஞ் செய்துகொண்டு
நாட்டிலே சொல்லாமல் மனம்நிறுத்தி
இன்னிலத்தி லிருக்குமட்டும் உண்டுடுத்தி
இதமாகச் சோற்றுக்கு யிடமேதேடி
கன்னல்போல் சூதசெந் தூரம்வைத்துக்
கருதியே கலக்கமது இல்லைதானே. (336)

இல்லையென்று சொல்லாமற் செந்தூரத்தை
இதமாகப் பணவிடைதான் தேனிலுண்ணு
நல்லறிவாய் நரைதிரைக ளற்றுப்போகும்
நாட்டமுடன் புளியுப்பு எண்ணெய்தள்ளு
பொல்லாமை யில்லாநல் மார்க்கமாகப்
போக்கோடே பாகமாய்ச் செய்துநீயும்
கொல்லவே சாக்குத்தான் செந்தூரமாகும்
கோடிகவ ராடலாங் கொள்கைதானே. (337)

தானென்ற கல்லுப்பா லெல்லாமாச்சு
தனியான சூதமது தாக்கப்பட்டு
வானென்று சாகுமது செந்தூரித்தால்
வகையான கவர்கோடி ஆடலாகும்
ஊனென்ற உடல்தனிலே செந்தூரத்தை
உண்டிடவே காயமது கற்றூணாகும்
கானென்ற நபிமார்க ளாடுமாட்டு
கருத்தான மகமதுவைக் கண்டுபோற்றே. (338)

கண்டுமே மேற்குமுக யாகிநின்று
கருத்துதனை நிலை நிருத்திக் கவலையுற்று
பண்டுமே கால்மடித்துக் காத்தை நீட்டிப்
பதிவாக யெழுந்தருளும் பாகமாக
செண்டுமே வானததை நோக்கி நீயும்
செவ்வையாய்த் திரும்பியே தொழுதுபோற்றி
மூண்டுமே செய்யாமற் காண்பாரல்லால்
மூத்தியுண்டு தொட்டதெல்லாஞ் சித்திதானே. (339)

சித்தியது ஆகவென்றால் கல்லுப்பைத்தான்
சீர்தூக்கிப் பார்த்துமெள்ளப் பாகத்தோடே
முத்தியாய்ச் செய்திடிலோ மூர்க்கமாகும்
முத்திபெறக் கல்லுப்பில் முத்தியுண்டு
சத்தியமாய்ச் சொல்லிவிட்டே னின்னூல்தன்னில்
சரியான கைபாக வரிசைகண்டு
நத்தியே செய்திட்டாற் பலனுமாகும்
நாதாந்த யாகோபு நலஞ்சொன்னாமே. (340)

செய்யுந் தொழில்.

நலமாகச் சவுக்காரச் சுண்ணத்தாலே
நாடினால் சகலசித்தும் நல்கும்பாரு
அலமாக வாதவித்தை அலைச்சலில்லை
ஆடினால் கவர்கோடி ஆடலாகும்
செலந்தனிலே நடந்தாப்போ லிருந்துவாழ்வீர்
சீக்கிரமாய்ச் சவுக்காரச் சுண்ணம்பண்ணு
பிலமாகச் சூதத்தைக் கட்டித்திரு
பிரபலமா யெல்லாமுஞ் சித்தியாமே. (341)

சித்தியாய் வெடியுப்புச் சுண்ணப்பண்ணிச்
செயநீரா யாக்கியே வீரமிட்டுப்
பத்தியாய் வெகுதொத்த மாகப்பண்ணிப்
பதிவாகச் சவுக்காரந் தன்னிலிட்டு
நத்தியே அரைத்திடவே கடுஞ்சுண்ணந்தான்
நலமாக ஆகிவிடுந் துருசுமேலே
கத்தியே கட்டிவிடுந் துருசு நீறும்
கனிவாக நீறியபின் சொல்லக்கேளே. (342)

சொல்லவே துநசு நீர் தன்னிறகேளு
சுருதிபெறச் சூதத்தைக் கட்டி நீயும்
நல்லவே செந்தூரம் பண்ணித்திரு
நலமாகச் செம்புதனிற் கொடுத்துப்பாரு
வல்லமையாய்த் தங்கமது யெளிதிளாகும்
வாய்ப்பேச்சால் சொல்லாதே உழைத்து நீயும்
புல்லறிவாய்ச் செந்தூர மூண்டுபாரு
பொருமைதரும் நபிமார்போ லிருக்கலாமே. (343)

இருக்கவே கல்லுப்பு தன்னைவாங்கி
இயலான சவுக்காரச் சுண்ணத்தாலே
நருக்கென்று கட்டியே புடமிட்டு
நலமாக யெடுத்துருக்கி மேருபண்ணி
பருக்கவே சூதத்தை அதிலேவிட்டுப்
பதிவாக யெரித்திடச்செந் தூரமாகும்
கருக்குமே நவலோகம் பழுக்கும்பாரு
கணக்காகச் சொல்லிவிட்டேன் கருதிப்பாரே. (344)

கருதிப்பார் நூலாய்ந்த குழந்தைக்கெல்லாம்
கணக்குப்போல் வாதத்தைப் பற்றிச்சொன்னேன்
இருதயத்தில் வாதிமார் வைத்திருத்தி
இதமாக யிக்காண்டந் தனிலுழைத்துப்
பருதிப்பார் பலனெல்லாம் கண்டுதேறிப்
பதைப்பற்று உலகத்தில் பற்றிப்பார்க்கக்
குருதிபோற் செய்திட்டுச் செந்தூரத்தைக்
குணமாகக் கொண்டிடவே சித்தியாமே. (345)

சித்தியாம் ஏழைக்கும் வாதிக்குந்தான்
சிறப்பாக உப்பொன்று சொல்லக்கேளு
பத்தியா யிந்தஉப்பி லுழைத்து நீயும்
பதிவாகச் சூதத்தைக் கட்டிக்கொண்டு
நத்தியே செம்புதனிற் கொடுத்துபாரு
நானிலத்தில் வெகுவேதை யாடித்தேரு
முத்தியது வந்துவிடும் நபிமார்போலாம்
முனிவான சாக்கறிய மூத்திதானே. (346)

கரியுப்புக் கட்டு.

முத்தியாய்க் கல்லுப்புச் சேருளொன்று
முனிந்துமே மேனிச்சார் தன்னுலாட்டி
நத்தியே சூதமது பலமும்நாலு
நலமான நாகமது பலமுமொன்று
சித்தியாம் நாகத்தை உருக்கிக்கொண்டு
சிறப்பாகச் சூதத்தை அதிலேவாரு
பத்தியாய்ப் புட்டுபோ லுண்டையாகும்
பகரறிய உண்டைமேற் கவசங்கேளே. (347)

கவசமாய் மேனிச்சார் விட்டரைத்துக்
கனிவான உப்பைத்தான் கவசங்கட்டித்
தவசமாய் வலுவாகச் சீலைசெய்து
தாட்டிகமாய் ரவிதனிலே காயவைத்து
பவசமா யதன்மேலே சவுக்காரத்தைப்
பதிவாகக் கட்டியே காயவைத்து
அவசியமாய்க் காடையென்ற புடத்திலிட்டால்
அடைவாக மஞ்சள்போ லாகுந்தானே. (348)

ஆகுமே மஞ்சளாம் உப்பிலேறி
அடைவாக ரசஞ்சொக்கும் அறிந்துநீயும்
வேகுமே கல்வமிட்டு அரைநால்சாமம்
விதமான பொற்றலையி நீரினாலே
பாகுபெற வில்லைதட்டிக் கதிரில்வைத்துப்
பதிவாகச் சுண்ணமென்ற கவசங்கட்டி
வாகுமே முன்புடம்போல் போட்டுத்திரு
வடிவாக யெடுத்திடவும் வகையதாமே. (349)

வகையாக இப்படிக்குச் சிவக்கமட்டும்
வல்லமையாய்ப் புடம்போட்டு யெடுத்துநீயும்
தகையாக நபிமாரைத் தொழுதுபோற்றித்
தன்மைபெற மனமதுதா னுருகிநீயும்
துகையாகச் செம்பதுதான் பத்துக்கொன்று
துடியாகக் கொடுத்துருக்க எட்டுமாத்து
தகைசெய்து விற்றுமே செலவுசெய்து
நலமாகச் சுழிமுனையை நாடிப்பாரே. (350)

நாடிப்பா ரிப்படிக்குச் சூதங்கட்டி
நலமான ஞானவழி அடுத்துக்கூடு
தேடிப்பார் நபிமாரைத் தொழுதுபோற்றித்
திறமாகப் பத்தியே தொழுது நீயும்
கூடிப்பார் மனதுருகிப் பார்க்கும்போது
குணமாகத் தீபவொளி குணமுந்தோணும்
பாடியே நிற்றொந்த மாடிநீயும்
பதிவான வாதவித்தை பயின்றுசெய்யே. (351)

செய்யவே வாதந்தா னெளிதோவல்ல
செய்திட்டால் வெகுசுருக்கு சித்தியோர்க்குப்
பையவே கம்பமென்ன உச்சமாகும்
பதிவாக யேறியே ஆடுவோர்க்கு
நையவே வெகுசுருக்குப் பழகினோற்கு
நாட்டிலே பழகாதார் பயமுமாகும்
மெய்யுமே சொன்னாலும் பொய்யென்பார்கள்
மேன்மையில்லா வாதிக்குப் புத்திசொல்லே. (352)

வாதி செய்கைகள்.

புத்திதா னேதென்றாற் சொல்லக்கேளு
புகலறிய வாதிமார் செய்யுங்கூத்து
பத்தியாய்ப் பூநீரை யெடுத்துவந்து
பதிவான மூத்திரத்தை அதிலேயிட்டு
நத்தியே கதிரில்வைத்துக் காயப்போட்டு
நலமாகச் சுண்ணம்பு நீருங்கூட்டிச்
சித்தியாய்க் கல்லுப்பு மதிலேயிட்டுச்
சிறப்பாகத் தீயெரித்துக் காய்ச்சுவாயே. (353)

காச்சியே குழம்பான பதத்திலப்போ
கருணைபெற நல்லெண்ணெய் தன்னைஊற்றி
வாச்சிதுகா ணென்றுசொல்லி உண்டைபண்ணி
வடிவான யெண்ணெய்தனைக் கழட்டுவேன்பார்
தாச்சியோ வென்றுசொல்லிக் கழட்டும்போது
தனியாகக் கொளகொளன்று வந்துதென்று
பாச்சியே சொல்லிவிட்டு மயங்கித்தானே
பதிவாக யிப்படிக்குப் புலம்புவாரே. (354)

புலம்புவார் பாகத்தை யறியாமற்றான்
போக்கோடே புடம்வைத்துப் பின்பெடுத்து
அலம்புவார் ஆயாசப் பட்டுப்பட்டு
ஆடியே மனதுபுண்ணு யலைந்துசுட்டுத்
தலம்புவார் சவுக்காரச் சுண்ணமாச்சு
தடையறவே வெடியுப்பு நீறிப்போச்சு
உலம்புவார் யின்னமென்ன பாடுயென்பார்
உற்றுணர்ந்து பாராத உலுத்தர்தானே. (355)

உலுத்தராய்த் துருசுதனில் கட்டிப்போட்டு
உண்மையாய்ப் புடம்போடத் துருசைத்தானும்
அலுத்துமே கரியாச்சு தென்றுபார்த்து
அடைவாகச் சொல்லியே புலம்புவார்கள்
பலுத்துமே பல்லைத்தான் கடிப்பாரப்பா
பதமறியார் செய்யுகிற பாகம்போக்கி
உலுத்தரவர் கனபாடு படுவாரப்பா
உண்மைநூல் தெரியாத வாதிதானே. (356)

வாதியாம் புத்தியுள்ள வாதிதானும்
வடிவான சாத்திரமா ராய்ந்துபார்த்துக்
கோதியே நூல்வர்பங் கண்டுதேறிக்
குணமாகப் பொருமையாய்ச் செய்வாரப்பா
சோதியென்ற பூநீரை அறிந்தெடுத்துச்
சுருக்காகச் செய்துமே சுண்ணம்பண்ணி
ஆதியாம் சுக்கான்கல் லறிந்தெடுப்பார்
அடைவான ரசவாதி ஆண்மைதானே. (357)

ஆண்மையாய் உலகோர்க்கு வாதமெய்தில்
அழிம்பான புத்திகளை மனதிலெண்ணித்
தாண்மையாய்க் கொலைகளவு பொய்மார்க்கங்கள்
தாட்டிகமாய்ச் சாருயங் கள்ளுதன்னை
வாண்மையாய் அபினியொடு கஞ்சாவெல்லாம்
வடிவாக உண்டுமே மயங்குவார்கள்
காண்மையாய்க் குடிகேடு செய்வாரப்பா
கனிவான குறும்பரவர் கணக்குமாமே. (358)

கணக்காகப் பொய்க்குரும்ப வாதிதானும்
கனிவாகச் சவுக்கார முடிப்பேனென்று
இணக்கமாய்ச் சொல்லியே பூனீற்றில்தான்
இதமாக உழைக்காமல் நினைத்ததெல்லாம்
புணக்கமாய்ச் சொல்லியே செய்துபார்த்துப்
பலனில்லை யென்பார்கள் பதிவிலாதார்
உணக்கமாம் நிற்மூட வாதிக்குத்தான்
உறுதியாய் நூலதனைக் கொடுத்தார்பாழே. (359)

பாழான நரகமுண்டு நூல்கள் தன்னைப்
பரிகாசஞ் செய்வதற்கு அல்லலுண்டு
கூழான கஞ்சிக்கி யேங்கியேங்கிக்
கொடுப்பாரைக் காணமற் றிரிந்தலைந்து
வாழான வாழ்வதனைத் தானிழந்து
வடிவான மேனிகுன்றித் தயங்கிநிற்பார்
தாழாத நபிமார்க ளிட்டசாபந்
தனையகற்ற ஒருவரால் முடியாதென்னே. (360)

முடிவாகச் சொன்னதொரு சுண்ணக்காண்டம்
முதலாகக் கைபாக வரிசைகண்டு
அடியாகச் செய்திட்டுச் சவுக்காரத்தை
அன்பாக முடித்துமே அறிந்துநீயும்
பிடிபாடாய்ச் சொன்னதுபோல் துருசை நீற்றிப்
பின்புதான் சூதத்தைக் கட்டிப்பாரு
முடிவாக வாதமது யேவல்கேட்கும்
மூதண்ட நபிமார்கள் சொன்னதாமே. (361)

உப்புக் கட்டு.

ஆமென்ற கல்லுப்புக் கட்டக்கேளு
அடைவான பாறையுப்புப் படியும்நாலு
காமென்ற கடல்தண்ணீர் படியும்யெட்டு
கனிவாகப் பாண்டத்தி லிட்டுநீயும்
தாமென்ற உப்பையெல்லா மதிலேபோட்டுத்
தப்பாமற் கடல்நுரையும் நீற்றிப்போடு
வாமென்ற உப்புக்கு நாலத்தொன்று
வடிவாகப் போட்டுமே மார்க்கங்கேளே. (362)

மார்க்கமா யடுப்பேற்றிப் பொங்காமற்றான்
மயமாகக் காய்ச்சியே குழம்பதாக்கி
வார்க்கவே மறுகத்தான் உப்புத்தண்ணீர்
வடிவாகப் படியெட்டு அளந்துவிட்டுத்
தார்க்கவே கதிரதுபோ லெரித்துக்காய்ச்சித்
தப்பாம லிப்படிக்குத் திரத்தைக்கேளு
ஆர்க்கவே முப்பத்தி ரெண்டுநேரம்
அடைவாகக் காய்ச்சினபின் அறியக்கேளே. (363)

அறியவே காய்ச்சினபின் கடல்தண்ணீரை
அடைவாகப் படியெட்டு அளந்துவிட்டு
பறியவே கொதியிடவே கரைந்துபோகும்
பக்குவத்திற் றுணிபோட்டு வடியுங்கட்டி
நறியவே மறுசட்டி தன்னிலிட்டு
நலமாக ஒட்டவே காய்ச்சிநீயும்
வறியவே யெடுத்துப்பார் தந்தம்போலே
வடிவாக யிருக்குமது வண்மைகேளே. (394)

வண்மையாய்க் காய்ச்சினதோ ருப்புதன்னை
வகையான கரியில்வைத்து உருக்கிப்பாரு
உண்மையாய்ப் பொன்போலே கண்விட்டாடும்
உறுதிபெற வயிரம்போ லுருகியாடும்
தண்மையாய் முத்துப்போ லுருண்டுஆடும்
தாட்டிகமாய் நபிமார்கள் பாகமாகும்
துண்மைபெற உலகுதனில் சொன்ன நீதி
துடியான பாகமது துயர்ந்துபாரே. (364)

துயர்ந்துதா னுப்பாலே கெதைதான்செய்து
துடியாய்நால் பட்டைவைத்து கண்ணைக்கட்டிப்
பயந்துமே காயவைத்து மெழுகுகட்டிப்
பதிவான உப்பைத்தா னுருக்கிநீயும்
நயந்துமே கருக்கட்டி அதிலேஊற்று
நலமாக நால்பட்டை யாகத்தோணும்
வயந்துமே உப்பதுவும் உருகிப்பாய்ந்து
வடிவான கெதையாகும் வண்மைதானே. (366)

வண்மையாய் நாலுபட்டைக் கெதையுமாகும்
வடிவான பட்டைக்குச் சாயமேற்ற
உண்மையாய்ச் சொல்லுகிறே னொருபட்டைக்கு
உறுதியாய்த் துருசுதனை யரைத்துப்பூசித்
தண்மையாய்ப் புடம்போட்டு யெடுத்துப்பாரு
தடையறவே நீலநிற மாகுங்கேளு
கண்மையாய் மறுபட்டை தன்னிலேதான்
காரணமாய் வீரமது காலுமிட்டே. (367)

இட்டுமே வெடியுப்புச் செயநீராட்டி
இதமாக மறுபட்டை தன்னிற்பூசி
நட்டுமே புடம்போடு வெள்ளையாகும்
நலமாக எடுத்துமே அப்பாற்பாரு
பட்டுமே மறுபட்டை தன்னிற்கேளு
பதிவான தாளகத்தை அரைத்துபூசிக்
கட்டுமே கதிரில்வைத்துப் புடமுமிட்டால்
கடிதாகச் செந்தூர மாகுந்தானே. (368)

ஆகுமே மறுபட்டை தன்னிற்றானும்
அடைவான கெந்தகத்தைச் செயநீராட்டிப்
பாகுபெறப் பட்டைதனிற் பூசிப்பூசிப்
பதிவாகப் புடம்போட மஞ்சளாகும்
தாகுமே நாலுபட்டை வர்ணமேத்தித்
தாட்டிகமா யெடுத்துமே கழுத்தில்வைத்து
வாகுபெற மலைகளெல்லாம் போகும்போது
வடிவாகச் சிலவுக்குச் சொல்லக்கேளே. (369)

சொல்லவே வயற்பசித்த தானாற்கேளு
சுகமான ஊர்தனிலே சென்றுபுக்கி
நல்லவே கம்மாளன் வீட்டிலேகி
நலமாகச் செம்புநா ரென்றுருக்கிக்
கல்லவே நீலவர்ணம் ஒன்றுதாக்கு
கருணைபெற மாத்தாறு காணும்பாரு
வல்லமையாய் விற்றுமே செலவுசெய்து
வடிவாக மறுதேசம் போகக்கேளே. (370)

போகவே செலவுக்கு யில்லாப்போனல்
போக்கோடே மறுபட்டை வீரந்தன்னை
ஆகவே பிட்டுமே செம்புநூறு
அடைவாக ஒன்றுமே கொடுத்துப்பாரு
யோகமாய் மாத்ததுவும் யேழுமாகும்
ஒழுங்காக உண்டுமே வழிநடந்து
தாகவே தருகாவிற் சென்றுபுக்கித்
தாட்டிகமாய்ச் சிலவுக்குச் சொல்லக்கேளே, (371)

சொல்லவே கம்மாளன் வீட்டுலேகிச்
சுருதிபெறக் கெந்தத்தின் பட்டைதன்னை
நல்லவே பிட்டுமே கையில்வைத்து
நலமாகச் செம்புநூ றென்றுருக்கிக்
கல்லவே கொடுத்துவிடு மாத்துயெட்டுக்
கனிவாக யிருந்திடுங்காண் விற்று நீயும்
மெல்லவே கந்திரியும் ஆக்கித்தானும்
மேன்மையாய்க் கொடுத்துவிட்டுப் பின்புகேளே. ()

பின்புமே மறுதேசம் போகும்போது
போக்கோடே சிலவுக்கு யில்லாப்போனல்
அன்பதாய் தாளகத்தின் பட்டைதன்னை
அடைவாகப் பிட்டுமே கருமான்வீட்டில்
தென்புடனே போகியே செம்புருக்கித்
திடமாக நூற்றுக்கு ஒன்றுதாக்கு
அன்புடனே மாத்தெட்டுக் காணும்நன்றாய்
அதைவிற்றுச் சிலவுக்கு வைத்துக்கொள்ளே.(373)

வைத்துமே இப்படிக்கு மக்காதேசம்
வடிவாகப் போகுமட்டும் நபிசொத்தைத்தான்
வைத்துமே செலவழித்துக் கந்திரிபண்ணி
வகையாக வைத்துமே நடந்துபோயி
சித்துவர மக்காவின் அல்லாவீதி
சிறப்பாக வாசலிலே போகும்போது
நத்துமே நபிமார்க ளிருப்பாரப்பா
நலமாக அவர்களுக்குச் சொல்லக்கேளே. (374)

மக்காதேசப் பெருமை.

சொல்லவே எங்கிருந்து எங்கேபோருய்
சுருதியாய்க் கேட்பார்க ளவர்களோடே
நல்லபுத்தி யாகவே பேசிநீயும்
நல்மாக யிசுலாத்தி லானபிள்ளை
கல்லவே மகமதுவைத் துதிக்கப்போறேன்
கனிவாக விட்டுவிடு யென்றுசொல்லு
தல்லவே விடமாட்டே னென்றுசொன்னல்
தடையறவே நான்சொல்லக் கேளுதானே. (375)

கேளுமே வெகுகோடி காலம்நானும்
கெடியாக நபிமாரைக் காத்திருந்தேன்
ஆளுமே அவர்கள்தான் மனமிறங்கி
அடைவாக ஒருஉப்புச் சொன்னர்தாமும்
கூளுமே கெதைசெய்து கொடுத்தாரென்று
குறியாகச் சொல்லிடவே காட்டுயென்பார்
நாளுமே காட்டிடவே விடுவாரப்பா
நலமாக உள்ளேதான் சென்றுபுக்கே. (376)

சென்றுமே உள்ளேதான் நின்றுநீயும்
சிறப்பான வீதியிலே நபிமார்ரெம்பக்
கண்டுமே அவர்களுக்கு வணங்கிப்போற்றிக்
கனிவாகத் தொழுதிறைஞ்சிப் பள்ளிதன்னில்
அன்றுமே போயுமே அடிவணங்கி
அடைவான மனதுருகிச் சென்றுயேகி
நின்றுமே உத்தரவு கேட்டுக்கொண்டு
நினைப்பைத்தா னுறுதியாய்ச் செய்திடாயே. (377)

செய்திட்டு நிற்கையிலே நபிமாரெல்லாம்
திடமாகப் பள்ளிதனிற் கொண்டுபோவார்
பைதிட்டுப் பதினெட்டுப் படியிலேதான்
பதிவாக யேருதே அடியில்நின்று
கைதிட்டுக் கால்மடித்துத் தொழுது நீயும்
கனிவாக யெழுந்திருந்து வானம்பார்த்து
பைதிட்டு மகமதுவை நினைத்துப்பூசி
பதியான விதிதோன்றும் பழமையாமே. (378)

ஆமேதா னுருசத்தங் கேட்டுப்பாரு
அடைவான அதின்பேரு வாங்குசொல்வார்
நாமேதா னதைக்கேட்டுத் தொழுதுபோற்று
நலமான வானத்தி னுளியைப்பார்த்து
காமேதான் சுடர்போலே கண்ணில்தோன்றும்
கலக்கமற்று உன்மனதைத் திடமேசெய்து
வாமேதான் லாயிலா யில்லல்லாகூ
வடிவாகச் சொல்லியே தொழுதுபோற்றே. (379)

தொழுகிறது அல்லாவைத் தொழுதுபோற்றித்
துப்பறவா யுப்பைத்தான் தொழுதுபோற்று
அழுகிறது போலழுது புலம்பியேற்றி
அடிபணிந்து மகமதுவைத் தொழுதுபோற்றி
நழுவியே போகாமல் சவுக்காரத்தை
நாடியே தொழுதிறைஞ்சி நன்மையாக
பழுகுமே நபிமாரைத் தொழுதுபோற்றிப்
பதிவாக நால்வேதம் பொய்போகாதே. (380)

பொய்க் குருக்கள்.

பொய்போகா நால்வேதக் குருக்கள்தானும்
போக்கோடே யெதிர்வருவா ரவரைக்கண்டு
மெய்யான நடக்கையாய் நடந்துகொள்ளு
மேதினியி லிப்படிக்கு நடக்காப்போனுல்
கையினுல் கல்லைத்தான் வாங்கித்தானும்
கனிவாக யெறிவார்கள் சாதிதன்னில்
வையகத்திற் சேர்க்கார்கள் நினைப்புப்பாரு
வடிவாக உலகத்தில் மாண்பர்தானே. (381)

தானென்ற இதற்கடுத்த வித்தைகேளு
தாட்டிகமாய் வாதமது அஞ்சாம்வேதம்
வானென்ற யிதைக்கற்றுக் கொண்டாயானுல்
வடிவான அல்லாவாம் வேறென்றில்லை
கானென்ற யிவ்வேதம் நிசமதாகும்
கனிவான அட்டகர்ம வித்தைக்குள்ளே
நானென்ற வாதமது முதலாஞ்சித்தி
நபிமாரும் யிப்படிக்கு நாட்டினுரே. (382)

நாடியே வேதமென்ற சொல்லேத்தானும்
நாணிலத்தி லானும்பெண் ணிரண்டுபேரும்
கூடியே வாழ்வதினால் விந்துதங்கிக்
குடியான மனிதவன் பிறந்தபோது
ஆடியே ஆதிமுதல் ரெண்டுபேரு
அடைவாகப் பிறந்துமே அதன்பின்கேளு
கோடியே பேருண்டாம் பேரிற்றானும்
குடிகேடு அவரவர்க்குப் புத்திதானே. (383)

தானென்ற புத்திரெண்டா யவர்க்குத்தானும்
தடையறவே யோசனைகள் தானும்பண்ணிக்
கானென்ற பொய்நூல்கள் படிக்கவைத்த
கள்ளரை நீ நம்பாதே அப்பாகேளு
பானென்ற அவரையே நம்பினக்கால்
பதிவான பயனில்லாப் பலனுமாகும்
ஊனென்ற உலகத்துக் குருக்கள்பேச்சை
ஊறுகிற நாகம்போ லெண்ணுவாயே. (384)

நாகமா மின்னாலே விருப்பிப்பாரு
நாடியே சுண்ணத்தைச் செய்துதேறு
யோகம்வரும் சுண்ணத்தால் வேதைகோடி
உற்றுணர்ந்தா லெல்லாமுஞ் சித்தியாகும்
பாகமதைக் கண்டாலே பலனுமாகும்
பாதைக்கோ யெல்லாமுஞ் சித்தியாகும்
யூகமதை அறிந்தவனே வாதியாகும்
உற்றுணர்ந்தா லெல்லாமுஞ் சித்தியாமே. (385)

சித்தியா யாகவென்றுற் சொல்லக்கேளு
சிறப்பான மக்காவின் தேசந்தன்னில்
பத்தியாய்ச் செய்கின்ற மார்க்கஞ்சொன்னேன்
பதிவான சவுக்கார வர்மஞ்சொல்வேன்
முத்தியாய்ச் சித்திரைவை காசிமாதம்
முனிவாகச் செங்கதிரில் பொங்கிநீரும்
சத்தியாய் பூநீரு பதக்குவாரி
சரியாகப் பாண்டமிட்டுச் சொல்லக்கேளே. (386)

சொல்லவே பாணியது படிதானெட்டுச்
சுருதிபெறப் பாண்டத்தி லிட்டுக்கேளு
கல்லவே வெள்ளைக்கல் படியாஞ்சுண்ணம்
கனிவாகக் கல்லுப்புப் படியுமொன்று
நல்லவே போட்டுமே திரிநாள்வைத்து
நலமாகத் தெளிவிருத்து நாட்டக்கேளு
பல்லவே புதுப்பாண்டந் தன்னிலிட்டுப்
பதிவாகக் காய்ச்சியே பருவங்கேளே. (387)

பருவமாய்க் குழம்பான பதத்தில்வாங்கிப்
பதியவே மூன்போலே சாம்பலிட்டு
அருவமா யதின்மேலே குழம்பையிட்டு
அதின்மேலே துணியைத்தான் போட்டுநீயும்
வருவமா யதின்மேலே சாம்பலிட்டால்
வகையான சவுக்கார நீரைவாங்கும்
துருவமாய் விளாங்காய்போ லுண்டைபண்ணிச்
சுருக்காக யெடுத்துமே சொல்லக்கேளே. (388)

சொல்லவே உண்டையதின் மேலேதானும்
சுருதிபெறக் கவசமது சொல்லக்கேளு
நல்லவே அஞ்சுசுண்ண மேலேகட்டி
நலமாகக் கதிரிலிட்டுக் காயவைத்துக்
கொல்லவே பத்தெருவிற் புடத்தைப்போடு
கொடுமையாய்ச் சவுக்காரச் சுண்ணமாச்சு
மெல்லவே யெடுத்துமே சொல்லக்கேளு
வெருளாதேயின்னமொன்று விளம்பக்கேளே. (389)

விளம்பவே புடம்போட்ட சவுக்காரத்தை
விருப்பமாய்க் கல்வத்தி லிட்டுநீயும்
தளம்பவே வீரமது காலுமிட்டுத்
தாக்கிடவே வெடியுப்புச் செயநீராலே
குளம்பவே அரைத்துமுன்போல் வில்லைதட்டிக்
கொடுமையாய் ரவிதனிலே காயவைத்து
வளம்பவே அஞ்சுசுண்ணக் குகையிலிட்டு
வளமாகப் புடம்போட்டு யெடுத்துக்கொள்ளே. ()

எடுத்துமே பின்புதான் வீரங்காலாம்
இசையாக முன்வைத்த சவுக்காரத்தில்
அடுத்துமே சேர்த்து நீ வெடியுப்பைத்தான்
அடைவாக நீராலே அரை நீமூன்று
கடுத்துமே நாளரைத்து வில்லைதட்டிக்
கனிவாகக் கதிரில்வைத்து அஞ்சுசுண்ணம்
விடுத்துமே குகையில்வைத்துப் புடத்தைப்போடு
விதமாக யெடுத்துமே சொல்லக்கேளே. (391)

சொல்லவே யெடுத்துமே யிப்படிக்குச்
சுயமாக அஞ்சுதரம் வீரஞ்சேர்த்து
நல்லவே அரைத்துவில்லை தட்டி நீயும்
நலமாக யிப்படிக்குப் புடமுமிட்டால்
கல்லவே கடுங்கார மேறி நீறிக்
கனமாக யிருக்குமே கனிவாய்த்தானும்
வல்லமையாய்ச் சவுக்காரம் யெளிதிலாகும்
வடிவான விதியாளி காண்பான்தானே. (392)

தானென்ற சவுக்காரம் களிவுமாகும்
தாக்கிடவே சகலமுந்தான் சுண்ணமாகும்
வானென்ற சவுக்காரம் பலமுமொன்று
வடிவான துருசதுவும் பலமுங்கால்தான்
கானென்ற வெடியுப்புச் செயநீராலே
கலந்தரைத்துத் துருசின்மேல் கட்டித்திரு
பானென்ற அஞ்சுசுண்ண மேலேகட்டிப்
பதிவாகக் கதிரில்வைத்துப் புடத்தைப்போடே. ()

போடவே துருசதுவு வெந்து நீறிப்
போக்கோடே சுண்ணுப்பாம் புகலக்கேளு
நாடவே யிச்சுண்ணங் கடுமையாகும்
நாதாந்த நபிமார்கள் சொன்னபுத்தி
ஊடாடிப் பார்த்தாக்கா லெல்லாமுண்டு
உறுதியாய்ச் சாதிதா னென்றுமாகும்
கூடவே சாதிதனை ரெண்டுசொன்ன
குடிகேடன் லெப்பையைத்தான் நம்பாவாறே (394)

வாறேது வென்றுக்கால் சொல்லக்கேளு
வடிவான துரிசுனுட நீறுதன்னைக்
காறேது விராலியிலே தன்னிலிட்டுக்
கடிதாகப் பிழிந்திடவே நீருமாகும்
ஆறேது நீருதனை அயக்காண்டியிட்டு
அப்பனே சூதமது பலமுமிட்டுப்
பாரேது அடுப்புதனில் காயவைக்கப்
பதிவாக மணிபோலே கட்டிப்போமே. (395)

கட்டினதோர் மணியெடுத்து உருட்டி நீயும்
கனிவாக நல்லெண்ணெய் தன்னிலிட்டு
எட்டியே யெரித்திடவே இறுகிக்கட்டும்
இதமாகக் கட்டதனைக் கரியில்வைத்து
முட்டியே உருக்கிடவே சூதந்தானும்
மூவுலக மெச்சவே உருகி நிற்கும்
நட்டியே போகாம லெடுத்து நீயும்
நலமாகச் செய்கின்ற பாகங்கேளே. (396)

பாகமாய்ச் சூதமது பலமும்நாலு
பதிவாக உருகையிலே தங்கமொன்று
யோகமா யுருகையிலே நாகமொன்று
உறுதியா யெல்லாமுஞ் சேர்த்துருக்க
வாகமாய்க் களங்காகும் களங்குதன்னை
வடிவாகச் செம்புநா றுென்றுருக்கித்
தாகமாய்க் கொடுத்திடவே ஒன்றுதானும்
தாக்கிடவே நவலோகம் யேமமாமே. (397)

ஏமமாம் நூற்றுக்கு ஒன்றுமீய
இயல்பாக யெட்டரைதான் ஆணிக்கொக்கும்
ஓமமாம் புடத்திற்கும் உப்பினுக்கும்
உண்மையாய்ச் சவுக்காரச் சுண்ணம்பண்ணு
காமமாம் பெண்ணாசை தன்னைவிட்டுக்
கைப்போடு புளிப்புமுதல் யெண்ணெய்தள்ளி
வாமமாஞ் சவுக்காரச் சுண்ணத்தாலே
வகையான ஆட்டெல்லா மிதனிலாட்டே. (398)

ஆட்டான கேள்வினுல் வாதஞ்சுட்டு
அறியாமல் சுண்ணவகை யில்லையென்ருல்
நீட்டாக யென்னசெய்யும் நூல்கள்தானும்
நிலையாத மூட்டாளின் முறட்டுப்புத்தி
காட்டாகப் படித்தாலும் புத்திவேண்டும்
கனிந்துமே புத்தியில்லார்க் கொன்றுமில்லை
தாட்டான வாதிகள்தா னிந்தப்போக்குத்
தடைதப்பில் யெல்லாமுஞ் சித்தியில்லை. (399)

ஆட்டு ரத்த வேலை.

சித்தியா மின்னமொரு பாகங்கேளு
சிறப்பாக வேதந்தான் சொல்லி ஆட்டைப்
பத்தியா யறுக்கையிலே ரத்தந்தன்னைப்
பதிவாக யெடுத்துமே கையினுலே
சத்தியாய்ப் பிசைந்துமே பிழிந்தநீரைத்
தானிருத்து அந்தநீர் தன்னைக்காய்ச்ச
முத்தியாய் வெள்ளையா யிருக்கும்பாரு
முனிவாக அடியில் நின்ற சிகப்புமாமே. (400)

சிகப்பான அடியில் நின்ற ரத்தம்போலே
சிறப்பாக உலகத்து வாதிமார்கள்
அகப்பாகச் செய்திடுவார் புத்தியில்லார்
அறிவான புத்தியுள்ள வாதிதானும்
சிகப்பான ரத்தத்தைப் பிசைந்து நீரைத்
தெளிவிருத்துக் காய்ச்சிடவே வெண்ணெய்போல
தகப்பாகச் சவுக்காரச் சுண்ணஞ்செய்வார்
தடையறவே புத்தியுள்ள வாதிதானே, (401)

தானென்ற புத்தியுள்ள வாதிதானும்
தடையறவே ரெத்தத்தில் நீர்வடித்துக்
கானென்றே செய்வார்கள் புத்திகெட்ட
கலக்கமுள்ள வாதிதான் செய்யமாட்டார்
ஊனென்ற உலகத்திற் பாடுபட்டு
உறுதியா யலைந்துமே திரிவாரப்பா
வானென்ற சாராயங் கள்குடித்து
வகையறியார் செய்யுகிற வழக்கந்தானே. (402)

வழக்கமாய்ச் சவுக்காரம் யெளிதில்செய்ய
வகையாகச் சொல்லிவிட்டேன் வண்மையாகத்
தழக்கமாய் வெடியுப்புச் செய்யுமார்க்கம்
தனைச்சொன்னேன் பாகமுதல் வரிசைசொன்னேன்
பழக்கமாய்ப் பழகினற் சுண்ணஞ்செய்வார்
பழகாட்டா லொன்றுமில்லை பலனுமில்லை
சழக்கென்று விட்டாக்கா லெல்லாம்பாழாம்
தடையறவே இந்தநூல் சரியாய்ப்பாரே. (403)

சரியாகப் பாகமதைத் கண்டுதேரு
சல்தியாய்ச் சுண்ணமதை வைத்து நீயும்
பரிவாகக் கடுமையாய்ச் சுண்ணம்பண்ணிப்
பாகமாய்ச் செய்திட்டுப் பலன்கள்பார்த்து
விரிவாகச் செய்யாமல் உலக நீகி
விதமாகத் துரிசதுவை நீற்றி நீயும்
குரியாகச் சொன்னதுபோல் ரசத்தைக்கட்டிக்
குணமாகச் செய்தாக்காற் பலனுமாமே. (404)

பலனுகச் சவுக்காரச் சுண்ணந்தன்னில்
பாடுபட்டுச் செய்தாக்கால் பலனுமாகும்
புலனுகப் பாடுபட்டும் புத்தியில்லார்
போக்கோடே யில்லையென்பார் பிரட்டுவாதி
அலனுகப் பாடுபட்டும் பொருளைக்காணர்
ஆதியாம் சவுக்காரம் வகையாயில்லை
தலனுகச் சொல்லியே புலம்பித்தானும்
தற்கமிட்டுத் திரிவார்கள் உலகத்தோரே. (405)

உலகத்திற் பெண்ணோடே கூடிவாழும்
உறுதிபெற்ற வாதிக்குப் பொன்னுமில்லை
கலகத்திற் பெண்ணோடே மருவிச்சேர்வார்
கருதிடுவார் அவளோடே சத்தொழித்து
பலகற்றும் பலனில்லை மாய்ந்துமாய்ந்து
பதிவாகச் சாசமா யிருப்பார் கண்டீர்
சலம்போலே நீராகமூறிந்து நிற்பார்
சாத்திரத்தில் கவனத்தை வைத்திடாரே. (406)

வைத்திட்டோ ரவர்களுக்கு வாதமுண்டு
வடிவான பொருளுண்டு மயக்கமில்லை
கைத்திடவே பணமுண்டு வாதமுண்டு
கடுமையாய்ச் சந்தோஷ மிகவுமுண்டு
நைத்திட்டு வெகுபேரோ டிணக்கமுண்டு
நலமான குளிகையுண்டு நாட்டிலேதான்
பைத்திட்டு நன்னடக்கை மிகவுமுண்டு
பதிவான களங்குண்டு செம்புதானே. (407)

செம்புதா னெடுக்குமுன்னே சொல்லக்கேளு
செயமான சத்துமுன்னே செய்து நீயும்
வம்புதான் செய்யாமல் சத்தெடுத்து
வடிவான செம்புசெய்யில் மதியிலேதான்
தெம்புடனே பொன்னுதம் பொன்னைவிற்றுத்
திடமாக உண்டுடுத்திப் பின்னே நீயும்
தம்பமறச் செலவுசெய்து சுண்ணப்பாரு
தாட்டிகமா யாகோபு சொன்னார்பாரே. (408)

சொன்னதொரு தங்கச்செந் தூரந்தன்னைச்
சுருதிபெறச் சொல்லுகிறேன் நபிமார்சொன்ன
இன்னிலத்திற் தங்கமது உருக்கி நீயும்
இதமாகத் தகடுதட்டிச் சொல்லக்கேளு
நன்னயமாய்க் கற்காவிப் பழச்சார்விட்டு
நாடியே யரைத்துயிரு சாமங்கேளு
கன்னலாய்த் தங்கத்தின் மேலேபூசிக்
கடிதாகக் காய்ச்சியே தோய்த்திடாயே. (409)

தோய்த்திடவே தங்கமது சுத்தியாகும்
துடியாகக் குகைதனிலே உருக்கிப்பாரு
வாய்த்திடவே யெடுத்துமே பலம்நிறுத்து
வடிவாக உருகையிலே நாகந்தன்னை
ஓய்த்திடவே முன்சொன்ன படியே நாகம்
உறவாகச் சுத்திபண்ணி உறுதியாகக்
காய்த்திடவே நாகமதை யெடுத்து நீயும்
கனிவான சாரதோ டயக்கேளு
பாய்த்திடவே தங்கமது சுழித்துவாங்கும்
பதிவாகப் புட்டுப்போல் நொறுங்குந்தானே. (410)

நொறுங்குமே தங்கத்தில் நாகஞ்சேர்த்து
நொடிக்குமுன்னே கல்வமிட்டுச் சூதந்தன்னை
வருங்குமே சேர்த்துஅரை மல்லிச்சாற்ருல்
வடிவாகக் கெந்தியது சூதத்துக்கு
நருங்குமே யிடைபோட்டு மல்லிச்சாற்ருல்
நலமாக யிருசாமம் நலியவாட்டு
சுருங்குமே யிருக்குமது அரைத்துநீயும்
கதிரிலிட்டுப் பொடியாக்கிக் குப்பிக்கிட்டே. (411)

இட்டுமே வாலுகையி லெரிநேர்ப்பாகம்
இதமாக மூத்தீயு மாட்டுஆட்டு
கட்டுமே பனிரெண்டு சாமமானுல்
கணக்காக அடுப்பெரித்து ஆற்றி நீயும்
பட்டுமே யெடுத்துப்பார் அருணன்போலே
பதையாம விருந்திடுமே முருக்கம்பூப்போல்
வட்டுமே நபிமாரைத் துதியேசெய்து
வசமாக யெடுத்துமே சொல்லக்கேளே. (412)

சொல்லவே செந்தூரந் தன்னைத்தானும்
சுருதிபெற நவலோகம் நூற்றுக்கொன்று
கல்லவே இட்டிடவே பத்துமாத்து
கருணைபெற மாத்தான தங்கந்தன்னை
மெல்லவே விற்றுமே செலவுசெய்து
விருதுபெறப் பள்ளியையும் நன்ருய்க்கட்டி
நல்லவே தொழுதிறைஞ்ச நல்லதாகும்
நாடினுற் குருவாகும் நயந்துபாரே. (413)

கோடா சூரி வீரவைப்பு.

நயந்துமே சவ்வீர வைப்புதன்னை
நலமாகச் சொல்லுகிறே னுட்டோளோர்க்குப்
பயந்துமே போகாதே சொல்லக்கேளு
பதிவாகச் சொன்னதெல்லாம் சணத்தில்சித்தி
கயந்துமே உபசர்ங்கள் தன்னைக்காட்டக்
கனிவாகப் பழுத்துவிடுங் கருணையோர்க்கு
வயந்துமே யிவ்வீரம் யெல்லாத்துக்கும்
வடிவாகச் செய்திடவே வலுவுமாமே. (414)

வலுவாகக் கோடாசூரி வீரங்கேளு
வைத்திடவே பலனுகும் வண்மையோர்க்கு
நலுவாக வெடியுப்பு அஞ்சாங்காய்ச்சல்
நலமாக நாலுபத்து பலம்நிறுத்து
கலுவாகச் சீனமது அஞ்சுபத்து
கனிந்துமே யிதுரெண்டுங் கல்வத்திட்டு
தலுவாக மணிச்சாறு விட்டுஆட்டித்
தடையறவே வில்லைகட்டி உலரப்போடே. (415)

போடவே சிறுதோண்டி தன்னிலிட்டுப்
புகழாக வாலையென்ற சட்டிமூடி
ஆடவே உளுந்தாலே மண்ணுஞ்செய்து
அடைவாக அடுப்புதனி லேற்றி நீயும்
காடவே தீயெரித்துப் பீங்கான்வைத்துக்
கனிவாக வெள்ளை நீர் வருகும்பாரு
கூடவே வெள்ளையைத்தான் வீசிப்போட்டுக்
குடியாகப் பின்னீரை யெடுத்துக்கொள்ளே. (416)

எடுத்துமே குப்பிதனி லடைத்துக்கொண்டு
இதமாகச் சூதமது பலந்தானெட்டு
அடுத்துமே பெரும்பீங்கான் றன்னிலிட்டு
அடைவாகத் திராவகத்தை அதிலேவிட்டு
கடுத்துமே பீங்கானைக் கரிநெருப்பில்
கனிவாக வைத்துமெள்ளக் கொஞ்சமூத
தடுத்துமே வெள்ளைபோ லாகும்பாரு
தாக்கினுர் யாகோபு தர்மவானே. (417)

தர்மமாய்க் கல்லுப்புப் பலந்தானுலு
தாட்டிகமாய்த் துரிசியது பலந்தானுலு
வர்மமாய்ப் பூனீறு பலந்தான்ரெண்டு
வகையான வெடியுப்பு ஒன்னரைதானப்பா
கர்மமாய்ச் சீனமது ஒன்னரையேயாகும்
கனமான அன்னமென்ற பேதிதானும்
பர்மமாய் ஒருபலந்தான் கூடப்போடு
பதிவான காரமது அரையேபோடே. (418)

போடுமே கல்லுப்புத் துருசு தன்னைப்
போக்கோடே வருத்துமே கூடப்போடு
நாடுமே யெல்லாமும் பொடியதாக்கி
நலமாகச் சூதத்தில் ஒன்றாய்ப்போடு
காடுமே யிதுவெல்லாம் பொடித்து நீயும்
கனிவாக வாலுகையி னுள்ளேபோட்டுப்
பாடுமே அடுப்பேற்றி யெரிநேர்பாகம்
பதிவாகப் பனிரெண்டு சாமந்தீயே. (419)

தீயெரித்து ரெண்டுநா ளாறப்போட்டுச்
சிறப்பாகத் தேங்காய்போ லேறிநிற்கும்
வாயெரித்துச் சவ்வீர மாச்சுதையா
வடிவாக அதைமடக்க வண்மைகேளு
தாயகமாய்ச் சவ்வீரம் பொடிதான்சேரைத்
தடையற்ற கல்லுப்பு ஒன்றுமுக்கால்
மாயகமாய்ச் சவ்வீரப் பொடிக்குப்பாதி
மகத்தான துரிசியென்ற பொடிதான்பாரே. (420)

பாருமே துருசுக்குப் பாதிபூனீர்
பதிவான சீனமுக்கால் பாகமாகக்
காருமே வெடியுப்பு அப்படியேயாகும்
கனிவாக மூன்றிலொன்று சாரஞ்சேரு
வாருமே அன்னமென்ற பேதிதானும்
வடிவான பூனீர்க்குப் பாதியப்பா
ஆருமே யெல்லாமும் பொடியதாக்கி
அடைவான குப்பிக்கு அரைவாசியிட்டே. (423)

இட்டுமே வாலுகையில் வைத்து நீயும்
இதமாகத் தீயெரிப்பாய் கமலம்போலே
பட்டுமே பனிரெண்டு சாமந்தானும்
பதிவாகத் தீயெரித்து ஆற்றி நீயும்
கட்டுஒரு நாளைக்கு ஆறப்போடு
கனிவாக யெடுத்திடவே கொச்சியென்றவீரம்
இட்டுமே யிப்படிக்கு அஞ்சுமுறைசெய்தால்
திடமான கோடாசூரி யாகுந்தானே. (422)

தானென்ற யிவ்வீரச் சுண்ணஞ்செய்தால்
　　தடையறவே தங்கமது பூப்போல்நீறும்
கோனென்ற சரக்கெல்லாஞ் சுண்ணமாகும்
　　குழந்தைதான் ரசவாத மாடுமோடும்
கானென்ற வாதமது கொஞ்சமாகும்
　　கடிதான நபிமார்க ளெல்லாந்தானும்
ஊனென்ற வெகுபாடு பட்டுப்பட்டு
　　உறுதியாய்த் தேறினர் உரைசெய்தேனே. (423)

உரைசெய்தேன் சவ்வீரத் தொந்தந்தன்னை
　　உற்றுமே சொல்லுகிறே னுறுதியாகப்
பரைசெய்தேன் முன்வைத்த சவ்வீரத்தைப்
　　பதிவாகப் பலமதுதா னெட்டெடுத்துக்
கரைசெய்த கல்வத்திற் பொடியாய்ச்செய்து
　　கனமான கல்லுப்புச் சுண்ணம்ரெண்டு
வரைசெய்த துரிசியென்ற சுண்ணம்ரெண்டு
　　வடிவான வெடியுப்புச் சுண்ணம்ரெண்டே. (424)

ரெண்டான சாரமென்ற சுண்ணம்ரெண்டு
　　நேரான வெடியுப்புச் சுண்ணம்ரெண்டு
பண்டான சீனமென்ற சுண்ணம்ரெண்டு
　　பாங்கான பொடியோடே ஒக்கக்கூட்டிச்
சண்டான மேருவுக்கு அரைவாசிபோட்டுச்
　　சாதகமாய் வாலுகையின் மேலேவைத்துச்
செண்டான அடும்பேற்றி யெரிப்பாயப்பா
　　செகமறியப் பனிரெண்டு சாமந்தானே. (425)

தானென்ற வீரத்தை யெடுத்துப்பார்த்தால்
　　சாதகமா யடியிலே நிற்கும்பாரு
கானென்ற யிரும்புமே லணுப்போல்வைத்துக்
　　கனமான நீரையள்ளி அதிலேகுத்தத்
தேனென்ற குருவாகும் பாணிஊற்றித்
　　திடமான காகத்தி னிறகிற்பூசில்
கோனென்ற கொக்கிறகு போலேயாகும்
　　கொள்ளையே கொள்ளையிது வாதந்தானே. (426)

வாதந்தா னெப்படித்தான் வருகுமக்காள்
வடிவான துருசுக்குள் செம்பைக்கொல்ல
நீதியாய் மதிபழுக்கும் பொன்னேயாகும்
நீனிலத்தில் உண்டுடுத்தித் திரிந்துதானும்
காதமாய்த் துருசதுவை நீற்றி நீயும்
கணக்கவே சூதத்தைக் கட்டிக்கொள்ளு
பாதமது பூமியிலே நடவாமற்பண்ணும்
பதிவான சித்தியாம் பாரிலோர்க்கே. (427)

பாரிலே துரிசியது பலமேதூக்கப்
பதிவான சோரமென்ற வீரந்தன்னைத்
தாரியாய் மூன்றுகா சிடைதான் தூக்கித்
தப்பாமல் வாய்நீரால் வீரந்தன்னைக்
காரியமாய்க் குழைத்துநீ துருசில்பூசிக்
கதிரில்வைத்துப் பத்துநாள் போட்டபின்பு
வேரிலே நீரிருந்தால் துளிர்க்கும்போல
விதமாக நீறுமது வித்தைதானே. (428)

தானென்ற சாறுவராத் தழைகளெல்லாம்
தாட்டிகமாய்க் குருபோட்டுப் பிழிந்துபாரு
பேரனென்ற ஆறுபோல் தண்ணீராகும்
போக்காகப் புஷ்டியில்லாச் செலமுமாகும்
வாமென்ற சரக்குகளிற் சுருக்குப்போட்டால்
வடிவான சரக்கெல்லாஞ் சாகுஞ்சாகும்
கோமென்ற நவலோக மெல்லாந்தங்கம்
குணமாக யாகோபு கூறினாரே. (429)

கூறினர் விராலியிலை தனைப்பிடுங்கிக்
குணமாகத் துருசினுட சுண்ணங்கொஞ்சம்
பாரிலே யிட்டுமே யிடிக்கத்தண்ணீர்
பதிவான ஆறுபோல் செலமுமாகும்
காரியமாய் அயச்சட்டி தன்னிலேதான்
காரணமாய்ப் பிழிந்துமே சூதமிட்டு
வாரிலே சூதமது பலமுமிட்டு
வடிவாகக் காய்ச்சிடவே வழக்கமாமே. (430)

வழக்கமா யிட்டலிபோல் வெண்ணெய்யாகும்
வடிவான போக்குத்தான் மெத்தவுண்டு
தழக்கமாய்ச் சூதமதைக் கரியில்வைத்துத்
தனையுருக்கு பொன்போலே கண்விட்டாடும்
இழக்கமாய்த் தங்கமிட்டுக் கெந்தியிட்டு
இதமான தாளகமுஞ் சிலையுமிட்டுப்
பழக்கமாய் மல்லிகையின் சாற்றாலாட்டிப்
பண்புடனே குப்பியிலே பாதிபோடே. (431)

போட்டுமே வாலுகையில் மேலேவைத்துப்
பொருந்தவே பனிரெண்டு சாமந்தீதான்
காட்டுமே யெரித்துயெடு செந்தூரமாகும்
கனிவான செந்தூரம் நவலோகத்தில்
நாட்டுமே கொடுத்திடவே பத்துமாத்துத்
தடையில்லா நபிமார்கள் சொன்ன நீதி
ஊட்டுமே உப்புக்குங் காவிக்குந்தான்
உறுதியா யிருக்குமது உண்மைதானே. (432)

உண்மைதா னுபசரங்கள் காரசாரம்
உற்றுமே லவணமுத லிருபத்தைந்து
தண்மையாய்ப் பாசாண மறுபத்துநாலும்
தடையறவே நவரத்ன மெல்லாந்தானும்
கண்மையாய் யிதுவெல்லாஞ் சத்துவாங்கிக்
காரணமாய்ச் சூதமதி லீய்ந்தால்கேளு
பெண்மையாய்க் குளிகையாம் பெலக்கும்வேதை
பேர்பெரிய யாகோபு பேசினாரே. (433)

பேசினதோர் துருசியென்ற சுண்ணந்தொட்டு
பெலக்கவே சாறுவாரத் தழையிலிட்டு
ஆசியே பிழிந்து நீ வைத்துக்கொண்டு
அடைவாக நெடுங்கம்பி லிங்கம்வாங்கித்
தாசியே பழச்சாறு சுருக்குத்தாக்கு
தாட்டிகமாய் விராலிச்சார் சாமம்பத்து
வாசியே சுருக்கிடவே மெழுகுமாகும்
வடிவான நவலோகம் நூற்றுக்கொன்றே. (434)

ஒன்றிட்டு உருக்கியே பார்க்கும்போது
உறுதிபெறத் தங்கமது உயரவோடும்
நன்றுமே உப்புக்குங் காவிக்கப்பர்
நாடியே யிரங்கிவிடும் நன்மையாக
கன்றுமே போட்டதுபோல் கனிந்தோடும்
கருணைபெற நபிமார்க ளாடும்நேர்மை
பண்டுமே யிருந்ததுவை யாகோபுதானும்
பலன்பார்த்துச் சென்னதிந்த வண்மைதானே. ()

வண்மையாந் துருசினுட நீறினாலே
மகத்தான நபிமார்கள் கெவுனம்பண்ணித்
தண்மையாய் ஓடினார் தானுமப்போ
தாட்டிகமாய் நான்கூடப் போனேன்பாரு
கண்மையாய் வெகுகாலஞ் சென்றபின்பு
கனிவாக அடியேனைக் கருதிச்சொன்னார்
இன்மையா யிவ்வேலை கற்றுகொண்டு
இனிதான பாகமெல்லா மோதினேனே. (436)

ஓதினேன் வடமொழியைப் பார்த்துத்தேறி
உறுதிபெறக் கைபாக வரிசையோடு
நீதியாய்ச் சுண்ணத்தின் செயலுங்கண்டு
நிதானித்துச் சவுக்காரச் சுண்ணஞ்சொல்லி
சோதிபெற வருந்தியே நபிமாரோடே
சுருதிபெறக் கைபாக வரிசைசொல்லி
வேதிபெறச் சொல்லிவிட்டேன் துருசு நீற்றை
விதமாகக் கைகண்டால் விதமுமாமே. (437)

விதமாக விராகனிடை துருசுச்சுண்ணம்
வீதிபெறக் கள்ளிப்பால் தன்னிலிட்டு
அதமாக மூன்றுநாள் வைத்துப்பாரு
ஆதியாய் சுத்தசலம் பேலேயாகும்
நிதமாக வெள்ளையென்ற பாசாணத்தை
நெடிதான அயச்சட்டிக் குள்ளேயிட்டு
பதமாக நால்சாமஞ் சுருக்குப்போடப்
பதிவான வெள்ளையது மெழுகுமாமே. (438)

110064

மெழுகான வெள்ளைத்தா னெடுத்து நீயும்
வித்தகமாய் வெள்ளியந் தனையுருக்கி
வழுவாக யிடைக்கிடைதா னீய்ந்துபாரு
வடிவான வங்கமது நொறுங்கிப்போகும்
அழுவான வங்கத்தை வெள்ளிதன்னில்
அடைவாக யிடைக்கிடைதான் கொடுத்துருக்க
நழுவாமற் றூளாக நொறுங்கிப்போகும்
நாட்டிலே சொல்லாதே நன்மைதானே. (439)

தானென்று நொறுங்கினதோர் வெள்ளை தன்னைத்
தாக்கிடவே சமனாகச் சூதஞ்சேர்த்துக்
கானென்ற பால்முறிந்த நீராலாட்டிக்
கனிவாக வில்லைகட்டிக் கதிரில்வைத்து
ஊனென்ற அயவகலில் மூடி நீயும்
உறுதிபெற மண்செய்து சொல்லக்கேளு
வானென்ற பத்தெருவில் புடமுமிட்டால்
வடிவான குருவாகும் வண்மைதானே. (440)

வண்மைதான் குருவெடுத்து வைத்துக்கொண்டு
வடிவான வங்கம்நா ளுென்றுருக்கித்
தண்மையாய்க் குருவொன்று கொடுத்துப்பாரு
தடையறவே கிழத்தோல்போற் கிளம்புமீயம்
கண்மையாய் வெள்ளியது பத்துமாத்து
கனிந்துமே யெண்ணாதே செம்புநூறில்
தண்மையாய் ஒன்றுகொடு வெள்ளியாகும்
தாக்கிடவே நாகத்துக் கிப்படியேயாமே. (441)

ஆமேதான் நபிமார்கள் மக்காதேசம்
அடைவாக வெள்ளியம் நீரைவாங்கிப்
போமேதான் விற்றுமே செலவுசெய்து
போக்கோடே அத்தேச மெல்லோருந்தான்
வாமேதான் பிழைப்பார்க ளத்தேசத்தில்
வடிவாக வாதிக்குச் சொன்னேனப்பா
காமேதான் துருசினுட சுண்ணத்தாலே
கைக்கடங்கா வித்தையெல்லாங் கருதிப்பாரே. (442)

கருதிப்பார் தூரிசினுட சுண்ணந்தானும்
கதராமல் விராகனிடை யெடுத்துக்கொண்டு
நருதியே எருக்கினுட பாலுதன்னில்
நலமாகப் போட்டுதிரி நாளும்வைத்துக்
கருதியே பார்த்திடவே மூறிந்துபோகும்
தாட்டிகமாய்ப் புஷ்டியில்லாத் தகமையாகும்
வருதியே செலமாகும் செலத்தைத்தானும்
வடிவாக இருத்துமே வழக்கங்கேளே. (443)

வழக்கமாய் அயச்சட்டி தன்னைவாங்கி
வடிவாகக் கெவுரியென்ற பாசாணத்தைப்
பழக்கமாய் அயச்சட்டிக் குள்ளேயிட்டுப்
பதிவாக நால்சாமம் சுருக்குப்போடு
தழக்கமா யிருசாமஞ் சுருக்குப்போடத்
தன்னாலே மெழுகாகும் கண்டுநீயும்
கழக்கமாய்க் கெவுரியென்ற மெழுகுதன்னைக்
கணக்கிட்டுச் சொல்லாதே முடிப்பாய்பாரே. (444)

முடியவே கெவுரியென்ற மெழுகைத்தானும்
முக்கியமாய்க் காரீயம் பலந்தானென்றில்
வடிவாக உருக்கியே இடையேதாக்கு
வகையான யீயமது நொறுங்கித்தூளாம்
துடியாக யித்தூளைத் தங்கத்திலீயத்
துணையாகத் தங்கமது நொறுங்கித்தூளாம்
படிவாகக் கல்வத்தி லிட்டுநீயும்
பாங்காகச் சூதத்தை யிடையேகூட்டே. (445)

கூட்டியே எருக்கம்பால் தெளிந்தநீரால்
குணமாக அரைத்துவில்லை கட்டிநீயும்
தாட்டிகமாய்க் கதிரில்வைத்து உலர்ந்தபின்பு
தண்மையாய் அயச்செப்பில் வைத்துமூடிக்
காட்டியே சீலைசெய்து சொல்லக்கேளு
கனிவாகப் பத்தெருவிற் புடத்தையிட்டு
ஓட்டியே குருவாகும் நூற்றுக்கொன்று
உடனீய மாத்ததுவுஞ் சொல்லக்கேளே. (446)

சொல்லவே வங்கத்தின் குருவைப்போலே
தொல்லுலகில் கண்டதில்லை தோய்வுமாகும்
மெல்லவே வங்கத்தால் தங்கமாகும்
மேதினியில் வங்கத்தி லுழைக்காமூடர்
கல்லவே வெகுபேச்சுப் பேசுவார்கள்
கனிவாக யீயத்தின் பெருமைசொல்லார்
நல்லவே யேருழுகத் தெரியாமூடர்
நலமான சாத்திரங்கள் பொய்யென்பாரே. (447)

பொய்யென்று சொல்லாமற் சொல்லக்கேளு
போக்கான வங்கத்தின் குருவுதன்னை
மெய்யென்று யெடுத்துமே செம்பு நூறில்
மேன்மையா யொன்றுகொடு யேமயாகும்
பையில்வைத்த பொருள்போலே பதியஓடும்
பதிவான உப்புக்குங் காவிக்குந்தான்
வையகத்தி லிரங்கிடுங்காண் தங்கந்தானும்
வடிவான பொருளறிந்தால் மார்க்கமாமே. (448)

மார்க்கமா யிம்மெழுகிற் சூதங்கட்டும்
மயமாகச் சரக்கெல்லாங் கொல்லுங்கொல்லும்
ஆர்க்கமாய் நவலோக மெல்லாந்தானும்
அடைவாக மெழுகாகும் வேதையாகும்
தார்க்கமாய் வங்கத்தின் பெருமைதன்னைத்
தடையில்லா நபிமார்கள் தருகாவிற்றுன்
வார்க்கவே செய்திடுவார் நபிமார்தானும்
வடிவறிந்தால் யெல்லாமும் வழக்கமாமே. (449)

வழக்கமாய் வங்கத்தின் தங்கந்தானும்
வடிவாகக் கிணறுபோல் பெருகிநிற்கும்
தழக்கமாய் அமுர்தப்பால் சுரந்தாப்போலே
தாட்டிகமாய் வங்கத்தின் பெருமையாகும்
இழக்கமா யெண்ணுதே பாகமாக
இதமாக யிறைக்கிறைக்கத் தொலையாதப்பா
கழக்கமாய்ப் பாகமது கற்றுக்கொண்டால்
கனிவாகத் தரணிதனில் நபிமாராமே. (450)

தாளக வேலை.

நபியாகப் போகவென்றால் சொல்லக்கேளு
நானிலத்திற் றாளகத்தின் மார்க்கந்தானும்
துபியாகச் சொல்லுகிறே னுற்றுக்கேளு
துடியான தாளகந்தான் பலமும்பத்து
வபியாகச் சுக்கான்போல் சுத்திபண்ணி
வடிவான அயச்சட்டிக் குள்ளேயிட்டு
தபியாக விலைக்கள்ளிப் பாலுக்குள்ளே
தடையறவே துருசுநீர் களஞ்சிபோடே. (451)

போடவே செலமாகும் செலத்தினூடே
பெருகவே தாளகத்திற் சுருக்குப்போடு
ஆடவே யிருசாமஞ் சுருக்குப்போட
அப்பவே தாளகமும் மெழுகாய்ப்போகும்
ஊடவே மெழுகெடுத்து வைத்துக்கொண்டு
உறுதிபெற நபிமாரைத் தொழுதுபோற்று
நாடவே தொழுதிறைஞ்சி அல்லாதன்னை
நலமாக மெழுகெடுத்து நாட்டக்கேளே. (452)

நாட்டமென்ன செம்பதுதான் பலமும்நூறு
நலமாக முன்சுத்தி யெழுநூறுதன்னில்
கூட்டமாய்ச் சொல்லிவிட்டேன் குறித்துக்கேளு
குணமாகத் தாளகத்தின் மெழுகொன்றிய
வாட்டவே வெண்கலம்போல் நொறுங்கிப்போகும்
வடிவான வெண்கலத்தின் மார்க்கங்கேளு
காட்டவே நொறுங்கினதோர் தூளுதன்னைக்
கனிவாகத் தங்கத்தி லிடையேதாக்கே. (453)

தாக்கிட்டு யெடுத்துப்பார் தங்கந்தானும்
தடையறவே நொறுங்கிப்போந் தகமைகேளு
வாக்கிட்டுக் கல்வமிட்டுச் சொல்லக்கேளு
வடிவாகச் சூதமது இடையேசேர்த்துப்
பாக்கிட்டுச் சூதமிடை கெந்திசேர்த்துப்
பதிவாக முன்பாலா லாட்டிநீயும்
காக்கிட்டு வில்லைதட்டிக் கதிரில்வைத்துக்
கனமாக மேல்மூடி மண்ணுஞ்செய்யே. (454)

செய்துமே பத்தெருவிற் புடமுமிட்டுச்
        செயமாகச் செந்தூர முருக்கப்பூப்போல்
பைதுமே யிருக்குமந்தச் செந்தூரத்தைப்
        பலன்கண்டு நபிமாரை வணங்கியேற்றிக்
கைதுமே அல்லாவின் துணையினாலே
        கனிவாகச் செந்தூர மெடுத்து நீயும்
பெய்துமே மலைமேலே கொடுத்துப்பாரு
        பிரபலமாய்ப் பழுத்துவிடும் தலையிதாமே. (455)

துலையாத செம்புநா ன்றன் றுருக்கித்
        துடியாக ஒன்றாயிடு மாற்றுக்கேளு
வலையாக மாற்றுத்தா னிருபதாகும்
        வடிவான தங்கமது மருவுங்காலை
அலையாமல் தாளகத்தை உறுதியாக
        அடைவாக வைத்துமே நொறுக்கிநீயும்
தலைபோலக் கொடுத்திடவே யெல்லாந்தங்கம்
        தாட்டிகமா யாகோபு தண்மைதானே. (456)

தண்மையாய்த் தாளகத்தின் வேலைபோலே
        தாக்கிடவே ஒன்றுக்குங் கிடையாதப்பா
உண்மையாய் உலகத்தில் வாதிமார்கள்
        உறுதியாய்ச் செய்வார்கள் உலுத்தவாதி
வண்மைபெறப் பேசுவார் கேலியாக
        வடிவான பொருளறிந்து மார்க்கஞ்செய்யார்
கண்மையாய்க் கைபாக வரிசைகண்டால்
        கர்த்தாவாம் நபிமாரா யிருப்பார்தானே. (457)

சிகப்புச் சாரவைப்பு.

இருக்கவே சிகப்பான நவச்சாரத்தை
        இதமாகச் சொல்லுகிறேன் நபிமார்சொன்ன
பெருக்கவே பாகத்தை மூயன்றுகேளு
        பேர்பெரிய வெடியுப்பு ரெண்டுபத்து
கருக்கவே சீனமது யிருபத்தைந்து
        கனிவாக ரெண்டையுந்தான் கல்வத்திட்டு
நருக்கவே நாயுருவிச் சாற்றாலாட்டி
        நலமாகத் தெல்லுப்போல் வில்லைதட்டே. (458)

தட்டியே கதிரில்வைத்துக் காயப்போடு
கனிவான தெல்லுப்போல் வில்லைகட்டி
மூட்டியே காயவைத்து யெடுத்துநீயும்
மூடிவாகப் பொடியாக்கிக் கலயத்திட்டு
நட்டியே சக்கரமாம் வாலைமேலே
நலமாக வைத்துமே யெரித்துக்கொள்ளு
தட்டியே நீர்வருகும் வெள்ளையாக
தள்ளிவிட்டுச் சிவந்தநீர் வரவும்பாரே. (459)

பாரென்ற அரக்காலே குப்பிபண்ணிப்
பதிவாக அதுக்குள்ளே திராவகத்தை
நேரென்று ஊத்தியே அதிலேவைத்து
நிலையாக நவச்சாரம் சேருஒன்று
காரென்று கல்வத்தி லிட்டுநீயும்
கடிதான திராவகத்தைக் குத்துகுத்து
வாரென்று ரவியில்வைத்து மூன்றுநாளும்
வடிவாக யெடுத்துமே மார்க்கங்கேளே. (460)

மார்க்கமென்ன சொல்லுகிறே னுற்றுக்கேளு
மயமாகப் பீங்கானில் வைத்துநீயும்
கார்க்கமாய் மெல்லெனவே வறுத்துக்கொள்ளு
கனிவாக யெடுத்துமே காசிமேரு
ஆர்க்கமாய்ப் பாதிநீ போட்டுநீயும்
அடைவாக வாலுகையின் மேலேவைத்து
தார்க்கமாய்ப் பனிரெண்டு சாமந்தானும்
தடையறவே யெரித்துமே தண்மைகேளே. (461)

தண்மையா யெரித்துயெடு பின்புதானும்
தடையறவே குப்பியை நீ உடைத்துவாங்கி
குண்மையாய்ப் பீங்கானி லிட்டுநீயும்
குணமாகத் திராவகத்தை அதிலேயூற்றி
வண்மையா யுமிநெருப்பில் வருத்துப்போடு
வளமாக முன்போலே யெரித்துவாங்கு
கண்மையாய் வாங்கியபின் சொல்லக்கேளு
கனிவாக யாகோபு கருதினரே. (462)

கருதியே தேங்காய்போ லிருக்கும்பாரு
கனிவாக யிப்படிக்கு அஞ்சுதானும்
பருதியே யெரித்தெடுத்துப் பின்புதானும்
பதிவாக யெடுத்துமே பாகமாக
வருதியே கைபாக மாகத்தானும்
வடிவாக யெரித்துமே மார்க்கமாக
முருதியா யெரித்திட்டு யெடுத்துப்பாரு
முடியவே சிவப்பாகுஞ் சாரந்தானே. (463)

சாரமாய்ச் சிவந்திருக்குஞ் சாரந்தன்னைச்
சரியான நபிமார்கள் சொல்லப்போகா
பாரமாய்ச் சூரியன்போல் நிறமுமாகும்
பதைபதைத்துத் திரியாதே பாரமில்லை
வாரமாய் மகமதுவும் ஆடித்தேர்ந்த
வகையான கைபாக வரிசைமெத்த
காரமாய்ச் செய்திடிலோ வேதைவேதை
கனிவான பொருளறிந்தோர் கணக்குமாமே. (464)

கணக்காகச் சிவந்திருந்த சாரந்தன்னைக்
கனிவாக நபிமார்கள் சித்தர்தானும்
வணக்கமாய்ச் சொல்லார்கள் வலுமைமெத்த
வலுவான அல்லாவைக் கேட்டுக்கொள்வர்
தணக்கமாய்ச் சூரியன்போல் நிறமுமாகும்
தடையறவே சாரத்தின் பெருமைதன்னை
உணக்கமாய்ச் சொல்லிவிட்டே னுறுதிதன்னை
உறுதிபெறச் சாரத்தின் பெருமைதானே. (465)

பெருமைதான் யென்பேரு ராமதேவர்
பிரட்டாகச் சொல்லவில்லை சாரந்தன்னை
அருமையாய் நாலுயுக மாடித்தேர்ந்து
அடைவாகத் தமிழ்வேதம் படித்துப்பார்த்துக்
கருமையாய் மக்காவின் தேசம்புக்கி
கடிதான யிசுலாத்தில் புகுந்துயானும்
வருமைவிட்டு வேதத்தைப் பார்த்துத்தேறி
வளமாகக் கண்டுகொண்டேன் ஆதியாமே. (466)

ஆதியாம் வேதத்தைப் பார்க்கப்பார்க்க
அடைவான யெச்சிலில்லை தீட்டுமில்லை
வாதியா மென்றபேர் தனக்குத்தானும்
வடிவான யெச்சிலில்லை யிதுக்குஒப்பு
சோதியாஞ் சுடரொளியாந் துலுக்குவேதம்
சுருதிபெறக் கோரானைப் பார்த்தேன்யானும்
பாகியாம் நால்வேதம் ஒன்றதாகும்
பகுத்துணர்ந்து யாகோபு பாலித்தேனே. (467)

பாலித்தேன் பாசாணச் சரக்கைக்கொல்லப்
பகர்கின்ற கருவேது சொல்லக்கேளு
சாலித்த சூதமொன்று கெந்தியொன்று
சரியான தாளகமுஞ் சிலையும்லிங்கம்
காலித்த சிகப்பான சாரமொன்று
கனிவான பழச்சாறு சாமமாட்டித்
தேலித்த வில்லைகட்டி உலரப்போடு
திறமாக அயக்குகையில் வைத்திடாயே. (468)

வைத்துமே சீலைசெய்து புடத்தைப்போடு
வடிவான நபிமாரைத் தொழுதுபோற்று
கைத்துமே களங்காக யிருக்கும்பாரு
கணக்காக யிருந்துமே கருதக்கேளு
நைத்துமே நவலோகந் தன்னிலீய
நலமாக யேமமாம் நாட்டிலோர்க்குப்
பைத்துமே களங்கைத்தான் செம்பெடுக்கப்
பஞ்சமித்ர முன்னூறும் பாருபாரே. (469)

பாரப்பா முன்சொன்ன நவசாரந்தான்
பதிவாக நாகத்தை உருக்கிக்கொண்டு
தாரப்பா நாகத்தின் மேலேதாவு
தடையறவே நாகமது கட்டிப்போகும்
காரப்பா நவலோகந் தன்னிலீய
கனிவான தங்கமாம் கருத்துள்ளோர்க்கு
வாரப்பா பாகமாய்ச் செய்துகொண்டால்
வடிவாகப் பொருளாகும் வண்மைதானே. (470)

சூதக் கட்டு.

வண்மையாய் சூதத்தைக் கட்டுதற்கு
வகையாகச் சொல்லுகிறேன் வலுவுமெத்த
உண்மையா யெழில்தனிலே சூதங்கட்டும்
உறுதியாய்ச் சொல்லிடுவா ருலகவாதி
கண்மையாய்க் கட்டுவகை யறியமாட்டார்
கனிவாக உறுதிபெறக் கணக்குமாகும்
தண்மையா யுறுதிக்குப் பாகமாகத்
தடையறவே சொல்விட்டேன் தன்மையாமே. (471)

தண்மையா யிச்சாரம் பொடியாய்ப்பண்ணித்
தனியான மஞ்சளென்ற கருவிற்போட்டு
வண்மையாய் விட்டுவைக்கச் செய நீராகும்
வடிவான செய நீரில் வண்மைகேளு
பெண்மையாய்க் கரண்டியுண்டால் காயசித்தி
பேதமையாம் நோயெல்லாந் தவிடுமாகும்
செண்மையா யுறுதிபெறச் சவுக்காரத்தைச்
செய்திடவே சகலதொழில் சித்தியாமே. (472)

துருசு வைப்பு.

சித்தியா யின்னமொரு செய்திகேளு
சிறப்பான துரிசினுட வைப்புதன்னைப்
பத்தியாய்ச் சொல்லுகிறேன் பலனுமாகும்
பண்பாகச் செம்பாலே பானைபண்ணி
நத்தியே கல்லுப்புப் பொடியாய்ப்பண்ணி
நலமாகப் பதினாறுக் கொன்றுபோடு
சித்தியாய் வெடியுப்புச் சீனம்பாதி
சிறப்பாக நிறுத்திப்பா னையிலேபோடே. (473)

போட்டுமே பழச்சாறும் மோரும்வார்த்துப்
பொலிவாக மேல்மூடிப் புதைத்துப்போடு
காட்டுமே மண்டலந்தான் கடந்தபின்பு
கனிவாக யெடுத்துப்பார் பச்சையாகும்
நாட்டுமே யிருந்துவிடுஞ் சொல்லக்கேளு
நாகமாய்த் துருசென்ற நாமமாச்சு
வாட்டுமே உப்பதுவுஞ் சத்தியாச்சு
வளமான செம்பதுவும் அல்லாவாச்சே. (474)

ஆச்சப்பா தயிரதுவும் நபிமாராச்சு
அடைவான எலுமிச்சம் பழச்சார்தானும்
பாச்சப்பா லெவையென்ற பேருமாச்சு
பதிவான யித்துருசை நீற்றினுக்கால்
நாச்சப்பா ரசங்கட்டுங் குளிகையாகும்
நலமாகச் சகலசித்து மிதற்குள்ளாகும்
வாச்சப்பா சத்துவகை செய்துசெம்பில்
வடிவாக யெடுத்தாக்கால் மட்டமாமே. (475)

மட்டமாந் துருசதுவை வைத்து நீயும்
மகிமைபெறத் துருசுதனை நீற்றிக்கொள்ளு
திட்டமாய்ச் சூதமதைக் கட்டி நீயும்
திறமாகச் செந்தூரம் பண்ணில்ரெம்ப
வட்டமாய் நவலோக மெல்லாந்தானும்
வடிவாகப் பழுக்குமே வாதம்ரெம்ப
கட்டமிலா திருந்துமே விற்று நீயும்
கனிவாகச் செய்துமே பிழைத்திடாயே. (476)

பிழைத்திடவே சத்துக்குத் துருசுவேணும்
பேராகச் செம்புதனில் சத்துச்செய்தால்
தழைக்கவே வாராது செம்புதானும்
தடையறவே வெள்ளிதான் பழுக்கமாட்டா
கழைக்கவே துருசுதனில் செம்புதன்னைக்
காரணமாய்க் கொன்றாக்கால் தங்கமாகும்
அழைத்தபிள்ளை வந்ததுபோல் வந்துகூடும்
ஆதியாய்த் துருசை நீ பேணிப்பாரே. (477)

துருசுக் களங்கு.

பேணியே துருசொன்றில் களங்குசொல்வேன்
போக்கோடே துருசதுவும் பலமும்பத்து
ஆணியே பொடியாக்கிச் சட்டியிட்டு
அடைவாக நீர்வற்றச் சாமமொன்று
காணியே யெரித்துயெடு சுண்ணம்போலாம்
காரியமாய் நின்றயிடை மூக்கால்கெந்தி
வாணியே நிறுத்துமே கல்வமிட்டு
வகையான பழச்சாற்றில் சாமம்நாலே. (478)

நாலாக ஆட்டியே சொல்லக்கேளு
நலமாக முன்துருசு நிறுத்து நீயும்
காலாக வைத்திடு நீ அரப்பொடியைத்தான்
கணக்காகக் கூடவே சேர்த்து நீயும்
வாலாக அரைத்துவில்லை காயவைத்து
வடிவாக உப்புநேர் சுண்ணங்கூட்டிப்
பாலாக அரைத்துவில்லை மேலேகட்டிப்
பதிவாகப் பத்தெருவிற் புடத்தைப்போடே. (479)

புடம்போட்டு மேற்கவசம் பிரித்துப்பாரு
போக்கோடே கரிபோலே தூளாய் நிற்கும்
அடைவாக வெங்காரம் பெட்டிலொன்று
அடைவாகப் பொரித்துமே கூடவைத்து
திடமாக அரைத்துவிடு பாணியாலே
திட்டமாய்க் குகையில்வைத்து உருக்கித்தீரு
கூடமாக உருகியது சத்தாய்நிற்கும்
கணக்காக ஐந்துதர முருக்கிக்கொள்ளே. (480)

உருக்கியே யிப்படிக்குத் தரமுமைந்து
உறுதிபெற யெடுத்துமே சொல்லக்கேளு
நருக்கியே கல்லமிட்டுப் பாதிதானும்
நலமாகச் சூடனைத்தா நிறையைக்கேளு
கருக்கியே சத்துக்குக் காலுமிட்டுக்
கனிவாகப் பாணியினு லரைநேர்சாமம்
பருக்கியே அரைத்துமே வில்லைகட்டிப்
பதிவாகக் காடையென்ற புடத்தில்போடே. (481)

போட்டுமே யெடுத்துநீ புரம்பாய்வைத்துப்
போக்கோடே வங்கமது பலமும்நாலு
நாட்டுமே கரண்டிதனில் வைத்துருக்கி
நலமான தாளகந்தான் யிடைக்கிடையேதாக்கி
பாட்டுமே யெடுத்துப்பார் கரியாய்நிற்கும்
பதிவான கரியதனைக் கல்வத்திட்டு
வாட்டுமே சாரத்தைப் பாதிசேர்த்து
வடிவாகப் பாணியினு லரைத்திடாயே. (482)

அரைத்துமே வில்லைகட்டிக் கதிரில்வைத்து
அடைவாகப் புடம்போட்டு யெடுத்துநீயும்
கரைத்துமே குகையிலிட்டு உருக்கித்திரு
கனிவாக யீயமாய் உருகிநிற்கும்
தரைத்துமே தட்டியதை நையத்தானும்
தகமையாய் முன்சத்தில் நாலத்தொன்று
வரைத்துமே சேர்த்து அரை அன்னத்தாலே
வடிவாக வழித்துமே வில்லைகட்டே. (483)

கட்டியே கதிரில்வைத்து மேலேதானும்
கனிவாக உப்பினாற் கவசஞ்செய்து
தட்டியே காயவைத்துப் புடமுமிட்டு
நாடியே புடந்தானும் பெரிதாய்ப்போடு
முட்டியே யெடுத்துநீ கல்வமிட்டு
முனிவாக அன்னத்தால் சாமம்நாலு
கொட்டியே அரைத்துமே வில்லைகட்டிக்
குணமாகக் கதிரில்வைத்துக் காயப்போடே. (484)

காயவே வைத்து முன்னால் கவசஞ்செய்து
கனிவாகப் பெரியபுடம் போட்டெடுத்து
தாய்மார் சொன்னபடி சொல்லக்கேளு
நலமாக முன்போட்ட கரியைநேராய்த்
தாயகமாய்த் தங்கமிட்டு உருக்கிக்கொண்டு
தாட்டிகமாய் நிரைபாகந் தகமைகேளு
மாயவே வெள்ளியெட்டுக் களங்குநாலு
மயமாகச் சேர்த்துருக்கிப் பின்புகேளே. (485)

பின்புதா னெடுத்துமே சொல்லக்கேளு
பேராகக் கேளெருமைச் சாணிசேர்த்துத்
தென்பாகக் கிளிஞ்சியது சுண்ணஞ்சேர்த்துச்
சிறப்பாக அரைத்துமே நிகடைபண்ணி
அன்பாக அதில்வைத்துக் கணக்காயூது
அடைவாக ஊதியே பின்புகேளு
நன்பாகக் கரியில்வைத்து உருக்கித்திரு
நலமாக மாத்தேழு காணுந்தானே. (486)

காணுமே கடையில் விற்றுச்சீவனத்தைக்
கனிவாகச் செய்துமே கருணைகூர்ந்து
வேணபடி செலவுசெய்து என்னூல்பூருய்
விருப்பமாய் எல்லாமும் படித்து நீயும்
நாணயமாய்ச் சுண்ணங்கள் மிகவுஞ்செய்து
நலமாகப் பெரியதொரு வேலைசெய்து
தாணுவாய்க் குளிகைகட்டி ஆடித்தேற
தடையறவே யாகோபு சொன்னார்தானே. (487)

சொன்னபடி முன்னேதான் துருசைவைத்துச்
சொல்பெரிய களங்கைத்தான் பின்னேசெய்து
தன்னயமாய் வங்கத்தை உருக்கி நீயும்
நலமாகத் தாளகத்தைக் கொடுத்துப்பின்பு
இன்னிலத்தில் நொறுக்கியே செத்தசெம்பை
இதமாக யிழுத்துமே தங்கஞ்சேர்த்துக்
கன்னலா யுருக்கிட்டு வெள்ளிதன்னில்
கனிவாகக் கொடுத்துமே வேதைபாரே. (488)

வேதைதா னிப்படிக்குச் செய்யாமற்றான்
விரைந்துமே மட்டத்தி லீயந்தன்னைச்
சேதையாய்க் கொடுத்துமே ஊதிப்பார்த்துத்
திறமாக வர்ணங்க ளில்லையென்று
காதையாய்ப் பலவார்த்தை மிகவும்பேசிக்
கடிதாக வாதந்தான் பொய்யேயென்பார்
பேதையாய் மிகப்பாடு பட்டுப்பட்டுப்
பொலிவாகத் திரிந்தலைவார் வாதிதானே. (489)

இந்துப்பு வைப்பு.

தானென்ற யிந்துப்பு வைப்புக்கேளு
தடையறவே நாலடுப்பு வரிசையாகக்
கானென்ற கட்டியே சொல்லக்கேளு
கனிவான அடிக்கனத்த சட்டிவைத்துப்
பானென்ற கடல்நீரி லுப்புக்காய்ச்சிப்
பதிவாகத் தினந்தினமுங் காய்ச்சி நீயும்
பானென்ற அடிப்பார மூள்ளபானை
பதிவாக யிட்டுமே காய்ச்சிடாயே. (490)

காய்ச்சிடவே காடாக்கினி யாகவேதான்
கனமாகத் தீமூட்டிக் கணக்கதாகப்
பாய்ச்சிடவே வெந்துருகிச் சல்மாய்நிற்கும்
பதிவாக மூப்பதுக்கு ஒன்றுசீனம்
நாச்சியே வெடியுப்பு முப்பத்திஒன்று
நலமாகப் பொடிபண்ணி அதிலேபோட்டுத்
தாச்சிடவே வெந்துநன்றாய்க் குழம்பாய்க்காய்ச்சித்
தலமாக ஆறவிட்டுப் பானைதன்னை. (491)

தன்னிலே ஊத்தியபின் னுடைத்துவாங்கித்
தனியாகப் பார்த்திடவே வெளுப்பாய்நிற்கும்
முன்னிலே மட்டியாய்க் கல்லுப்போலே
முடிவாக யிருந்திடுமே அதிகவேதை
கன்னியே யிப்படிக்குச் காய்ச்சிநீயும்
கனிவாக யெடுத்துமே சுண்ணம்பண்ணு
மன்னியே சொல்லுகிறே னுற்றுக்கேளு
மகிமைதா னதின்பேரு கூறுறேனே. (492)

இந்துப்புச் சுண்ணம்.

கூறவே யிந்துப்புப் பலமும்பத்துக்
குணமான கடல்நுரையும் பலமும்பத்து
நாறவே கல்வமிட்டு அரைநேர்சாமம்
நலமான நாயுருவிச் சாறுதன்னில்
பாறவே யிருசாம மறைத்துநீயும்
பதிவாக அடுப்புதனில் அயச்சட்டியிட்டு
கா்றவே வருத்துவிடு பனிரெண்டுசாமம்
கனிவாகக் கல்வமிட்டுப் பின்புகேளே. (493)

கேளுமே முன்சத்தால் நேகஆட்டிக்
கெடியான வில்லைகட்டிக் கதிரில்வைத்து
நாளுமே மேற்கவசங் சொல்லக்கேளு
நலமாக ஐந்துசுண்ண மேலேகட்டு
பாளுமே போகாமல் உலரவைத்துப்
பதிவாகப் பெரியபுடம் போட்டெடுத்துக்
காளுமே கடுஞ்சுண்ணம் யிந்துப்புச்சுண்ணம்
கடிதாக யாகோபு கருணையாமே. (494)

கருணையாம் வீரமது கொஞ்சமிட்டால்
கனமாக ரெத்தம்போல் சிவந்துநிற்கும்
அருணையா விதையெடுத்து வைத்துக்கொண்டு
அடைவாகச் சூடனது பலமுமொன்று
தருணமாய்ப் பூரமது பலமுமொன்று
தாக்கியதை யிந்துப்புச் செயநீராலே
வருணமா யரைத்துவில்லை கதிரில்வைத்து
வளமாக ஐந்துசுண்ணக் குகையில்வையே. (495)

வைத்துமே புடம்போடச் சுண்ணமாகும்
வாகான சுண்ணத்தின் பெருமைதன்னைக்
கைத்துமே நபிமாரால் சொல்லப்போகா
கனிவாக நான்கண்டு யெழுதிப்போட்டேன்
செத்துமே போகாம லின்னங்கேளு
சிறப்பாகப் பூரமென்ற சுண்ணத்தோடே
தைத்துமே காரமது சேர்த்துநீயும்
தடையறவே பொடியாக்கிப் பீங்கான்வையே. (496)

பீங்கானி லிட்டிடவே செயநீராகும்
பெருமையாய்ச் செயநீரில் வீரமிட்டுத்
தாங்காமல் வைத்துமே சொல்லக்கேளு
தடையறவே வெள்ளீயம் பலத்தைநீயும்
பாங்கமாய்த் தட்டியே பிச்சுப்போட்டுப்
பதிவாகப் பூரமென்ற செயநீராலே
நீங்காம லரைத்துவில்லை கதிரில்வைத்து
நிலையாகக் காய்ந்தபின்பு சொல்லக்கேளே. (497)

சொல்லவே கரியோட்டில் வைத்துஊது
சுருதிபெற வெடுத்துமே சொல்லக்கேளு
நல்லவே கல்வமிட்டுச் செயநீராலே
நலமாக அரைத்துவில்லை காயவைத்து
மெல்லவே முன்போலே ஊதித்திரு
மேன்மையா யிப்படிக்குத் தரமுமஞ்சு
கல்லவே ஊதியெடு கடுஞ்சுண்ணமாகும்
கனமான சுண்ணத்தின் பெருமைகேளே. (498)

பெருமையாய் வங்கமென்ற சுண்ணத்துக்குப்
பெரிதாக வீரமது நாலத்தொன்று
அருமையா யிட்டுமே வாய்நீர்விட்டு
அடைவாக அரைத்துமே ஆனபின்பு
கருமையாந் துருசின்மேற் கட்டித்திரு
கனமான அஞ்சுசுண்ணங் கவசங்கட்டி
தருமையாய்ச் சேவலென்ற புடமுமிட்டால்
நலமாகத் துருசதுவுஞ் சுண்ணமாமே. (499)

சுண்ணமாந் துருசினுட சுண்ணந்தன்னில்
துடியான வீரமிட்டுச் சொல்லக்கேளு
நன்னயமாய்த் தாளகத்தின் மேலேகட்டி
நலமாக அஞ்சுண்ண மேலேகட்டிக்
கன்னலாய்ப் புடம்போட்டு யெடுத்துப்பாரு
கட்டியாய் நீறுமது யிடைபோகாது
சொன்னபடி நீறுமது வாதமாகும்
துடியான யாகோபு சொன்னவாறே. (500)

வாறேது வென்றுக்கால் சொல்லக்கேளு
வடிவான தாளகத்தின் சுண்ணந்தன்னைக்
காறேது வீரத்தின் மேலேகட்டிக்
கனிவாகக் கதிரில்வைத்துச் சொல்லக்கேளு
நாறேது பத்தெருவிற் புடத்தைப்போடு
நலமாக யெடுத்துப்பார் வீரச்சுண்ணம்
கூறேது வாதமது கொள்ளைகொள்ளை
குணமான யாகோபு கூறினாரே. (501)

கூறினார் வீரத்தின் சுண்ணந்தன்னைக்
குணமாக விராகனிடை உமிழ்நீர்விட்டுப்
பாரிலே அரைத்துநீ பலனைக்கேளு
பதிவாகத் தங்கமென்ற தகட்டிற்பூசிச்
சாரியே காயவைத்துப் புடமுமிட்டால்
சரியாகத் தங்கமது நீறிப்போகும்
வாரியே நவலோகம் நூற்றுக்கொன்று
வடிவாகக் கொடுத்திடவே வண்மைதானே. (502)

வண்மையாய் நவலோகம் நூற்றுக்கொன்று
வடிவாகக் கொடுத்திடவே பத்துமாத்து
உண்மையாய் உப்புக்குங் காவிக்கப்பா
உறுதியா யேகாது புடமிறங்கும்
தண்மையா யிதைவிற்றுச் செலவுசெய்து
தடையறவே வெகுநூல்கள் சம்பாதித்துப்
பண்மையாய்ச் சுண்ணங்கள் பார்த்துநீயும்
பலகாலுந் தொழுதிடவே பாங்குமாமே. (503)

பாங்காக வங்கமது நீருவிட்டாற்
பலனில்லை துருசதுவும் நீறமாட்டா
தீங்காமல் தொந்தமில்லை வேதையில்லை
நெடிதாக ஒன்றுமில்லை சூட்சமில்லை
வாங்காமல் துருசினுட ஓட்டமில்லை
வடிவான சூதமது கட்டமாட்டா
தாங்காமற் றூங்கிடுவா ருலகவாதி
தடையறவே யாகோபு சொன்னேனனே. (504)

தானென்ற நபிமாரை அடுத்துமிக்க
நலமாக வேதையெல்லாங் கற்றுக்கொண்டு
கானென்ற வடதேசந் தன்னிற்சென்று
கனிவாக மூகமதுவைக் கண்டுபோற்றி
வானென்ற சாத்திரங்கள் மிகவும்பாடி
வகைகண்டு தொகையாகப் பாடினேன்யான்
ஊனென்ற உறுதியுள்ள நபிமார்பாதம்
உற்றுமே போற்றியே யிருந்தேனனே. (504)

திருசுச் செந்தூரம்.

இருந்திடவே துருசென்ற செந்தூரத்தை
இதமாகக் கேளுங்கள் பாவா நீரும்
அருந்திடவே துருசதுவும் பலமோபத்து
அடைவாக நிறுத்துடனே கல்வத்திட்டுப்
பொருந்திடவே ரோமமென்ற தைலங்கேளு
போக்கான இளவயது ரோமந்தன்னில்
கருந்திடவே நரையில்லா மயிரைவாங்கிக்
கனிவான சுத்திபண்ணிக் கருதிக்கேளே. (506)

உரோமத் தைலம்.

கருதவே சீயக்காய் தனையரைத்துக்
கனிவாகப் பாணிவிட்டுக் கரைத்து நீயும்
வருதவே ரோமத்தை யதிலேபோட்டு
வளமாகக் கொதிகிளம்ப யெரித்து நீயும்
உறுதியாய் ரவிதனிலே உலரப்போட்டு
உற்றுமே நல்லெண்ணெய் தன்னைவிட்டு
அறுதியாய்ப் பிசைந்துமே அப்பால் நீயும்
ஆதியாய்க் குழித்தைலம் வாங்கிக்கொள்ளே. (507)

கொள்ளவே சீசாவி லடைத்து நீயும்
குணமாக வைத்துப்பின் சொல்லக்கேளு
நள்ளவே முன்னெடுத்த துருசுதானும்
நலமாகப் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
வள்ளவே கெந்தியுடன் துருசுமூக்கால்
வளமாக அரைபொடியும் பலமோபத்து
துள்ளவே மூன்றையுந்தான் கல்வத்திட்டுத்
துடியான பழச்சாற்றி லாட்டிடாயே. (508)

ஆட்டிடவே நாலாறு சென்றபோது
அடைவாக வில்லைதட்டிக் கதிரில்வைத்து
நீட்டிடவே உப்புநேர் சுண்ணஞ்சேர்த்து
நிலையாக மேல்கவசங் கட்டி நீயும்
பாட்டிடவே பெரியபுடம் போட்டெடுத்துப்
பதறுமல் கவசத்தைப் புட்டுப்பார்த்தால்
நாட்டிலே சொல்லாதே கருப்பாய் நிற்கும்
நாதாந்த யாகோபு நலமதாமே. (509)

நலமாகப் புடம்போட்ட மயினந்தன்னை
நாடியே கல்வமிட்டு வெங்காரத்தைப்
பிலமாக நாலிலொன்று சேர்த்துக்கொண்டு
பேசாதே யரைத்துமெல்ல உண்டைபண்ணி
அலமாகக் குகையில்வைத்து உருக்கித்திரு
அடைவாக யீயம்போற் சத்துமாகும்
கலுகைச் சத்தெடுத்துக் கல்வத்திட்டுக்
கனிவான வெங்காரங் காலதாமே. (510)

காலதாம் வெங்காரஞ் சேர்த்து நீயும்
கனிவாகப் பாணிவிட்டு அரைத்துஉண்டை
வாலதாய்ச் செய்துடனே சொல்லக்கேளு
வடிவாக உண்டைபண்ணிக் குகையில்வைத்துச்
சேலாக உருக்கிடவே சத்துமாகுஞ்
செல்வம்வரும் அயக்கசடு கழிந்துபோகும்
பாலாக யிப்படிக்கு உருக்கி நீயும்
பதிவாகச் சத்தெடுத்துப் பார்த்திடாயே. (511)

பார்த்திடவே சத்தெடுத்துக் கல்வத்திட்டுப்
பதறாதே வெங்காரம் பாதியிட்டு
நாத்திடவே ரோமத்தின் தைலத்தாலே
நலமாக அரைத்திரண்டு சாமமாட்டிக்
கோத்திடவே வில்லைபண்ணிக் காயவைத்துக்
குணமாக அகலிலிட்டுப் புடமுமிட்டுச்
சாத்திடவே கல்வமிட்டுத் தைலத்தாலே
சரியாக யிருசாமம் மாட்டிடாயே. (512)

ஆட்டிட்டு வில்லைபண்ணிக் கதிரில்வைத்து
அடைவாகப் புதுஅகலில் வைத்துமூடி
ஏத்திட்டுத் திரியாதே முன்போற்றனும்
இதமாகப் புடமிட்டு எடுத்து நீயும்
காத்திட்டுப் பார்த்திடவே சிவந்துபோகுங்
கருணைபெறச் சிவப்பாகு மட்டுப்போடு
மாத்திட்டு வருகுமது நபிமார்சொன்ன
வடிவான செந்தூர வண்மைகேளே. (513)

வண்மையாய் வெடியுப்புப் பலமோபத்து
வடிவான சீனமது இருபத்தைந்து
உண்மையாய்ப் பொடித்துமே சொல்லக்கேளு
உறுதிபெற வாலையென்ற சட்டியிட்டுத்
தண்மையாய்ப் புகைநீரை வாங்கும்போது
தனியான முன்நீரைத் தள்ளிப்போட்டுப்
பெண்மையாய்ப் பின்நீரை மஞ்சளாகப்
பேசாதே யிருக்குமந்த நீரைவாங்கே. (514)

வாங்கியே குப்பிதனி லடைத்து நீயும்
வகையான சூதமது சேருஞ்ன்று
தேங்கியே பீங்கானில் வைத்து நீயும்
திடமாகத் திராவகத்தை விட்டுப்பாரு
ஓங்கியே காளான்போற் பூத்து நிற்கும்
உறுதியாய் அயக்கதி ராலெடுத்துத்
தாங்கியே பின்பு நீ புகைநீர்குத்துத்
தயவாகக் காளான்போற் பூக்குந்தானே. (515)

பூக்குமே எல்லாமும் பூக்கவைத்துப்
புனிதமா யெடுத்துகதிர் காயவைத்துப்
பாக்குப்போற் கட்டியா யிருந்ததாளைப்
பக்குவமா யுடைத்துமே பொடியதாக்கு
தாக்குமே ஈரமது இருந்ததானற்
தடையறவே உமிநெருப்பில் வறுத்துப்போடு
கூக்குரலாய்ச் செய்யாதே யாகோப்சொன்ன
குணமதனைப் பாகமாய்ச் செய்திடாயே. (516)

செய்திடவே கூதமது மஞ்சளாகச்
சீருபெற விருக்குமது சொல்லக்கேளு
பைதிடவே முன்வைத்த செந்தூரத்தைப்
பதிவாகத் திராவகத்தாற் பூத்துநின்ற
கைதிடவே செந்தூர மிடையேசேர்த்துக்
கனிவாக ரோமத்தின் தைலத்தாலே
வைதிடவே இருசாம மரைத்து நீயும்
வடிவாகக் கதிரில்வைத்துக் காயப்போடே. (517)

காயவே நாளெட்டுக் கடந்தபின்பு
கனிவாக உமிநெருப்பில் வறுத்து நீயும்
நாயமார் சொன்னபடி குப்பிதன்னில்
நலமாக அரைவாசி போட்டுத்திரு
மாயமாய் மண்ணேழு சீலைசெய்து
மதியாகக் கதிரில்வைத்துக் காயப்போடு
தாயமாய் மேருவைத்துக் குப்பிவைத்துத்
தயவாக அடுப்பேற்ற வளவையாமே. (518)

வளமையாய் மூத்தியு மெரித்துநீயும்
வடிவுபெறப் பனிரெண்டுங் கடந்தபின்பு
தளமையாய்த் தியாற்று நீதான்மூன்று
தாட்டிமாய் நாளாறு சென்றபின்பு
பழமையா யெடுத்து நீ மெள்ளத்தானும்
பதிவான குப்பிதனைப் பிரித்துப்பாரு
கழமையாய்க் குப்பியுடை கல்வமிட்டுக்
கணக்காக ரோமத்தின் தைலமூற்றே. (519)

ஊற்றியே நால்சாமம் நேகவாட்டி
உறுதிபெற அதையெடுத்துக் கதிரிலிட்டு
ஏற்றியே உமிநெருப்பில் வறுத்துப்போடு
ஏழைமதி போகாமற் குப்பிதன்னிற்
பார்த்திட்டு அடைத்துமே முன்போல்சீலே
பதியவே செய்திட்டு மேருக்கிட்டுக்
கார்த்திட்டு எரித்தெடுப்பாய் கணக்கதாகக்
கதிர்பெருக யாகோபு சொன்னவாறே. (520)

சொன்னதுவு மிப்படிக்குச் சிவக்கமட்டுஞ்
சுருதிபெற எரியிட்டு எடுத்து நீயும்
கன்னலாய்ப் பார்த்திடவே செந்தூரந்தான்
கண்கொள்ளா முருக்கம்பூப் போற்சிவந்து
நன்னயமா யிருக்குமந்தச் செந்தூரத்தை
நலமாய்க்கை பாகமாய்ச் செய்துகாட்ட
இன்னிலத்தில் நான்கற்று உங்களுக்கு
இனிமையாய்ச் சொன்னதிந்த உண்மைதானே. ()

தானென்ற செந்தூரம் நவலோகத்திற்
ருக்கிடவே பத்தரைதா னப்பாபாரு
ஊனென்ற உப்புக்குங் காவிக்கப்பா
உறுதியா யிறங்கிவிடும் உண்மைமெத்த
நானென்ற நவலோக மெல்லாந்தானும்
நாட்டினுற் பழுக்குமது நன்மைமெத்தக்
கானென்ற உலகத்தில் வாதிமார்கள்
காணார்கள் கண்டாலுந் தெரியாவாரே. (522)

தெரியாமற் போகுமது பாகந்தானுந்
திறமாக அவசரத்திற் செய்துபார்த்து
அறியாமற் பொய்யென்று லாரென்செய்வார்
அடைவாகக் குழந்தைபோற் றவித்துஏங்கி
குறியாக ஆறுதா னீச்சுப்போலக்
குணங்கண்டு அளந்ததுபோல் வாதிமார்கள்
பரியாசம் பண்ணியே திரிவார்பாரு
பகலறிந்தார்க் கண் துலங்கும் பாகமாமே. (523)

பாகமா யிருட்டறையிற் புகுந்து நின்று
பதிவாய்க்கண் தெரியாமற் போனதன்பின்
யோகமாய் வெளியில்வந் தொன்றைப்பார்த்து
உறுதிபெறக் கண் துலங்கும் உண்மைபோலக்
காகமா யலைந்தாக்கா லென்னலாபங்
கற்றுணர்ந்தாற் சித்தியுமாங் கண்டுகொள்ளு
மோகமாய்ப் பெண்ணுடனே சேர்ந்துகெட்டு
முனிவான புத்தியில்லா முடிவுதானே. (524)

முடிவான துருசென்ற செந்தூரத்தை
முக்கியமாய்ப் பணவிடைதான் தேனிலுண்ணு
குடியாக மேனியது கற்றூணாகும்
குணமாக நரைதிரைக ளற்றுப்போகும்
வடிவாக நோயெல்லாம் பறந்துபோகும்
வாதமடை திறந்தவெள்ள மடைக்கக்கூடா
படிபோலே யாகுமது யிந்தநேர்மை
பாகத்தை யறிந்தாலோ சித்தியாமே. (525)

சித்தியாந் துருசென்ற செந்தூரந்தான்
திடமாக யிக்காண்டந் தனிலேசொன்னேன்
முத்தியா யிதையறிந்து செய்துகொண்டு
மூவுலகு மெச்சவே உண்டுதேரு
கத்தியே திரியாதே கண்டுகொள்ளு
கனிந்துமே விதியாளி கண்டுகொள்வான்
சத்தியமா யென்வசன மெய்யதாகுந்
தாக்கிவிட்டேன் நூலினுட தன்மைபாரே. (526)

தண்மையாந் துருசினுட செந்தூரந்தான்
தாக்கியே நபிமார்கள் செய்துபார்த்து
உண்மையென்று நம்பியே தங்கஞ்செய்து
உறுதிபெற வேதத்திற் காட்டினார்கள்
வண்மைபெற உலகத்தோர் பிழைக்கத்தானும்
வடிவாகச் சொல்லியே வண்மைகாணத்
துண்மையா யாகோபு சொன்னேன்பாவா
துடியான பொருளையறிந் தோர்க்குத்தானே. (527)

தானென்ற நூல்பார்த்து உலகவாதி
தவித்துமே மனம்புண்ணாய் வறுமையுற்று
ஊனென்ற சோற்றுக்கு யிடமில்லாமல்
உண்பாரை யுடுப்பாரைப் பார்த்துயேங்கி
நானென்ற ஆணுவத்தாற் கெட்டோமென்று
நாங்கள்போ லலைந்துமே கெஞ்சிக்கெஞ்சி
வானென்ற நூலினுட பாகம்விட்டு
வடிவாகத் தெரியாத மார்க்கந்தானே. (528)

மார்க்கமாய் நால்வேதத் தொப்பாய்நின்ற
வடிவான அல்லாவுந் தானிருக்க
ஊர்க்குள்ளே கம்மாளன் கல்லைத்தானும்
உறுதிபெற மனிதனைப்போ லடித்துவைத்துப்
பார்க்குள்ளே சீவனத்தைப் பண்ணுவோர்கள்
பதிவான புத்தியைத்தான் கேட்டுக்கேட்டு
நீர்க்குள்ளே மூழ்கியே சாம்பல்தன்னை
நிலையாகப் பூசியே பொய்சொல்வாரே. (529)

சொல்லவே கோவிலுக்குட் போகச்சொல்லிச்
சிறப்பான பார்ப்பார்தன் காலில்வீழ
நல்லதென்று பார்ப்பாரும் பணமுங்கேட்டு
நால்பணத்தைப் பிடுங்கியே போவென்பார்கள்
கொல்லவென்று யிப்படிக்குச் செய்யுமூடர்
குணமான நூல்மர்மங் காணப்போமூர்
வில்லங்கப் பட்டுமே கரிகள்சுட்டு
வீணுருச்சு யென்பார்கள் வேடத்தோரே. (530)

வேடமா யிப்படிக்கு வேடத்தோர்கள்
விதமான சாத்திரத்தை மிகவுங்கற்று
தாடமாய்த் தாவடத்தைப் பூண்டுகொண்டு
தனை நினைத்துப் பூசையது நிறம்பச்செய்து
கூடவே தபசியென்ற பிள்ளைவைத்துக்
குணமாக நெய்யன்ன மிகவுமுண்டு
பாடமாய்ப் பாட்டைத்தான் மிகக்கற்றோர்க்குப்
பலியாது வாதத்தின் பரிசுதானே. (531)

தானென்ற யின்னுமொரு வேடக்காரன்
தாட்டிகமாய் வாதம்வந்துதென்றுசொல்லி
வானென்ற சாராயம் அபினியுண்டு
வடிவான கள்ளுந்தான் மிகக்குடித்து
ஊணென்ற உலகத்திற் பிச்சைவாங்கி
உணர்வாக அலைந்துமே திரிவாரப்பா
கானென்ற யிவ்வேடம் பூண்டவர்க்குக்
கருதரிய வாதமது யில்லைதானே. (532)

இல்லையென்று சிறிதுபேர் ஒருவரோடே
இதமாகக் கேட்டுமே வாதமாச்சு
கல்லையென்ற அவசரத்தில் நடந்துயேங்கிக்
கனிவாக யெல்லோர்க்குஞ் சொல்லிக்காட்டி
முல்லைமலர் போலவே சிரித்துச்சுற்றி
முனையாக அலைந்துமே மூலிதேடி
வில்லங்கப் படுபவர்க்கு வாதமில்லை
வேணமட்டுஞ் சோதிப்பார் உலுத்தராமே. (533)

உலுத்தரா மின்னுமொரு வாதிதானும்
உளவான பெண்ணைத்தான் கண்டபோதே
வலுத்தமாய்பெண் ணையே கூப்பிட்டுத்தான்
வளமாக அவளோடு நேசித்தப்பா
சலுத்துமே சலிப்பாக வாதந்தன்னைத்
தாட்டிகமாய்க் கொஞ்சமாய்ச் சுட்டுப்பார்ப்பார்
அலுத்துமே யில்லையென்பார் வாதந்தன்னை
அடைவாக அவர்க்காப்பி டாதுதானே. (534)

ஆப்பிட்ட பேர்களுக் கிவர்களெல்லாம்
அந்திதனில் வழியிலே நினைவுபூண்டு
கூப்பிட்டுத் திரிந்தாக்கால் வாதமாமோ
குணமான மனதுக்கு ரூபமில்லை
வாப்பிட்டுத் திரிந்தாக்கால் லாபமென்ன
வகையறிந்த பேருக்கு வடிவந்தங்கும்
சாப்பிட்டு நன்றாகத் திரிபவர்க்குச்
சரியான வாதம்வரத் தாட்சிதானே. (535)

தாட்சிதான் வாராமல் வாதம்வந்தோர்
தான்போசார் பொறுமையா யிருந்துகொள்வார்
வாட்சியாய்ப் பதறுமற் செய்துபார்ப்பார்
வடிவான நூல்களையே விரும்பிப்பார்த்துக்
காட்சியாய்க் கலக்கமற்று படித்துக்கொள்வார்
கைபாக வரிசையாய்ச் செய்துகொள்வார்
வாட்சியாய் மனந்தன்னிற் சாத்திரத்தை
வடிவாகப் படிப்பார்கள் வழக்கத்தோரே. (536)

வழக்கந்தா னல்வேதம் பூண்டுகொண்ட
வடிவான யெங்களுட சாதிதன்னிற்
கலக்கமாய்ப் போச்சுதென்று சொல்லிச்சொல்லிக்
கனிவாகப் புலம்பியே வாதயிச்சை
தழக்கமாய்ப் பட்டுமே கரியைச்சுட்டுத்
தாட்டிகமாய் வீண்பாடு பட்டேனென்பார்
உழப்பான சாத்திரத்தி லுழைப்பிலாதார்
உறுதிபெறப் பிச்சைதான் வாங்கநன்றே. (537)

நன்றாகச் சவ்க்காரச் சுண்ணஞ்சொன்னேன்
நானிலத்தில் கைபாக வரிசைசொன்னன்
கன்றாகக் களங்கினுட பாகஞ்சொன்னேன்
கனிவான துருசுச்செந் தூரஞ்சொன்னேன்
பன்றாக வெடியுப்புச் செய்யுமார்க்கம்
பதிவாக கைபாக வரிசைசொன்னேன்
வன்றாகப் புதையலெல்லாம் வெளியாய்த்தோணும்
வடிவான படிப்பாளி வகையுமாமே. (538)

வகையாகக் களங்குதனில் செம்பெடுக்க
வண்மையாய்ப் பாகமது கொஞ்சந்தானும்
துகையாகச் சொல்லிவிட்டேன் அதனைத்தானும்
சுண்ணமென்ற காண்டத்திற் றொடர்புசொல்வேன்
பகையாகப் பார்க்காதே மறைத்தபாசம்
பதிவாக உலகத்தில் எல்லோர்தானும்
முகையாகச் செய்திடுவா ரென்றுசொல்ல
முனையான வென்னூலை யெல்லாம்பாரே. (539)

பார்த்துமே யெல்லா நூல் தன்னைப்பார்த்துப்
பதிவாக யெல்லாமும் ஒன்றாய்சேர்த்துக்
காத்துமே கைபாக வரிசையோடே
காட்டுவேன் கடைசிதனிற் கண்டுபாரு
கூத்துவனு யெண்ணாதே புத்திதன்னைக்
குடிலமாய் விசாரித்துப் பார்த்துத்தேர்ந்து
நேர்த்தியாய்ச் செய்துவிட்டாற் பலனுமாகும்
நிலவறமுந் தப்பினு மில்லைதானே. (540)

துருசுக்குப் புருஷன்.

இல்லையென்று யெண்ணாதே துருசுதானும்
இதமான பெண்ணாகும் பெண்ணுக்குத்தான்
நல்லாகப் புருஷனவன் ரெண்டுபேரு
நான்சொல்வேன் முதற்புருஷன் அயமுமாகும்
கொல்லவே ரெண்டுபேர் சேர்ந்தபோது
குணமாகக் கெந்தியது ரெண்டுபேர்க்கும்
வல்லமையாய் ஆத்தாளாம் மூன்றுஞ்சேர்த்து
வகையாகப் பழச்சாறு விட்டுஆட்டே. (541)

ஆட்டியே புடம்போட்டு உருகும்போது
அடைவான சத்தாகுஞ் சேர்ந்துகொண்டு
வாட்டியே யிருக்குமது துருசுச்செம்பு
வகையான பொன்போலே உள்ளேதானே
தாட்டியே இருந்திடுமே மூன்றுஞ்சேர்ந்து
துணையாக ஆணுகப் போச்சுதானும்
பாட்டியே ஆணுக்கு ஆணுசத்துரு
பதிவாகக் கொடியோனும் ஆணுமாமே. (542)

ஆமேதான் ஆணைத்தான் சேருபாதி
அடைவாகப் பழச்சாறு யிதுக்குஅப்பன்
நாமேதான் சொல்லிவிட்டோம் சேர்த்தரைத்து
நலமாக வில்லைதட்டிக் கதிரில்வைத்துப்
பூமேவும் அகலிலிட்டுப் புடத்தைப்போடப்
புகலர்கப் பிரிக்குமே செம்பைத்தானும்
வாமேதான் பிரிந்திருந்த செம்பெடுக்க
வகையான புருஷனைத்தான் வண்மைகேளே. ()

வங்க நீர்.

வண்மையாய்ப் புருஷனவன் சேர்ந்தபோது
வகையான கருத்தரித்து உருவுமாச்சு
உண்மையா யிதுபோல வங்கந்தானும்
உறுதிபெறக் காரீயம் பலமும்பத்து
தண்மையாய்க் கற்றூளம் பாலிற்றூனும்
தடையறவே உருக்கியே சாய்த்துநீயும்
கண்மையாய் யேழுதாஞ் சாய்த்தபின்பு
கருத்தாகத் தகடுதட்டிக் கனிவாய்க்கேளே. (544)

கனிவாகக் கல்வத்தி லிட்டுநீயும்
கருதியே பழச்சாறு விட்டரைத்து
வனிவாக நாளெட்டு அரைத்துஊற
வகையாக நாளேழு சொல்லக்கேளு
சனியாகப் பழச்சாறு தளரவிட்டுச்
சாரித்து மேற்றெளிவை யிறுத்துநீயும்
கனிவாக முன்போட்ட சத்துதன்னில்
காரியமாய்க் கல்மிட்டு அரைத்துக்கொள்ளே. (545)

அரைத்துமே யிருசாமஞ் சென்றபின்பு
அடைவாக வில்லைதட்டிக் கதிரில்வைத்து
பரைத்துமே புடம்போட்டுப் பின்பு நீயும்
பாகமாய்க் கல்வமிட்டு வங்கநீரால்
அரைத்துமே யிருசாமம் வில்லைதட்டி
அடைவாக முன்போலே புடமுமிட்டால்
கரைத்துமே யெடுத்துப்பார் களங்குபோலாம்
கனிவாகச் செத்தசெம்பை யிழுக்குந்தானே. (546)

இழுக்குமே வங்கநீர் சென்றுபுக்கி
இதமான செம்புதான் சிக்கிப்போகும்
அழுத்தமாய்ப் பிடித்துமே புக்கபோகாமல்
அடைவாக உருகியது யிருக்கும்பாரு
கழுத்துமே யிதையெடுத்து வைத்துக்கொண்டு
காரணமாய் வெள்ளியெட்டில் மூன்றுசேர்த்து
பழுக்கவே கொடுத்தூதிப் பார்க்கும்போது
பதிவான மாத்தேழு காணுந்தானே. (547)

காணுமே யிதினோடே தங்கத்தாயைக்
காரணமா யிடைசேர்த்து உருக்கிப்பாரு
வீணிலே போகாது மாத்துப்பத்தாம்
விரும்பியே யிதைவிற்றுச் செலவுசெய்து
தாணுவாய் நபிமாரைப் பணிந்துபோற்றி
தருகாவி லேகியே தொழுது நீயும்
பாணுவாய்ப் புத்தியாய்ப் பிழைத்துக்கொள்ளு
பதிவான யாகோபு பலன்சொன்னாரே. (548)

சொன்னதொரு வங்கமில்லாச் செம்புவெல்லாம்
சுகமாக உருகையிலே ஓடிப்போகும்
கன்னதொரு தாயில்லாப் பிள்ளைபோலே
கனிந்துமே அழுதுமே புலம்புவார்கள்
இன்னிலத்தில் வங்கமல்லோ சேர்ந்தபோது
இனிதான பொன்னுச்சு இயற்கையாகும்
முன்னமே சொல்லிவிட்டேன் மூந்நூர்தன்னில்
முடியமட்டுஞ் சோதித்து முடிவுபாரே. (549)

முடிவான சத்துக்கு அயமும்வேணும்
முனையான களங்கிலுள்ள செம்பெடுக்க
குடியுள்ள காரீயம் நீர்கள்வேண்டும்
குணமாகச் செம்புதான் வருகும்பாரு
படியான நூலறியா அசட்டுவாதி
பதிகாணார் புலம்பியே மாழுவார்கள்
செடிதனையே பிடிங்கியே சார்பிழிந்து
திடமாகத் திரிவார்கள் உலகத்தோரே. (550)

உலகத்தில் வாதந்தான் பொய்யாமென்று
உற்றுணர்ந்து அறியாத மூடர்சொல்வார்
பலகற்றும் பலனில்லை முறட்டுவாதி
பழிப்பார்கள் அவர்முகத்தில் காரித்துப்பு
நிலைபெற்றால் நீடூழி வாழலாகும்
நிலையில்லார் ஒருபோதும் வாழமாட்டார்
சிலைபோலே நிற்பார்கள் முறட்டுவாதி
செழிப்பில்லை வங்கத்தை அறியார்தானே. (551)

வங்கந்தான் களங்குக்கு ஆதி ஆதி
வடிவான சத்துக்கு ஆதிதானும்
சிங்கந்தா னிரும்பாகுஞ் சேர்க்கமுத்தி
திறமான சிங்கத்தை யறியாமூடர்
பங்கமாய்ச் சொல்லிடுவார் பரிட்சைகேட்பார்
பாபத்துக் கிடமாகச் சொல்லிச்சொல்லி
எங்களைத்தான் சொல்லியே வைவார்மூடர்
ஏற்றமா யுலகத்தில் வாதிதானே. (552)

தானென்ற உலகத்தில் வாதிமார்கள்
தருதுரும்பாய்ச் சுட்டுமே கெட்டுத்தானும்
வானென்ற பொருளறியா மார்க்கத்தாலே
வடிவுபெற ரசவாத மில்லையென்று
கானென்ற உலகத்தில் சொல்லிச்சொல்லி
கனியாத பழம்போலே கெட்டுத்தேர்ந்து
ஊனென்ற வழிபாடாய்த் திரியாமற்றான்
உலுத்தனவன் செய்வதிந்த முறையுமாமே. (553)

முறையாகச் சகலநூல் சித்தியாக
முதன்மையாய்ப் படித்துணர்ந்து கவலைகொண்டு
வறையறவாய்ப் புத்தியிலே நினைவுபூண்டு
வடிவான செயலறிந்து வண்மைபேசிச்
சிறைபோலே வெகுநாளாய்க் காத்திருந்து
செயம்பெறவே வாதிகையி லடுத்து நீயும்
பறையாகச் செய்துவிட்டால் பலனுமாகும்
பகுத்துணர்ந்து சித்திபெறச் செய்திடாயே. (554)

சாரச் சுண்ணம்.

செய்திடவே யின்னமொரு சாரந்தன்னை
    செயமான சுண்ணமதாய்ச் செய்யத்தானும்
பைதிடவே சாரமது பலமும்பத்து
    பதிவான சீனமது பலமும்ரெண்டு
கைதிடவே யோரலென்ற கிளிஞ்சிதானும்
    கருவாகப் பலம்ரெண்டு திருத்துக்கொண்டு
வைதிடவே கல்வத்தி லிதனையிட்டு
    வடிவாக அரைத்துவில்லை காயவையே. (555)

காயவைத்துப் பத்தெருவில் புடத்தையிட்டால்
    கனிவாகக் கடுஞ்சுண்ணச் சாரமாகும்
மாயவைத்த சுண்ணமிடை சாரஞ்சேர்த்து
    மத்திச்சுப் பனியில்வைக்கச் செயநீராகும்
நாயமார் சொன்னபடி வீரமிட்டு
    நயமாகச் செயநீரை வடித்து நீயும்
தாயகமாய்த் தாளகமும் பலமுப்பத்து
    தாட்டிகமாய்ச் சுண்ணையில் சுத்திசெய்யே. (556)

சுத்திசெய்து சாரத்தின் செயநீராலே
    சுருக்கிட்டு ஒருசாமஞ் சென்றபின்பு
பத்தியா யெடுத்துமே சொல்லக்கேளு
    பதிவான அண்டோட்டைப் பதியலூது
சித்திபெறத் தாளகத்தின் மேலேகட்டி
    சிறப்பாகப் பத்தெருவில் புடமுமிட்டு
நத்தியே யெடுத்துப்பார் கரியாய்நிற்கும்
    நலமாகச் சொல்லுகிறே னாட்டங்கேளே. (557)

நாட்டமென்ன சொல்லுகிறேன் தாளகத்தில்
    நலமான யீயமது நல்லதாகும்
கூட்டமுடன் சொல்லாதே குருசுநேராய்
    குணமாக யிதுரெண்டுங் கல்வமிட்டுத்
தாட்டிகமாய்ச் சாரத்தின் செயநீராலே
    தாக்கிட்டு அரைத்திடுவாய் நாலுசாமம்
போட்டியாய்ப் பண்ணாதே அரைத்துவில்லை
    பேருக்கோடே புடம்போட்டு யெடுத்துக்கொள்ளே.

எடுத்துமே இப்படிக்கு ஐந்துதேரம்
இதமாகப் போட்டுயெடு குருவுமாகும்
அடுத்துமே வெள்ளியெட்டு மூன்றுஞ்சேர்த்து
அதையுருக்கி அகலில்வைத்து ஊதிப்பாரு
தடுத்துமே மதிசிவக்கும் மதியினூடே
தடையறவே தங்கமது யிடையேசேரு
கடுத்துமே சேர்த்துநீ புடமூமிட்டால்
கனிவாகத் தாய்போலே இருக்கும்பாரே. (559)

இருக்குமே இதைவிற்றுச் செலவுசெய்து
இதமாக இதினடுத்த பெரியவேலை
நருக்காகத் தெரிந்துகொள்ள வேணுமிப்போ
நலமான பொருளறிந்தால் பொருளேயாகும்
பருக்குமே பொருளறியா மூடர்தானும்
பக்குவமாய் நினையார்கள் மூடரப்பா
இருக்குதென்று நாய்போலே தேங்காய்தன்னை
இதமாக உருட்டுவார் உடையார்தானே. (460)

உடையாமல் நபிமாரைத் தொழுதுபோற்றி
உலகத்தி லிருக்கமட்டும் வாதஞ்செய்து
அடைவாக விற்றுமே செலவுசெய்து
ஆதியோ டந்தவரை பார்த்துத்தேரு
கடையாகப் பார்த்துமே விற்றுநீயும்
கனிவாகப் பொருளெல்லாங் கண்டுதேரு
மூடையாகச் சொல்லாதே மேன்மையாகும்
முத்திக்கு வித்தாக மூதலைத்தேடே. (561)

தேடவே சீவனத்துக் கிடமேயானல்
திடமாகச் சத்துயெடு செம்புபண்ணு
ஆடவே மதிதனிலே விட்டுநீயும்
அடைவாகச் செலவுரெம்பச் செய்துகொண்டு
காடவே சுண்ணமென்ற காண்டத்தன்னைக்
கனிவாக அறுநூறுங் கருவாய்ப்பாரு
நாடவே சகலமுந்தான் சித்தியாகும்
நாதாந்த யோகம்வரும் நன்மையாமே. (562)

நண்மையாய்க் கருவறியா முறட்டுவாதி
நலமான சாத்திரங்கள் பொய்யேயென்பார்
தன்மையாய்ப் பொய்யென்று சொன்னவாதி
சண்டாளன் அவனுக்கு நூல்கொடாதே
இன்மையாய் நரகம்உண்டு யினமதாக
இதமாக மூவேழு வங்கிசத்தில்
தன்னகரில் அலைந்துமே கெட்டுப்போவார்
தாட்டிகமா யாகோபு சொன்னவாரே. (563)

வாரேது யென்றுக்கால் சொல்லக்கேளு
வடிவான சவுக்கார முன்னேவைத்து
காரேது வங்கத்தைச் சுண்ணம்பண்ணிக்
கடுமையா யதின்பின்னே துருசைநீற்று
பாரேது அதன்பின்னே சூதங்கட்டு
பதிவாக ரசவாதம் செய்து நீயும்
ஊரேது ஊருதனில் விற்று நீயும்
உறுதிசொன்ன யாகோபு உண்மைதானே. (564)

சொன்னதொரு நூலில்லா வாதம்பார்த்தால்
துணையாகப் பலனில்லை விழலாய்ப்போகும்
கன்னதொரு விழலென்றால் வீட்டுக்காகும்
கனிவாக மடையரப்பா ஒன்றுக்காகார்
தன்னகரில் நினைவுதனில் நினைத்து நீயும்
தாட்டிகமாய்ப் புத்தியிலே கண்டுகொள்ளு
இன்னிலத்தில் ரசவாதம் யேவலாகும்
இருந்துரைத்தார் யாகோபு யிதமதாமே. (565)

இதமாகப் பொய்சொல்லும் வாதிக்குத்தான்
இன்பமாய் ரசவாதப் பலனுமில்லை
அதமாக வங்கிசங்க ளெல்லாம்பாழாம்
அடுத்தவரைக் கெடநினைத்தால் அலைச்சல்மெத்த
பதமாகக் கொடுப்போரைத் தடுத்தபேரைப்
பதிவான அல்லாவுங் கெடநினைப்பார்
சதமாகப் புத்திநான் சொன்னேன்பாரு
தாட்டிகமா யாகோபு திடஞ்சொன்னாரே. (566)

திடமாக மகமதுவின் மார்க்கத்தோர்கள்
திட்டமாய் வேதம்து ஒன்றிருக்க
அடவாக அல்லாவும் ஒன்றிருக்க
ஆண்மையாய் மகமதுவும் அறிந்திருக்க
படமாகப் பேர்ரெம்பச் சொல்லிச்சொல்லிப்
பார்தனிலே நினைத்தபடி கும்பிட்டேத்தி
வடமான கயர்போலே கட்டுவார்கள்
வடிவான படிப்பில்லார் சொல்லுவாரே. (567)

சொல்லுவார் நால்வேதம் உயர்த்திகேளு
சுகயான் மகமதுவின் மார்க்கமெத்த
நல்லுவார் சத்தியமா மார்க்கந்தானும்
நலமான தாயதனைப் பூசிப்பார்கள்
வெல்லுவார் ஆண்டவனை மூன்றுபோது
மேதினியில் தொழுவார்கள் மொழிகள்மெத்த
கல்லுமே யெரிந்தாலோ பூமிவீழா
கனிவான வேதமது கணக்குத்தானே. (568)

துருசு நீறு.

கணக்காக யின்னமொரு துருசுச்சுண்ணம்
கைகண்ட வித்தையிது கருவாய்ச்சொல்வேன்
தணக்கமாய்த் துருசதுவும் பலமும்பத்து
தடையறவே வங்கமது பலமும்பத்து
குணக்கமாய் வெடியுப்புப் பலமும்பத்து
குணமாகக் கல்வமிட்டு அன்னத்தாலே
துவக்கமா யரைத்துவில்லை காயவைத்துத்
துடியாக அகலிலிட்டுப் புடத்தைப்போடே. (569)

போடவே யெடுத்துப்பார் கருப்பாய்நிற்கும்
பொருந்தவே மஞ்சளதில் போட்டுத்திரு
ஆடவே ரெத்தம்போல் சிவந்துபோகும்
அடைவாகத் துருசதுவும் சுண்ணமாகும்
நாடவே யிச்சுண்ணத் துறைகள்தோறும்
நலமாக யெடுத்துமே போட்டுத்தானும்
காடவே சகலசரக் கெல்லாங்கட்டும்
கைகண்ட வித்தையிது கருவாய்ப்பாரே. (570)

கருவாக யிச்சுண்ணந் தன்னில்தானும்
காரணமாய்ச் சாரமதை யிடையேசேர்த்து
உருவாக அரைத்துமெள்ளப் பனியில்வைக்க
உறுதியாய்ச் செயநீராம் உண்மைதானும்
திருவாகச் சரக்கெல்லா மிதிலேசாகும்
திடமாகக் கட்டுகிற வரிசைகேளு
பரிவாக லிங்கமது பலமுமொன்று
பத்தியாய் முலைப்பாலில் சுருக்குப்போடே. (571)

போட்டுமே அதன்பின்பு சொல்லக்கேளு
புகழாகத் துருசினுட செயநீர்தன்னைக்
காட்டுமே யிருசாமஞ் சுருக்குப்போடக்
கைகண்ட லிங்கமது மெழுகுமாகும்
நாட்டுமே நவலோகந் தன்னிலீய
நலமாக மாத்தகதுதான் பத்துமாகும்
கூட்டுமே யிதுவெழிதிற் செய்யலாகும்
குணமாக யிதன்பெருமை கூறினேனே. (572)

கூறினேன் இன்னமொரு பாகந்தன்னைக்
குணமாகச் சொல்லுகிறேன் குறியதாக
வேறுவினை யில்லாமல் தாளகத்தை
விதமாகச் சுத்திசெய்து சொல்லக்கேளு
காறுமே கரியோட்டில் வைத்துநீயும்
கனிவாகச் சாமமது ரெண்டுதானும்
பாறுமே யெடுத்திடவே மெழுகதாகும்
பாதையிது வெகுபோக்குப் பரிவுதானே. (573)

தானென்ற செம்புருக்கி நூற்றுக்கொன்று
தடையறவே கொடுத்திடவே தன்மையாக
தானென்ற பத்தரைதான் ஆணிக்கொக்கும்
நலமான உப்புக்குங் காவிக்கப்பா
கானென்று இறங்கிவிடுந் தங்கந்தானும்
கனிவாக யெடுத்துமே விற்றுநீயும்
கோனென்று செலவுசெய்து பின்புநீயும்
கொடிதான சுண்ணமது செய்திடாயே. (574)

செய்திடவே ரெம்பவது பலனுமாகும்
சிறப்பாக உழைத்துரெம்பத் திறமைபார்த்துக்
கைதிடவே கைபாக வரிசைதன்னைக்
கணக்காகக் கண்டுகொள்ளப் பலனுமாகும்
மெய்திடவே யேருழுதால் பலனுமாகும்
மேதியினில் வாதமது ஏவல்கேட்கும்
நைதிடவே திரியாதே வாதமார்க்கம்
நாடாளச் செய்திடவே பலனுமாமே. (575)

ஆமேதான் முன்சொன்ன துருசுச்சுண்ணம்
அறுபத்து நால்சரக்கை இருக்கிக்கட்டிக்
காமேதான் வேதைமுகந் தெரியபபாரு
கனிவான ஞானமுதல் கண்டுதேரு
வாமேதான் கண்டபின்பு ஒருவரோடே
வடிவாகச் சொல்லாதே வழக்கங்கெட்டு
நாமேதான் பாகமது வரிசைகண்டால்
நாடாண்ட யாகோபு நலஞ்சொன்னுரே. (576)

நலமாக ஏருழுது பரம்படித்து
நாடியே பயிர்செய்தால் விளைவுமாகும்
அலமாக உழுகாமல் போனதாலே
அதுவிளையு மாசொல்லு பயிருமில்லை
கலனுகச் செய்தாக்கால் வாதந்தன்னைக்
கையிலே அகப்பட்ட கருத்துமொக்கும்
பெலமாகச் செய்யாட்டால் வாதமேது
பிறட்டாகும் வாதிமார் சொல்லுத்தானே. (577)

சொல்லேது யென்றுக்கால் சொல்லக்கேளு
சுகமாக விடியுகிற போதுதானும்
நல்லவே வாங்குதான் சொல்லுவார்கள்
நலமான வாங்குதான் செவியிற்கேட்டால்
கல்லேது ஆண்டவனைத் துதித்துப்போற்றிக்
கனிவான சொல்லாகும் கருணைமெத்த
வல்லேது பொருளேது அலிமாவேது
வடிவான பொருளறிந்தால் மார்க்கமாமே. (578)

மார்க்கமாய்ப் பிசுமில்லா வென்றநாமம்
மயமான ஆண்டவர்க்கு ஒப்புமொப்பும்
கார்க்கமாய் ரகுமானீ னென்றநாமம்
கனிவான பொருள்மெத்தக் கனிந்தபேச்சு
ஏர்க்கவே இதிலிருந்து பிறந்தபேச்சு
இதமாகக் கவர்கோடி யீமான்கோடி
தார்க்கவே இப்படிக்கு ஓதினுக்கால்
தப்பாமல் நீடூழி வாழலாமே. (579)

வாழவே தனையறிந்து யீமானைத்தான்
வடிவாகக் கண்டுகொள்ளப் பொருளைக்கேளு
தாழவே செய்யார்கள் அல்லாதானும்
தாட்டிகமாய் வாதவித்தை தானுஞ்சொல்வார்
மாழவே விடமாட்டார் சொல்லிவிப்பார்
மதிபெருகச் சீவகளை தானுமீவார்
வாழவே செய்துவைப்பார் சித்தியாகும்
வடிவான பொருளறிந்த மார்க்கமாமே. (580)

நூல் விபரம்.

மார்க்கமாய் வயித்தியத்தை முன்னேசொன்னேன்
மயமாக அதன்பின்னே களங்குசொன்னேன்
ஆர்க்கவே அதிலெடுக்கும் வகையுஞ்சொன்னேன்
அடைவான பாகமுதல் வரிசைகண்டு
ஏர்க்கவே உலகத்தின் செய்கைகண்டு
இதமான பொருளறிந்து இயற்கைபார்த்து
கார்க்கவே குருமாரை வருஷம்யெட்டு
கருதியே பார்த்தாலே பலனுமாமே. (581)

பலனாக அயச்செம்பை முன்னேபார்த்துப்
பதிவாக அதன்பின்னே சுண்ணப்பாரு
பிலனாக அதன்பின்னே நூலைப்பார்த்துப்
பிசகாம லதின்பின்னே பெருமைகண்டு
வலனாக அதன்பின்னே வலுமைகண்டு
வாதியுட பரிட்சைதான் கண்டுதேறி
அலனாகப் பின்செய்தால் சுண்ணந்தன்னை
அடைவாகப் பலனாகும் ஆண்மைதானே. (582)

ஆண்மையாய் முப்பூவின் பொருளைத்தானும்
அடைவாக அறியாத வாதிமார்கள்
தாண்மையாய்க் கடைகெட்ட வாதிபோலே
தனித்துமே நான்செய்வே னென்றுசொல்லி
காண்மையாய்ப் பேராசைப் பட்டுப்பட்டுக்
காரணமாய்ச் சாத்திரத்தி லில்லையென்று
வாண்மையாய்ச் சொல்லியே புலம்பியேங்கி
வடிவான விதியறியார் மார்க்கந்தானே. (583)

தானென்ற உலகத்தில் வாதம்பொய்யோ
தடையில்லா நபிமார்கள் வேதம்பொய்யோ
கானென்ற அட்டகர்ம வித்தைபொய்யோ
கனிவான ஆண்டவனார் செய்கைபொய்யோ
நானென்ற சாத்திரங்கள் தானும்பொய்யோ
நலமான நபிமார்கள் பொய்யுமானால்
மானென்ற வாதவித்தை பொய்யுமாகும்
மதியறிந்தால் வாதமுண்டு மார்க்கமாமே. (584)

மார்க்கமா யிப்படிக்குச் செய்யாப்பேர்க்கு
வடிவான பலனதுவு மில்லையில்லை
ஏர்க்கவே சொன்னதுபோல் செய்யாமூடர்
இதமான பொருளறியார் இழுக்குச்சொல்வார்
கார்க்கவே முன்னேதான் கவலைதன்னைக்
கனிவாக நினைக்காத மூடர்தானும்
தார்க்கவே சொல்லியே புலப்புவார்கள்
தடையறவே புலம்பாத மார்க்கந்தானே. (585)

தானென்ற நூல்பார்த்தோன் உலகவாதி
தவித்துமே மனம்புண்ணாய் வறுமைசொல்லி
ஊனென்ற சோற்றுக்கு இடமேயில்லை
உறுதியில்லை யென்றுமே மனம்வேருகி
நானென்ற ஆணுவத்தால் கெட்டோமென்று
நாய்போலே குலைத்துமே வாதமில்லை
மானென்று சொல்லியே யிப்படிக்கு
மதிமயங்கித் திரிவார்கள் வாதிமாரே. (586)

வாதிமார் நிசவேலை செய்யும்பேர்கள்
வடிவான சாத்திரத்தின் வகையைக்கண்டு
சோதிபெறச் சொல்லியே நினைவிற்பூண்டு
சுருதிகளை யாறுதிர மறிந்துதானும்
நீதிபெறப் பாகமாய்ச் செய்துகொண்டு
நிலவாத்தைக் கண்டறிவார் நேராய்த்தானும்
பீதியே மதிதனிலே வேலைசெய்வார்
பிறட்டாக இருக்காது பிசகாவாறே. (587)

வாறேது யென்றுக்கால் சொல்லக்கேளு
வடிவான பொன்னெல்லாம் சத்திநாலே
தாறேது சவுக்காரச் செயநீராலே
தாட்டிகமாய் வெடியுப்புச் செயநீராலே
ஊறேது கைபாக வரிசையாலே
உறுதிமிக நின்றதந்த மார்க்கத்தாலே
கூறேது வித்துநின்ற விளைவினாலே
கொடுமூடர் அறியார்கள் குரூரமாமே. (588)

குரூரமா யிப்படிக்குச் சொல்லிச் சொல்லிக்
குணக்கேடு சொல்லியே புலம்பியேங்கி
வருவாரும் போவாரும் அவர்களோடே
வார்த்தைகளைப் பேசியே வழக்கத்தாலே
நருவாகச் சொல்லியே புலம்புவார்கள்
நலமாகத் தெரியாதார் நேர்த்தியென்பார்
திருவாக இந்நூலைச் சேர்த்துப்பார்த்தால்
செகதலத்தில் நீவாதி தேர்ந்துபாரே. (589)

தேர்ந்துமே கைப்பொருளா மூப்பூச்சுண்ணம்
திடமான மெய்ப்பொருளாங் களங்குதானும்
வார்ந்துமே சமயப்பொருள் நபிமாரெல்லாம்
வடிவான மெய்ப்பொருளாம் அல்லாதானும்
கூர்ந்துமே மெய்ப்பொருளாம் மகமதுவுந்தானும்
குறியான மெய்ப்பொருளாம் அல்லாதானும்
ஆர்ந்துமே மெய்ப்பொருளாம் அல்லாதானும்
ஆதியா மெய்ப்பொருளாம் அல்லாதானே. (590)

நன்கடக்கை.

அல்லாவை முப்போதுந் தொழுதிறைஞ்ச
அறிவாகப் பலனுண்டு அறிந்துநீயும்
எல்லாமும் படைத்தவரைத் துதித்துப்போற்று
ஏழைமதி போகாம லியல்புகாட்டிச்
சொல்லாலே நினைத்துமே கோழிதன்னைச்
சுகமாக அறுப்பவர்க்குப் பாவமாகும்
கொல்லாமல் எல்லாமும் படைத்தஅல்லா
குணமதனை உயிர்போக்கக் கொடுமையாமே. (591)

கொடுமையாய்த் தம்முயிர்போ லெவ்வுயிர்க்கும்
கொண்டாட்ட மில்லார்க்குக் குறைச்சலுண்டு
அடுமையாய்க் காத்தோர்க்கு இடுக்கஞ்செய்ய
ஆண்மையாய்ச் செய்திடிலோ நரகமுண்டு
படுபாடா யாட்டைத்தா னறுப்பவர்க்குப்
பலனில்லை யேமமென்ற பொருளுமில்லை
இடுகொட்டில் காத்திருந்த பிணமும்போல
இருந்தேங்கி மாண்டுமே திரிவார்பாரே. (592)

தானென்ற யெழுநூறு முன்னேபார்த்துத்
தாட்டிகமாய் வயித்தியங்கள் மிகவுஞ்செய்து
ஊனென்ற சோற்றுக்கு யிடத்தைப்பண்ணி
ஒழுங்காக அதன்பின்னே மூன்னூர்ரெண்டும்
வானென்று பார்த்துமே களங்குசெய்து
வடிவாக ஐம்பத்து ஐந்தும்பார்த்து
கானென்ற செம்புதான் பிரித்தெடுக்கும்
கைபாக மறிந்துமே தேறுவாயே. (593)

தேறுவாய் செம்பெடுத்து மதியில்தாக்கித்
இடமாக விற்றுமே செலவுசெய்து
ஆறுவாய் வீடுமனை பெண்டீர்மக்கள்
அடைவாக வீட்டுக்குச் செல்லுமானம்
பாறுவாய் கொடுத்துமே செலவுசெய்து
பக்குவமா யதின்பின்னே சொல்லக்கேளு
ஊறுவா யுண்டுடுத்திப் பின்பு நீயும்
உறுதிபெற அதின்பின்னே சொல்லக்கேளே. ()

சொல்லவே அதின்பின்னே செந்தூரத்தைச்
சுகமாகச் செய்திட்டுப் பின்பு நீயும்
வெல்லவே நவலோகந் தன்னிலிட்டு
விருப்பமாய் விற்றுமே செலவுசெய்து
பல்லவே பள்ளிதான் வாசல்கட்டிப்
பதிவான தைக்காலைப் பதியவாங்கி
நல்லவே கந்தரிதா னாக்கி நீயும்
நலமாகக் கொடுத்திடவே பலனுமாமே. (595)

பலனாகச் சவுக்காரச் சுண்ணஞ்செய்தால்
பதிவான வெடியுப்புச் சுண்ணஞ்செய்து
அலனாகச் செயநீரா யாக்கிக்கொண்டு
அடைவான சவுக்காரந் தன்னையாட்டி
கலனாகப் புடம்போடச் சுண்ணமாகும்
கடுங்காரச் சுண்ணமாம் வீரமிட்டு
பிலனாகத் துருசின்மே லப்பி நீயும்
பிரபலமாய்ப் புடம்போட நீறுமாமே. (596)

நீறான துருசினுட நீறுதன்னை
நேராகப் பணவிடைதான் விராலிக்கிட்டு
வாராகப் பிழிந்துமே சூதமிட்டு
வகையாகக் காய்ச்சிடவே சூதங்கட்டும்
நேராக யிச்சூதங் கரியில்நின்று
நிகராக உருகுமப்போ தங்கஞ்சேர்த்துப்
பாராகச் செந்தூரம் பண்ணி நீயும்
பதிவாக நவலோகந் தன்னிலீயே. (597)

ஈயவே நவலோகம் பழுத்துப்போகும்
இதமாக உலகத்தில் விற்று நீயும்
நாயமார் சொன்னபடி அல்லாவுக்கு
நலமான பள்ளிதான் வாசல்கட்டிக்
காயவே கந்தரிதான் ஆக்கி நீயும்
கனிவாகக் கொடுத்துமே அப்பாற்கேளு
வாயவே இச்சொத்தை வீட்டிலேதான்
வடிவாக உண்டிடவே வேண்டாந்தள்ளே. (598)

உண்டிட்டால் சித்தியில்லை உலகத்தோரே
உறுதியாய்ச் சொல்லிவிட்டேன் அறுநூர்தன்னில்
கண்டிட்ட படிபோலே செய்துநீயும்
கனிவான பதினாறில் கணக்குக்கண்டு
மூண்டிட்டுச் செய்யாதே கொஞ்சம்செய்து
முக்கியமாய் விற்றுமே செலவுசெய்து
வண்டிட்ட பாவனைபோல் மனதிலெண்ண
மகத்தான சித்தியாம் மருவிப்பாரே. (599)

மருவவே அல்லாவைத் தொழுதுபோற்றி
மகமதுவைத் தொழுதுமே போற்றித்தானும்
உருகவே நபிமாரைத் தொழுதுபோற்றி
உற்றுணர்ந்து வெகுபாடு பட்டுத்தேரு
பருகவே மக்காவின் தேசந்தன்னில்
பதிவாகச் சென்றுமே வேலைகற்றுத்
தருகாவில் சென்றேறிச் சுண்ணக்காண்டம்
தப்பாமல் பாடினே னறுநூறுதானே. (600)

நூல்களின் தொகை.

தானென்று சதுரகிரி தன்னில்முன்னந்
தானிருக்கும் போதுஎன்பேர் இராமதேவர்
நானென்று பேருபெற்று இருக்கும்போது
நாலுமலைச் சித்தர்களுங் கற்பங்கேட்டார்
கோனென்று அவர்களுக்கு மகிழ்வதாகக்
குறிப்புடனே கற்பமாயிரமுஞ் சொன்னேன்
மானென்று அதைக்குறுக்கி முன்னூறுந்தான்
மகிழ்வாகச் சொல்லிவிட்டே னறியத்தானே. (601)

அறியவே அதீதமை நூறுசொன்னேன்
அதைத்தெளிவாய்த் தெரிவதற்கை னூறுசொன்னே
தெரியவே சாலமெண் ணூறுசொன்னேன் [ன்
சிறப்பாகக் குறுக்கிமுந் நூறுசொன்னேன்
பெரியசிவ யோகமிரு நூறுசொன்னேன்
பேரான சூத்திரமுந் நூறுசொன்னேன்
உரியதொரு தண்டகமே நூற்றிப்பத்தும்
உயர்வாகச் சொல்லிவிட்டேன் கருவாய்த்தானே. ()

கருவாகப் பட்சணிதான் நூற்றுப்பத்தும்
கனிவாகக் கேசரியும் நூறுசொன்னேன்
உருவாக வயித்தியமெண் பத்துமூன்றும்
உண்மையுடன் சுத்திமுறை ஐம்பதுந்தான்
திருவாக யோகமைம் பதுவுஞ்சொன்னேன்
சிறப்பாக மூப்பூமுப் பதுவுஞ்சொன்னேன்
தருவாகப் பரிபாசை இருபத்தேழும்
சாற்றினேன் சித்தர்களுஞ் சரியென்றூரே. (603)

சரியென்று சொன்னபின்பு ஞானந்தன்னைச்
சாற்றினேன் பதினுறில் சுருக்கமாகத்
தெரியவே குருசூத்திரம் பதினூறேடு
சீராக ஞானமதைப் பத்திற்சொன்னேன்
உரிமையுட னதைக்குருக்கி ஐந்திற்சொன்னேன்
உற்றிடுபூ சாவிதிதான் பத்திற்சொன்னேன்
பெரியதொரு சாத்திரத்தைக் கோர்வைநூலாய்ப்
பேணியே பார்த்தோர்க்குச் சித்தியாமே. (604)

சித்தியென்ற என்னூலைத் தெரிந்துகொண்டால்
சித்தனென்று சொல்வதற்குத் தடைவேறுண்டோ
பத்தியுடன் நூல்கள்சொல்லி மக்காதேசம்
பரிவாக வந்தவுடன் நபிமாரெல்லாம்
எத்திசையுந் தானறிய யாகோப்பென்று
எனக்குப்பேரிட்டுச்சுண் ணத்துஞ்செய்தார்
புத்தியுட னங்கிருந்து வெகுநூல்சொல்லிப்
புகழாக அறுநூறுஞ் சொன்னேன்முற்றே. (605)

யாகோபு சுண்ணக் காண்டம் 600.

முற்றிற்று.

# சுண்ணக்காண்டம் 600க்கு அட்டவணை.


| விபரம் | பக்கம் |
|---|---|
| ஆட்டு ரத்தவேலை | 102 |
| இந்துப்புச் சுண்ணம் | 10 |
| இந்துப்புச் சுண்ணம் | 15 |
| இரசச் செந்தூரம் | 85 |
| இந்துப்பு வைப்பு | 124 |
| இந்துப்புச் சுண்ணம் | 125 |
| உப்புக்கட்டுச் சாரச்சுண்ணம் | 9 |
| உலங்கவாதிச் செய்கை | 22 |
| உப்புக் கட்டு | 32 |
| உப்புக்குரு | 34 |
| உப்புச் செந்தூரம் | 39 |
| உப்பு மெழுகு | 43 |
| உப்புக் கட்டு | 62 |
| உப்புச் செந்தூரம் | 71 |
| உப்பு மெழுகு | 74 |
| உப்புக் கட்டு | 92 |
| கடுங்காரச் செயநீர் | 6 |
| கல்லுப்புச் சுண்ணம் | 15 |
| கல்லுப்புச் சுண்ணம் | 38 |
| களங்கு வேலை | 79 |
| கல்லுப்பு மேரு | 85 |
| கரியுப்புக் கட்டு | 89 |
| கிளிஞ்சி நீறு | 6 |
| கோடாசூரி வைப்பு | 105 |
| சவுக்காரஞ் செய்ய | 4 |
| சவுக்காரச் சுத்தி | 5 |
| சவுக்காரச் சுண்ணம் | 6 |
| சவுக்கார முறை | 20 |
| சாரச் சுண்ணம் | 15 |
| சாரக் கட்டு | 48 |
| சாரச் சுண்ணம் | 141 |
| சிகப்புச் சாரவைப்பு | 116 |
| சீனச் சுண்ணம் | 14 |
| சீனச் சுண்ணம் | 22 |
| சூதக் கட்டு | 58 |
| சூதக் கட்டு | 120 |
| செய்யுந் தொழில் | 87 |
| தங்கச் சுண்ணம் | 17 |
| தாம்பிரச் சுண்ணம் | 17 |
| தாளகச் சுண்ணம் | 29 |
| தாமிரச் சுண்ணம் | 30 |
| தாளக வேலை | 115 |
| துருசுகெந்திச் சுண்ணம் | 16 |
| துருசு வைப்பு | 120 |
| துருசுக் களங்கு | 121 |
| துருசுச் செந்தூரம் | 128 |
| துருசுக்குப் புருசன் | 137 |
| துருசு நீறு | 144 |
| நபிமார் சொல்லும் நேர்மை | 41 |
| நன்னடக்கை | 150 |
| நாகக் கட்டு | 39 |
| நாகச் செயநீர் | 39 |
| நாகச் செந்தூரம் | 56 |
| நூற் கோர்வை | 60 |
| நூல் தொகுப்பு | 1 |
| நூல்களின் தொகை | 152 |
| நூல் விபரம் | 147 |

| விபரம் | பக்கம் |
|---|---|
| புத்தி கூறுதல் | 41 |
| பூரச் சுண்ணம் | 10 |
| பூரவுப்பு | 11 |
| பொய் வாதி | 81 |
| பொய்க் குருக்கள் | 97 |
| மறைப்பு நாமம் | 19 |
| மக்காதேசப் பொருமை | 96 |
| ரசமணி | 25 |
| ரசக் களங்கு | 26 |
| ரசக்கட்டுச் செந்தூரம் | 27 |
| ரோமத் தைலம் | 129 |
| வழலைச் சுண்ணம் | 22 |
| வழலை விபரம் | 69 |
| வங்கச் சுண்ணம் | 60 |
| வங்க நீர் | 138 |
| வாதி செய்கைகள் | 90 |
| வீரச் சுண்ணம் | 12 |
| வெடியுப்புச் செயநீர் | 12 |
| வெடியுப்புச் சுண்ணம் | 13 |
| வெங்காரச் சுண்ணம் | 16 |
| வெடியுப்புச் சுண்ணம் | 23 |
| வெங்காரக் கட்டு | 58 |
| வெடியுப்புச் செயநீர் | 64 |


அட்டவணை முற்றிற்று.

மலைவள சாத்திர மென்னும்

# மலை வாகடம்.

இந்நூலில் முப்பூவின் மர்மங்களையும், உதகங்களின் விவரங்களையும், மூலிகை, கற்பம், இவைக ளிருக்கு மிடங்களையும், அவைகளை எடுத்து உபயோகிக்கும் மார்க்கங்களையும், வசனரூபமாகச் சொல்லியிருக்கிறது.

இதுவன்றி மலைகளில் ஆங்காங்கு இயற்கையாய்உற்பத்தியா யிருக்கிற பாசாணம், உபரசம், மூலிகை முதலிய பொருள்களையும், சித்தர்கள் வாசஞ் செய்கின்ற ஆச்சிரமங்களையும், அவர்களின் வைப்பு நிதிக ளிருக்கு மிடங்களையும், அவ்விடங்களுக்குப் போகும் மார்க்கங்களையும், நன்கு புலனாகும்படி கூறுவதுடன் அவைகளை எடுக்கும் விபரங்களையும் கூறியுள் இது ஒரு மகத்துவமான நூல்.

கிளேஸ் கடிதம் சுத்தப் பதிப்பு புத்தகம் 1க்கு விலை ரூ 2

உ

பரமபதி துணை.

இராமதேவரென்ற

# யாகோபு திருவாய் மலர்ந்தருளிய

# கோர்வை நூல்களின் விலை விபரம்.

| | | | |
|---|---|---|---|
| வைத்திய சிந்தாமணி 700 ஷை சூஸ்திரம் 50ம் சேர்ந்தது | 2 | 0 | 0 |
| ஷை செந்தூரம் 300 | 1 | 0 | 0 |
| ஷை சூஸ்திரம் 155 அதற்குச்சுருக்கம் 57ம் சேர்ந்தது | 0 | 14 | 0 |
| ஷை சுண்ணக் காண்டம் 600 | 1 | 12 | 0 |
| ஷை சுண்ணம் 300 | 1 | 0 | 0 |
| ஷை சூஸ்திரம் 155ம் அதற்குச் சுருக்கம் 57ம் சேர்ந்தது | 0 | 14 | 0 |
| பஞ்சமித்திரம் 300 | 1 | 0 | 0 |
| ஷை களங்கு 300 | 1 | 4 | 0 |
| ஷை வைத்தியம் 300 | 1 | 0 | 0 |
| ஷை வாதசூஸ்திரம் 400 | 1 | 8 | 0 |
| ஷை தண்டகம் 110ம் வைத்தியசூஸ்திரம் 5ம் | 0 | 14 | 0 |
| இடைபாகம் 10ம் செய்பாகம் 16ம் சேர்ந்தது | 0 | 14 | 0 |
| வைத்தியக் கல்லாடமும் ஷை சாஸ்திரங்களுக்கு உரையும் சேர்ந்தது | 1 | 8 | 0 |
| ஷை சாஸ்திரங்கள் 17ம் சேர்ந்தது ஒரே கட்டடம் யாகோபு கோர்வை கலிக்கோ பயிண்டு | 15 | 0 | 0 |

மேற்கண்ட புஸ்தகங்கள் வேண்டியவர்கள் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதி வி. பி. மூலமாய்ப் பெற்றுக் கொள்ளலாம். கேட்லாக் வேண்டுவோர் எழுதினால் அனுப்பக் கூடும்.

இப்படிக்கு, ஜி. இராமசாமிக் கோன்,

**இ. ராம. குருசாமிக் கோனார் சன்,**

**புத்தக சாலை, புதுமண்டபம், மதுரை.**

உ

பரமபதி துணை.

# யாகோபு முனிவர் இயற்றிய

## 17-சாஸ்திரங்களின் விபரம்.

| | |
|---|---|
| வைத்திய சிந்தாமணி 700 டை குருநூல் 55 சேர்ந்தது. | 2—8—0 |
| சுண்ணக்காண்டம் 600 | 2—8—0 |
| டை சுண்ணம் 300 | 1—0—0 |
| டை சுண்ணசூஸ்திரம் 155 டை சூஸ்திரம் 55 சேர்ந்தது | 0-12—0 |
| லோகச்செந்தூரம் 300 | 0-14—0 |
| செந்தூர சூஸ்திரம் 150 டை சூஸ்திரம் 55 சேர்ந்தது | 0-12—0 |
| வகாரக் களங்கு என்னும் வாத வைத்தியம் 300 | 1—0—0 |
| பஞ்சமித்திரம் 300 | 0-14—0 |
| தண்டகம் 110 டை சூஸ்திரம் 55 டை இடைபாகம் 16 செய்பாகம் 16 சேர்ந் | 0-12—0 |
| வைத்திய வாதசூஸ்திரம் 400 | 1—4—0 |
| வைத்தியம் 300 சாக்கு சுத்தியும் நாடி விபரம் சேர்ந்தது | ?—0— |
| வைத்திய கல்லாடம் 17 சாஸ்திரங்களுக்கும் அரும்பத உரையுடன் | 1—4—0 |

ஆக மொத்தம் 17 சாஸ்திரங்கள். புத்தகம் 12.

மேற்கண்ட சாஸ்திரங்களை பன்னிரண்டு புத்தகங்களாக அச்சிட்டுத் தனித்தனியாகவும் மொத்தமாய் ஒரே கோர்வையாகவும் பைண்டுசெய்திருக்கிறது தேவையுள்ளவர்கள் நேரிலும் வி. பி. தபால் மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம். விலாசம் தெரிவித்தால் கேட்லாக்அனுப்பக்கூடும். இப்படிக்கு,

இ. ராம. குருசாமிக்கோனார் சன்,

ஜி. இராமசாமிக்கோன்

புத்தகசாலை புதுமண்டபம், மதுரை.